27 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416.282.8059
Email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com







நதி 27 பாலம் 09 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் MAY 01, 2017

# ஒன்ராரியோ அரசின் அடிப்படை வருமான உத்தரவாதம்!

ஒன்ராரியோ மாகாண முதல்வர் கத்லீன் வின் ஒன்ராரியோ அரசின் பரீட்சார்த்தமான அடிப்படை வருமான உத்தரவாதம் அளிக்கும் திட்டத்தை (Guaranteed Basic Income) ஏப்பிரல் 24, 2017இல் வெளியிட்டார். இந்த மூன்று வருடகால பரீட்சார்த்தத் திட்டம் ஒன்ராரியோ மாகாணத்தில் உள்ள Hamilton area, Lindsay மற்றும் Thunder Bay பிரதேசங்களில் உள்ள 4,000 குடும்பங்களுக்கு அமல்படுத்தப்பட உள்ளது.

இம்மூன்று பிரதேசங்களில் உள்ள தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்வரும் கிழமைகளில் கோரப்படவுள்ளது. அவற்றில் இருந்து 1,000 பேர் Thunder Bayயிலும், 1,000 பேர் Hamilton area இலும், 2,000 பேர் Lindsayயிலும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இப்பரீட்சார்த்தத் திட்டப்படி அடிப்படை வருமானமாக தனி ஒருவருக்கு $16,989உம், குடும்பத்தினர் இருவருக்கு $24,027 உம் வருடாந்தம் வழங்கப்படும். மாற்றுத்திறனாளியாக ஒருவர் இருந்தால் மேலதிகமாக வருடம் ஒன்றிற்கு $6,000 வழங்கப்படும். இவ்வாறு மூன்று வருடங்கள் வழங்கப்பட்டு தகவல்கள் சேகரிக்கப்பட உள்ளன.

IP GOLDHOUSE 905-554-5890




இம்மூன்றாண்டுகளிலும் சேகரிக்கப்படும் தகவல்களின்படி இத்திட்டம் ஒன்ராரியோ மாகாணம் முழுவதும் அமல்படுத்தப்படும் அல்லது ஒன்ராரியோ அரசால் இத்திட்டம் கைவிடப்படும். இதேபோல் ஒரு திட்டம் இவ்வருட இறுதியில் முதற்குடிமக்கள் வாழும் பிரதேசத்திலும் ஒன்ராரியோ மாகாண அரசால் அமல்படுத்தப்பட உள்ளது.

இப்பரீட்சார்த்தத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள் பின்வரும் தகைமைகளை உடையவர்களாக இருக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் இந்த மூன்று பிரதேசங்களில் ஏதாவது ஒன்றில் கடந்த 12 மாதங்களுக்கு மேல் வாழ்ந்து வருபவராக இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் தனி ஒருவர் ஆனால் அவரின் வருட வருமானம் $34,000 இற்குக் குறைவாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் குடும்பத்தவராக இருந்தால் அவரின் குடும்ப வருட வருமானம் $48,000 இற்குக் குறைவாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஏற்கனவே சமூகநல உதவிப்பணம் பெறுபவராக இருக்கலாம். அவ்வாறான ஒருவர் இத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்படுவாரானால் அவரது சமூகநல உதவிப்பணம் நிறுத்தப்பட்டு, அவருக்கு அடிப்படை வருமானம் வழங்கப்படும்.

இத்திட்டத்தில் தெரிவு செய்யப்படும் ஒருவருக்கு தனியாளானால் $16,989 வழங்கப்படும். அவர் ஏற்கனவே ஒரு வேலையில் வருடாந்தம் $10,000 வருமானம் பெறுபவராக இருந்தால் அவரது வருமானத்தின் அரைப்பங்கு $16,989 இல் இருந்து கழிக்கப்பட்டு வழங்கப்படும். அப்போது அவருக்கு ஒன்ராரியோ அரசின் அடிப்படை வருமானமாக $11,989 ($16,989 - $5,000)

(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)





























Asking Price
$929,000
21 Schmirler Terrace Morningside, Toronto
✓ 2-Car Private Driveway
✓ Morningside / 401
✓ Finished Basement
✓ 2 Kitchens
✓ Central Air
✓ Full Brick
புதிய வீடு வாங்க விற்க
அழையுங்கள்
647-338-5252
Kaja Sivalingam
Sales Representative
skajaruban@gmail.com
www.facebook.com/condohouse.ca
HomeLife/GTA Realty Inc.*
5215 Finch Ave East, #203 Toronto ON. M1S 0C2
* Independently Owned & Operated




$689,000
Brand New, Detached
North of Toronto BR: 4 WR: 3
$359,000
Free Hold Townhouse - Lindsay
7 Years New BR: 3+1 WR: 3
$499,000
Free Hold -Townhouse
Scarborough BR: 3 WR: 3
$549,900
Detached - Bowmanville
3 Years New BR: 3 WR: 3
$525,000
Detached - Ajax
BR: 3 WR: 2
$499,000
Detached - Oshawa,
BR: 2 WR: 2
$599,000
Detached - Brampton,
BR: 3+1 WR: 3 Fin. Basement
Thas....
Solid negotiator...
15 Years of business experience...
Real Estate Investor & advisor...
Sellers: Call me only; if you want top dollar for your house.
Buyers: Not enough down payments? You are Approved; Call me first.
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED
1286 Kennedy Rd. Toronto, Ont.
www.remaxace.com
Not intended to solicit buyers/sellers under contract All properties advertised herein may not be listed by Thas.
Thas Thirunavukkarasu
Sales Representative Dip-in-Eng(Hons)
416-388-4333
thasremax@gmail.com

# ஒன்ராரியோ....

## 01ஆம் பக்கத்தொடர்ச்சி

வருடாந்தமி வழங்கப்படும். இதனால் அவரது வருட வருமானம் $21,989 ($11,989 + $10,000) ஆக இருக்கும். இதனாலேயே தனி ஒரு விண்ணப்பதாரி வருடம் $34,000 இற்குக் குறைவாக உழைப்பவராக இருக்க வேண்டும் என்ற விதிமுறை இத்திட்டத்திற்கு வகுக்கப் பட்டது. இவ்வாறே இத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்படும் குடும்ப வருமானம் பெறுபவரது அடிப்படை வருமானமும் கணக்கிடப்படு கிறது.

இத்திட்டத்தை அமல்படுத்த ஒன்ராரியோ அரசாங்கத்திற்கு வருடம் $50 மில்லியன் செலவாகிறது. இந்தப் பரீட்ச்சார்த்தத் திட்டம் அமல்படுத்தப்படும் மூன்று வருடங்களும் சேர்ந்து மொத்தமாக $150 மில்லியன் செலவாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் ஒன்ராரியோ மாகாணத்தில் வாழும் வேலையில்லாதவர்கள் (Unemployed), மிகக்குறைந்த ஊதியத்தில் வேலை செய்யும் ஏழைமக்கள் (Working Poor), வீடற்ற மக்கள் (Homeless) போன்றவர்களுக்குப் போதிய உணவு, உடை, குடியிருக்க வீடு போன்ற அடிப்படை வசதிகளை வழங்க உருவாக்கப்பட்டது என ஒன்ராரியோ மாகாண முதல்வர் தெரிவித்தார். இவ்வாறான அரசின் அடிப்படை வருமானம் வழங்கும் திட்டம் ஐரோப்பாவில் முதன்முதலில் Finland இல் நாடு முழுவதும் அமல்படுத்தப் பட்டது. தற்போது Netherlands, Kenya, Scotland ஆகிய இடங்களில் இத்திட்டம் பரீட்சார்த்த மாக அமல்படுத்தப்படுகின்றது. இதைவிட பல நாடுகளிலுள்ள சில நகரங்களில் இவ்வாறான அடிப்படை வருமான உத்தரவாதத்திட்டம் அமல்படுத்தப்படுகிறது. கலிபோர்ணியாவில் உள்ள Oakland நகரிலும் இவ்வாறு ஒரு அடிப்படை வருமானத்திட்டம் அமல்படுத்தப்படுகிறது.




கனடாவில் பரீட்சார்த்தமாக மனிற்ரோபா மாகாணத்தில் உள்ள Dauphin நகரில் 1970 இல் இருந்து 1974 வரை இவ்வாறு ஒரு அடிப்படை வருமானத்திட்டம் அமல் படுத்தப்பட்டது. அதை அவதானித்தவர்கள் அத்திட்டம் வெற்றியளித்தது என்று கூறினாலும் போதிய அரசியல் ஆதரவு தொடர்ந்தும்



அத்திட்டத்திற்குக் கிடைக்காதபடியால் அது தொடர்ந்தும் அமல்படுத்தப் படவில்லை.

கனடாவின் P.E.I மாகாணமும் இவ்வாறு ஒரு அடிப்படை வருமானத்திட்டத்தை உருவாக்க பலமுறை முயன்றும் அதற்கு கனேடிய மத்திய அரசின் ஆதரவோ, உதவியோ கிடைக்காதபடியால் அம்மாகாண அரசால் இவ்வாறு ஒரு திட்டத்தை அமல்படுத்தப்பட முடியாமல் போனது.

ஒன்ராரியோ மாகாண அரசு இந்த BI எனப்படும் அடிப்படை வருமானத்தை (Basic Income) $16,989 ஆக எவ்வாறு தெரிவு செய்தது? குறைந்த வருமானம் (Law-Income) அல்லது வறுமைக் கோடு (Poverty Line) எனப்படுவது ஒன்ராரியோ மக்களது சராசரி (Median Income) வருட வருமானத்தின் அரைவாசி அளவு ஆகும். (இது குடும்ப அங்கத்தவரின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாற்றம் செய்து கணிக்கப்படும்.) ஒன்ராரியோ மாகாணத்தின் இந்த வறுமைக் கோட்டு வருமானம் 2016 ஆம் ஆண்டில் $22,653 ஆக இருந்தது. ஒன்ராரியோ அரசாங்கம் இந்த அடிப்படை வருமானத்தின் (BI) அளவை வறுமைக்கோட்டு வருமானத்தின் 75% ஆக வைப்பது என அதாவது $16,989 ஆக வைப்பதென முடிவு செய்தது.

இவ்வாறு ஒரு ‘அடிப்படை வருமானத் திட்டத்தை’ ஒன்ராரியோ மாகாண முதல்வரின் வேண்டுகோளுக்கு ஏற்ப கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக ஆராய்ந்து வெளியிட்டவர் பழமைவாதக்கட்சியின் செனட்டராக இருந்து தற்போது Massey College (Univer-

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...)



# றூஜ் பார்க் கொன்சர்வேட்டிவ் வேட்பாளர் தேர்தலில் விஜய் தணிகாசலம் வெற்றி



ஏப்பிரல் மாதம் 22 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற ஒன்ராறியோ நாடாளுமன்ற ஸ்காபரோ - றூஜ் பார்க் தொகுதிக்கான கொன்சர்வேட்டிவ் கட்சி நியமன வேட்பாளர் தேர்தலில் விஜய் தணிகாசலம் அவர்கள் பெரும்பான்மை யுடன் வெற்றியடைந்துள்ளார்.

விஜய் தணிகாசலம் அவர்கள் இதில் போட்டியிட்ட மிகவும் இளைய வேட்பாளர். இவர் தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமல்ல, கனேடிய இளைய சமூகத்தினர் மத்தி-யிலும் நன்கு அறியப்பட்டவர். 28 வயது நிரம்பிய கனேடிய பட்டதாரியாவர். கனேடிய வங்கி ஒன்றில் நிதித்துறையில் பணிபுரிந்து வருகிறார். சிறு வயதிலிருந்தே கனேடிய சூழலில் கல்வி கற்ற இவர், ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் சிறந்த ஆளுமை பெற்றவர். பல்கலைக்கழகத்தில் படிக்கும் போதிலிருந்தே இளையோர்க ளுக்குத் தலைமை தாங்கி வழிநடத்தி வருவதுடன், தாயக உறவுகள் எதிர் கொள்ளும் பல இன்னல்களைத் தீர்த்து வைக்கும் பல சேவைகளிலும் தன்னை முழு அர்பணிப்புடன் ஈடுபடுத்தி வருபவர்.

நடைபெற்று முடிந்த இந்த கொன்சர்-வேட்டிவ் கட்சியின் வேட்பாளர் தேர்தலில் திரு. சாமி அப்பாத்துரை அவர்களும், திரு. சீயான் சின்னராஜா அவர்களும் இவரை எதிர்த்துப் போட்டியிட்டிருந்தனர்.

# தொழில் வழி உழைப்பவர் வாழியவே!

தேசத்து மக்களைக் காக்கும் பணியினில்
தினமும் உழைப்பவர் வாழியவே - இந்தக்
காசினி மாண்புறப் பொருண்மியம் மலர்ந்திடத்
திருவினைப் படைப்பவர் வாழியவே

மானிடர்க் குணவுப் பொருட்களை வழங்கிடும்
ஏருழு முழவர்கள் வாழியவே - எங்கள்
காணிடை கழனியில் பயிர்வளர்ந் தெழிலுறக்
களிப்புடன் உழைப்பவர் வாழியவே

மண்வளம் தேர்ந்தவன் நற்பயன் நல்கிடும்
மண்ணியல் நிபுணர்கள் வாழியவே - உயர்
விண்ணிடை நீர்வளம் ஆய்ந்ததை உரைத்திடும்
விண்ணியல் அறிஞர்கள் வாழியவே

வளரும் மழலைகட் கறிவினை யூட்டிடும்
அருளுடை ஆசான் வாழியவே - தினம்
சுழலும் உலகினில் மாறிடும் இயற்கையைக்
கற்றுணர்ந் துரைப்பவர் வாழியவே

நோயுற்ற மக்களின் உயிர்களை மீட்டிடும்
நற்பணி மருத்துவர் வாழியவே - தினம்
ஆயுளுக் கிரந்திடும் அபலைகள் துயரினை
அகற்றி மகிழ்பவர் வாழியவே

ஆலைகள் சாலைகள் இயங்கிட இயந்திர
வியல் நெறி யுழைப்பவர் வாழியவே - என்றும்
சோலைக ளமைத்து நற் சாலைகள் பேணிடும்
பணியினுக் குழைப்பவர் வாழியவே

வேத நெறியினி லிறைபணி யாற்றிடும்
உத்தம குருக்களும் வாழியவே - சாதி
பேத மறுத்து நல் லறமும் செழித்திடத்
தீமைகள் தகர்ப்பவர் வாழியவே




- மாரீசன் -



அம்மா
நகை அடைவு மாடம்



AMMA PAWN BROKER
வர்த்தகத்துறையில் நீண்டகால முன்னோடிகளான அம்மா நகைமாடத்தின் சிறப்பு வட்டி விதம்

உங்கள் நகைக்கு கூடிய
பெறுமதியும் குறைந்த வட்டியுடன்
5 நிமிடங்களில் உங்கள் கையில்
பணமும் பாதுகாப்பும் அளிக்கும்
நட்பான சேவையுடன்
கைராசியான நிறுவனம்

2425 Eglinton Ave. E
Scarborough, ON
(சங்கர அன் கோவுக்கு அருகில்)
416-757-0034
416-994-3861
Downtown: 416-921-0034
ammapawnbroker@gmail.com

1.5%
முதல்
2%
$1000ற்கு
மாதம்
$20 மட்டுமே
(Month)

நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்

அம்மாவுக்கு நிகரான சேவை
அம்மா நகை அடைவுமாடமே

உங்கள் பழைய நகைகளை
நியாயமான விலையில்
வாங்கலாம்/விற்கலாம்

அரச அங்கீகாரம் பெற்று முழுக்
காப்புறுதி செய்யப்பட்ட
முதன்மையான அடைவு சேவை

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

- பவர் ஒப் சேல் பிரச்சினையிலிருந்து விடுபட ,
- நல்ல ரேட்ல மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க
- ரீபைனான்ஸ் செய்ய
- 2வது, 3வது மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- கொன்சுமர் ப்ரொபோசல், பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க



## மற்றும் உங்கள் அனைத்து விதமான மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தேவைகளுக்கும்...

WIN UP TO
**$100,000***
Everyone Who Funds
A Mortgage With US
Ask How !
*See contest rules at
www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

"மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.



**வோக் இன்**

**சனி 9.00 - 5.00 மணிவரை**

**416-613-2788 / 416-816-9011**

திங்கள்—வெள்ளி (call for an appointment)

எமது முகவரி
**1504 Markham Rd,**
**Toronto, ON, M1B 2V9**
**(Markham & HWY 401)**

**ஜெ(Jey) இராசதுரை** MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Broker
FSCO Lic # M 09001428

**Cell : 416-624-4843**

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*

Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487 Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC Office Phone : 416-391-3232

# மீதொட்டமுல்ல அனர்த்தத்தை முன்னரே தடுத்திருக்கலாம்

-விகிர்தன்

அண்மையில் இலங்கையில் இடம்பெற்ற துயரமான சம்பவம் கொலன்னாவ-மீதொட்டமுல்ல பகுதியில் குப்பை மேடு சரிந்ததால் ஏற்பட்ட பாதிப்பாகும். இந்த சம்பவத்தினால் 32 இற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். சிலரை காணவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ், சிங்கள புத்தாண்டு தினமான ஏப்ரல் 14ம் திகதி இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது. இச்சம்பவத்தினால் 228 குடும்பங்களைச் சேர்ந்த 980 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடுமையான மழை பெய்தால், குப்பை மேடு மீண்டும் ஒருமுறை சரிந்து விழும் அபாயம் இருப்பதாக அப்பகுதியை ஆய்வு செய்த புவியியல் துறைசார் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அத்துடன், இந்தக் குப்பை மேடு சரிவு இடம்பெற்ற பகுதிகளில் மெதேன் வாயுவின் தாக்கம் அதிகம் காணப்படுவதால், எந்நேரத்திலும் வெடிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக இதனை ஆய்வு செய்த ஜப்பானிய நிபுணர் குழு எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த அனர்த்தம் குறித்து ஆராய்வதற்காக ஜப்பானிலிருந்து வருகை தந்த 13 பேர் அடங்கிய விசேட நிபுணர் குழுவினர் மீதொட்டமுல்லையில் ஆய்வுகளை மேற்கொண்டதன் பின்னர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

குப்பை முகாமைத்துவம் தொடர்பில் அரசாங்கம் முறையான திட்டங்கள், வழிமுறைகளை கடைப்பிடிக்கவில்லை என குற்றம்சாட்டப்படுகின்றது. இந்த அறிவினை பெற்றுக்கொள்வதற்காக அரச அதிகாரிகள் ஏற்கனவே வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. குப்பை முகாமைத்துவ அதிகார சபை, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, நகர்ப்புற மேம்பாட்டு ஆணையம் மற்றும் மேல் மாகாண சபையின் அதிகாரிகள் உட்பட குழுவினர் ஜெர்மன், பிரித்தானியா, அயர்லாந்து மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகளுக்கு சென்றுள்ளனர்.

குப்பை முகாமைத்துவம், குப்பை மீள் சுழற்சி, குப்பையிலிருந்து மின்சாரம் தயாரித்தல் போன்ற விடயங்களை ஆய்வு செய்வதற்காக இவர்கள் வெளிநாடு சென்றுள்ளதாகவும், அதற்காக செலவிடப்பட்டுள்ள கணக்கு உரிய முறையில் மதிப்பிடவில்லை என்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறுகின்றார். இதேவேளை, இந்த அனர்த்தத்திற்கு யார் காரணம் என்பது குறித்தும் ஒருவருக்கொருவர் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

குப்பையை ரயில் மூலம் புத்தளத்திற்கு மாற்றுவதற்கு கடந்த ஆட்சியின் போது திட்டமிடப்பட்டது. இதற்காக நிதியுதவியை உலக வங்கி வழங்கியிருந்தது. 2014ஆம் ஆண்டும் இந்த திட்டத்திற்காக அமைச்சரவை அனுமதி கிடைத்ததுடன் நிதியும் ஒதுக்கப்பட்டிருந்தது என கோட்டாபய தெரிவித்துள்ளார்.



தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்தின் வினைத்திறனற்ற நிர்வாகமே இவ்வாறான சம்பவம் இடம்பெற்றதற்கு காரணம் என மஹிந்த ராஜபக்ஸ ஆதரவு தரப்பினர் கூறுகின்றனர். கடந்த அரசாங்கத்தின் செயற்பாட்டினாலேயே இந்த அனரத்தம் ஏற்பட்டுள்ளதென 'நல்லாட்சி' அரசாங்கத்திலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

கடந்த ஆட்சிக் காலத்தில் கொழும்பில் சேகரிக்கப்படும் குப்பைகளை புத்தளத்தில் கொட்டுவதற்கான திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டதாகவும், அந்த திட்டத்தை இடையில் நிறுத்திவிட்டு அதற்கு பொறுப்பாக இருந்த அதிகாரி மாற்றப்பட்டமையே மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிவுக்கு காரணமாகியுள்ளதென்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஸ குறிப்பிட்டுள்ளார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் புதிய தலைவரினால், குப்பை கொட்டுவதற்காக முன்னெடுக்கப்பட்ட வேறு திட்டத்தினால் ஏற்பட்ட பிரிவில், மீதொட்டமுல்லவுக்கு பொறுப்பாக இருந்த அதிகாரி நீக்கப்பட்டார். மீதொட்டமுல்ல குப்பை மேட்டில் உள்ள கடந்த அரசாங்க காலத்தில் மீதொட்டமுல்ல குப்பைகளை மீள்சுழற்சி செய்யப் பல வெளிநாட்டு முதலீடுகள் வந்த போதிலும் அவற்றில் எதனையும் செயற்படுத்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ இடமளிக்கவில்லை என அமைச்சர் மகிந்த அமரவீர குறிப்பிடுகின்றார். அத்துடன் குப்பை கொட்டும் வியாபாரத்துடன் தொடர்புடைய வர்த்தகர்கள் முன் வைத்த கோரிக்கைகளை மாத்திரம் முன்னாள் ஜனாதிபதி நிறை வேற்றி வந்ததாகவும் அவர் குற்றம் சாட்டுகின்றார்.

ஆனால், யுத்தம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தியமையினாலேயே மீ தொட்டமுல்ல குப்பை மேடு தொடர்பில் கவனம் செலுத்த முடியாது போனதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார். தனது ஆட்சிக் காலத்தின் இறுதியில் அதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்ட போதிலும், அதனை நடைமுறைப்படுத்த முடியாது போனதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு மாறி மாறி இரு தரப்பினரும் குற்றம் சாட்டுகின்றனர். இதேவேளை, தற்போது இந்த அனர்த்தம் ஏற்பட்டமைக்கான ஆய்வுகளும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன.

உலகில் திடீரென சில இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டு பல பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றமையினை தடுக்க முடியாதுள்ளது. எனினும், இவ்வாறான இயற்கை அனரத்தங்கள் ஏற்பட்டதன் பின்னர், அதனை முற்கூட்டியே அறிவதற்கு பல தொழில்நுட்பங்களை உலகம் ஆராய்ந்து நடைமுறைப்படுத்த ஆரம்பித்தள்ளது. மக்களை முற்கூட்டியே பாதுகாக்கும் ஏற்பாடுகளும் மேற்கொள்ளப் படுகின்றன.

ஆனால், மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிவு போன்ற சம்பவங்கள் இயற்கை அனர்த்தமல்ல. முன்னரேயே இதனைத் தடுத்திருக்கலாம். இதற்கு அரச நிர்வாகமும் அதிகாரிகளும் மட்டுமன்றி, முழு அரசாங்கமுமே பொறுப்பேற்க வேண்டும்.

மீதொட்டமுல்ல குப்பைமேட்டு அனர்த்தத்தைத் தொடர்ந்து கண்டியிலுள்ள கட்டுகஸ்தொட்ட பிரதேசத்தில், கொனாகொட - தேக்கவத்தயில் உள்ள பாரிய குப்பை மேடும் சரியக்கூடிய அபாயம் நிலவுவதாக மத்திய மாகாண சபையின் உறுப்பினரான சட்டத்தரணி அசங்க திலகவர்தன எச்சரிக்கை விடுத்துள்ளார். அதைத் தடுப்பதற்கு முன்கூட்டியே நடவடிக்கைகள் எடுக்காவிட்டால் மீதொட்டமுல்ல அனர்த் தத்தைப் போன்ற மற்றொரு அனர்த்தம் நடக்க இடமுண்டு எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். இதற்கு அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுத்து மீண்டும் இவ்வாறானதோர் அனரத்தம் ஏற்படாமல் தடுக்க வேண்டும்.

இலங்கையில், கடும் மழைக் காலங்களில் ஏற்படுகின்ற அனர்த்தங்கள் குறித்துக் கூட கவனம் செலுத்தப்படுவதில்லை. மலையகத்தில் ஒவ்வொரு வருடமும் கடும் மழைக் காலங்களில் மண்சரிவுகள் ஏற்படுகின்றன. இந்த மண்சரிவினால் பல உயிர்கள் காவுகொள்ளப்படுகின்றன. மக்களை பாதுகாப்பதற்கான முன்னாயத்தங்களை மேற்கொள்ளாமல் அனர்த்தம் ஏற்பட்ட பின்பு வீடுகளை வழங்குவதும், இழப்பீடுகளை வழங்குவதிலும் எவ்வித பலனும் இல்லை விலைமதிப்பற்ற மனித உயிர்களை அவர்களின் உறவினர்களுக்கு யாராலும் திருப்பிக் கொடுக்க இயலாது.

உலகம் முழுவதும் பயணங்களை மேற்கொள்வதும், ஒப்பந்தங்களில்....

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels• We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# தமிழகத்தில் பாஜக ஆட்சியைப் பிடிக்கும்!

## நேர்காணல்: தமிழிசை சௌந்தரராஜன்

### சந்திப்பு: சிவதாணு

சசிகலா சிறைக்குச் செல்வார் என்றார், சென்றார். இரட்டை இலை சின்னம் முடக்கப்படும் என்றார், முடக்கப்பட்டது. ஆர்.கே. நகர் தேர்தல் தள்ளிப்போகும் என்றார், நிறுத்தப்பட்டது... தமிழக அரசியலில் அடுத்து என்ன நடக்கும் என்பதை முன்கூட்டியே சொல்லும் 'தீர்க்கதரிசியாக' இப்போது மருத்துவர் தமிழிசையைத்தான் குறிப்பிடுகிறார்கள். தமிழ் மாநில பாஜக தலைவர். தமிழிசையை ஒரு காலை வேளையில் சந்தித்தோம்.

தமிழக அரசியல் குறித்து நீங்களும் மத்திய அமைச்சர் பொன். ராதா கிருஷ்ணனும் சொல்வது எல்லாம் அப்படியே நடக்கிறது. மாநில அரசியலில் நடப்பவை எல்லாம் மத்திய பாஜக அரசின் வேலைதான் என்று சொல்லப்படும் குற்றச்சாட்டுகளை நிரூபிப்பது போல்தானே இது இருக்கிறது?

தமிழக ஆட்சியாளர்கள் மீது பல ஊழல் வழக்குகள் இருக்கிறது. முதல்வர் மேலேயே விசாரணை வர வாய்ப்புள்ளது. இதனால், இந்த அரசாங்கம் மீதமிருக்கும் நான்கு ஆண்டுகளையும் நிறைவு செய்ய வாய்ப்பில்லை. இதனால், தமிழக சட்ட சபைக்கு 2021க்கு முன்னரே தேர்தல் வர வாய்ப்பிருக்கிறது என்று சொல்கிறேன். அதுபோல் நிகழ்ந்தால், உடனே எல்லாம் எங்கள் திட்டம்தான் என்று முத்திரை குத்துகிறீர்கள். ஆனால், ஊழல் செய்த அமைச்சரையும் முதல் வரையும் விட்டு விடுகிறீர்கள். ஊழல் செய்தவர்கள் ஆட்சி தொடராது என்று சொல்லும் தமிழிசையை மட்டும் கேள்விக்குள்ளாக்குகிறீர்கள், ஏன்? ஊழல் செய்தவர்களை காப்பாற்றும் விதமாக இப்படி திசை திருப்பிவிடும் அரசியல்தான் இங்கே நடந்து கொண்டிருக்கிறது.

ஜெயலலிதா மறைவு, கருணாநிதி மவுனத்தால் தமிழக அரசியலில் ஏற்பட்டிருக்கும் வெற்றிடச் சூழலை பாஜகவுக்கு சாதகமாக மாற்றமுடியும் என்று நம்புகிறீர்களா?

நிச்சயமாக! இது வெற்றிடம் இல்லை, எங்கள் வெற்றியின் இடம். ஐம்பது ஆண்டு கால திராவிட ஆட்சிகளுக்கு மாற்றாக தமிழகத்தில் ஒரு மாற்றம் வர வேண்டும் என்றும் அந்த மாற்றத்துக்கான காலம் இதுதான் என்றும் மக்கள் நினைக்கிறார்கள். காமராஜர் ஆட்சி எப்படி இருந்தது என்று எங்கள் அப்பா அடிக்கடி சொல்லுவார். பள்ளிகள் இல்லாத ஊர்களில் பள்ளிகள் கட்டி, தொழிற்சாலைகள் இல்லாத ஊரில் தொழிற்சாலைகள் அமைத்து, அணைகள் இல்லாத ஊரில் அணைகள் அமைத்து, சிறப்பாக ஆட்சி செய்யும் மோடியை இன்றைய காமராஜராகத்தான் நான்



பார்க்கிறேன். இன்று விவசாயிகள் பிரச்சினைக்காக சர்வக்கட்சிக் கூட்டத்தை கூட்டுகிறவர்கள் ஆட்சியில் இருந்தபோது ஏதாவது புதிய அணைகள் கட்டியிருக்கிறார்களா? கடந்த ஐம்பது ஆண்டுகளில் தகுதியான வளர்ச்சியை தமிழகம் அடையவில்லை. ஆனால், அந்த வளர்ச்சி திராவிடக் கட்சித் தலைவர்கள் வீட்டில் இருக்கிறது. மக்கள் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். எனக்கு அவர்கள் மேல் நம்பிக்கை இருக்கிறது.

ஆனால், குட்டிக்கரணம் அடித்தாலும் பாஜக தமிழகத்தில் காலூன்ற முடியாது என்கிறாரே ஸ்டாலின்?

ஸ்டாலினுக்கு பாஜகவை பார்த்து பயம். அதுதான் அவர் பேச்சில் வெளிப்படுகிறது. தமிழ்நாடு ஒன்றும் ஸ்டாலினுக்காக மட்டும் என்று குத்தகைக்கு விடப்படவில்லையே. 1982ல் இந்தியா முழுக்க இரண்டே இரண்டு நாடாளுமன்ற தொகுதிகளைப் பெற்ற பாஜக, இன்றைக்கு நிகரான எதிரியே இல்லாத தேசியக் கட்சியாக வளர்ந்துள்ளது. தமிழகத்திலும் அப்படி வளருவோம். ஆளுங்கட்சியாக அமர்வோம். இது எங்களுக்கான காலம்.

தமிழ் தமிழ் என்று சொல்லி தமிழை வளர்க்காமல் விட்டதுபோல், சமூக நீதியையும் இவர்கள் வளர்க்கவில்லை. தமிழகத்தில் ஆணவக் கொலைகள் நடந்துக் கொண்டுதான் இருக்கிறது. நடுரோட்டில் கொல்லப்படுகிறார்கள், தண்ட வாளங்களில் வெட்டி வீசப்படுகிறார்கள். எந்த சமூக நீதியை இவர்கள் கொண்டு வந்தார்கள்?

திராவிடக் கட்சியினர் அரசியலை உணர்ச்சிகரமாக செய்தார்களே தவிர வளர்ச்சிகரமாக செய்யவில்லை. எங்களுக்கு தமிழகத்தை ஆளும் வாய்ப்பு கிடைத்தால் நிச்சயம் 50 வருடங்கள் இவர்கள் செய்யாததை நாங்கள் செய்வோம். தமிழை ஆட்சி மொழி ஆக்குவோம். தமிழை கல்லில் மட்டும் அல்ல கல்வியில் கொண்டுவருவோம்.

அதிமுக ஓ.பி.எஸ். அணியை பாஜகதான் இயக்குகிறது என்று இப்போது வெளிப்படையாகவே சொல்ல ஆரம்பித்து விட்டார்களே?

அது உண்மையானால், நாங்கள் ஏன் கங்கை அமரனை ஆர்.கே. நகரில் வேட்பாளராக நிறுத்த வேண்டும்? வாசன் போல் எங்களாலும் நேரடியாக கூட்டணியில் சேர முடியாதா? பின்னால் இருந்து இயக்க என்ன அவசியம் இருக்கு? அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள். ஆனால், வருமான வரித்துறை சோதனைகள் தொடர்ந்து சசிகலா தரப்பு ஆட்களை குறி வைத்தே நடத்தப்படுகிறதே?

தவறு யார் செய்திருக்கிறார்களோ அவர்கள் மீதுதானே சோதனை வரும்? சேகர் ரெட்டி யாரு? ஓ.பி.எஸ்ஸுடன் இணைந்து பணியாற்றிவர் என்பது எல்லோருக்குமே தெரியுமே? டாக்டர் கீதாலட்சுமி மேல் தப்பு இல்லையா? விஜயபாஸ்கர் மீது தப்பு இல்லையா? அவர்கள் இடங்களில் சோதனை செய்வதற்கான வலுவான காரணங்கள் கிடைத்து அதனடிப்படையில்தான் சோதனை நடத்தப்பட்டுள்ளது.

நாங்கள் வெற்றிபெறும் என்ற பயத்தால் தான் ஆர்.கே. நகரில் தேர்தல் ரத்து என்று திமுக, தினகரன், தீபா எல்லோரும் கூறுகிறார்கள், உண்மை என்ன?

உளவுத்துறை அறிக்கையில் மதுசூதனன் தான் வருவார் என்றே இருந்தது. தினகரன் தரப்பினர் வாக்காளர்களுக்கு பணம் கொடுத்திருக்கிறார்கள். தவறு நடந்திருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அதனடிப்படையில்தான் தேர்தல் நிறுத்தப்பட்டிருக்கிறது. வாக்குகள் விற்பனைக்கல்ல என்ற தர்மம் தலை குனிவை சந்தித்திருக்கும்போது, அதை தடுத்திருக்கிறோம்.

ஈஷா மையம் சிலை திறப்புக்கு கோவைக்கே வருகிறார் பிரதமர். ஆனால், 40 நாட்களுக்கும் மேலாக டெல்லியிலேயே போராடிய தமிழக விவசாயிகள் சந்திப்பை தவிர்க்கிறாரே, ஏன்?

எல்லாவற்றிற்கும் தலைமைப் பதவியில் இருப்பவரைத்தான் பார்க்கவேண்டும் என்று அவசியமில்லை. விவசாயிகளை மத்திய அமைச்சர்கள் பொன். ராதாகிருஷ்ணனும் அருண் ஜெட்லியும் பார்த்திருக்கிறார்கள். அருண் ஜெட்லி விவசாய கடன்களை ரத்து செய்வது மாநில அரசின் பிரச்சனை என்று தெளிவாக சொல்லிவிட்டார். அதன்பின்னரும் ஏன் விவசாயிகள் மத்திய அரசையே சாடுகிறார்கள்?

விவசாயிகள் பயிர் பாதுகாப்பு திட்டத்தில் தமிழகத்தில் 50 லட்சம் பேர் பதிவாகி இருக்கவேண்டும். ஆனால், வெறும் 13 ஆயிரம் பேர்தான் பதிவாகியுள்ளார்கள். அதற்கு, மாநில அரசுதான் காரணம். இது போராடும் விவசாயிகளுக்குத் தெரியாதா?

போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்க ராகுல்காந்தி வந்தாரே, அவரிடம் காங்கிரஸ் ஆட்சியில் ஏன் நதிகளை இணைக்கவில்லை? கர்நாடகத்திலிருந்து ஏன் தண்ணீர் விடவில்லை என்று கேட்டிருக்கலாமே? சரி, இதற்குமுன் தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதாவை எத்தனைமுறை போய் பார்த்தார்கள்?

புதுக்கோட்டை, நெடுவாசல் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் ஹைட்ரோ கார்பன் திட்டத்தை அமல்படுத்தமாட்டோம் என்று சொல்லிவிட்டு, பிறகு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு நிலைபாட்டை மாற்றியது, ஏமாற்று வேலை இல்லையா?

ஹைட்ரோ கார்பன் திட்டத்துக்காக ஒரு பட்டியல் போட்டுவிட்டார்கள். அதற்கு, எல்லா மாநிலங்களும் ஒப்புக்கொண்டு விட்டார்கள். இந்நிலையில் பட்டியலில்

(தொடர்ச்சி 25 ஆம் பக்கம்...)

LOANS & MORTGAGES.... that meets your needs
$5,000...$35,000...$50,000...$100,000...1Million...
MORTGAGE ALLIANCE
Corporate Office:
2005 Sheppard Ave E.
Suite 200, Toronto ON M2J 5B4
Toll Free: 1-877-366-3487
- Commercial Mortgages.
- 2nd Mortgages.
- Construction Mortgages.
- Secured Credit line.
- Unsecured Loans.
SAM SURENDRAN
Mortgage Agent Lic# 16002312
647-922-5704
Twitter @OK_Mortgages





# மக்களின் தொடர் போராட்டமும், நடைபெற்ற பாரிய ஹர்த்தாலும்!

- ஆதித்தன் -

கடந்த ஏப்ரல் மாதம் 27ம் திகதி வடக்கு, கிழக்கில் பாரிய ஹர்த்தால் ஒன்று நடைபெற்றுள்ளது. காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்து அவர்களின் உறவினர்களுக்கு உரிய பதிலை வழங்க வேண்டும் என்றும், நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் எனவும், படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ள பொதுமக்களின் காணிகள் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தி இந்த ஹர்த்தால் நடத்தப்பட்டது.

எனினும், இந்த நடவடிக்கையானது காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் போராட்டத்தின் ஒரு வடிவமாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதே உண்மை.

வடக்கில் கிளிநொச்சியிலும், வவுனியாவிலும் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் மாதக் கணக்கில் தங்கள் கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். வடக்கின் ஏனைய சில பகுதிகளிலும் கிழக்கு மாகாணத்திலும் இவ்வாறான போராட்டங்கள் மக்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஜெனீவாவில் கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் இடம்பெற்றுக் கொண்டிருந்த நாட்களில் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பிலேயே மக்களின் இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டதாக கருதப்பட்டது. அதில் உண்மை இல்லாமலுமில்லை. ஆனால், ஜெனீவா கூட்டத்தொடர் நிறைவடைந்தவுடன் இப்போராட்டங்களும் முடிவிற்கு வந்து விடும் என்றே பலராலும் எதிர்பார்க்கப்பட்டது. இலங்கை அரசாங்கமும் இவ்வாறே எண்ணியிருந்தது. தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் இப்போராட்டத்தை முடிவிற்கு கொண்டு வரவேண்டும் என்றே விரும்பினர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் போராட்டம் நடத்தும் மக்களை வந்து பார்வையிடு கின்ற வேளைகளில் தாங்கள் அரசாங்கத்துடன் கலந்துரையாடி தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதாக கூறக் முடியாத நிலையில் மௌனம் காத்தனர். அதேநேரம், இப்போராட்டத்தை ஒரு முடிவிற்கு கொண்டு வர முடியுமா எனவும் அவர்கள் சிந்தித்தனர்.



அண்மையில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர் களை பார்வையிட வந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, தங்களால் இப்பிரச்சினை குறித்து அரசாங்கத்துடன் பேச முடியுமே தவிர இந்த அரசாங்கத்தை எதிர்த்து போராட முடியாது என்று கூறினார். இந்த அரசாங்கம் கவிழ்ந்தால் முன்னைய அரசாங்கமே மீண்டும் ஆட்சிக்கு வரும். அது தமிழ் மக்களுக்கு மேலும் துன்பத்தினையே தரும் என்றும் அவர் கூறினார். அவரது இக்கருத்து கடும் விமர்சனங்களுக்குள்ளானமையும் குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்களின் வாக்குகளால் தெரிவு-செய்யப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களாகியுள்ள இவர்கள் முற்றுமுழுதாக அரசாங்கத்தை எதிர்த்துப் போராட வேண்டும் என்பதல்ல. வேறு வடிவங்களில், அவர்கள் தங்களது மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் விதமான செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். அதற்கான எத்தனையோ வடிவங்கள் உள்ளன. அவை பற்றிக் கூட சிந்தித்துப் பார்க்க விரும்பாத நிலையிலேயே அவர்கள் உள்ளனர். இந்த நிலையில் தான் பாதிக்கப்பட்ட மக்கள் ஆவேசத்துடன், தன்னெழுச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் தாங்களாகவே இந்தப் போராட்டத்தை தொடர்ந்து நடத்தி வருகின்றனர். தமிழ் அரசியல்வாதிகளின் தூண்டுதலில் இது நடப்பதாக கருதியவர்களுக்கு தற்போது இது அதிர்ச்சியளிக்கும் ஒன்றாகவும் மாறியுள்ளது. குறிப்பாக, இலங்கை அரசாங்கம் மட்டுமல்லாது, சர்வதேச நாடுகளும் கூட தமிழ் அரசியல்வாதிகளே பின்னின்று இவ்வாறு போராட்டங்களைத் தூண்டிவிடுகின்றனர் எனக் கருதியிருந்தனர்.

இந்த நிலையில்தான் வடக்கு கிழக்கு முழுவதுமாக இந்த ஹர்த்தால் வெற்றி-கரமாக நடந்து முடிந்திருக்கின்றது. அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு, அரசாங்க, தனியார் நிறுவனங்களும் செயலிழக்கும் வகையில் இப்போராட்டம் நடைபெற்றுள்ளது. போக்குவரத்துக்கள் கூட முழுமையாக ஸ்தம்பிதம-டைந்தன. தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த பயணிகள் போக்குவரத்து வாகனங்கள் உள்ளிட்ட அனைத்து வாகனங்களும் வவுனியாவை கடந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. ஹர்த்தால் நிறைவடைந்த பின்னரே வாகனங்கள் பயணத்தைத் தொடர்ந்தன.

நடைபெற்ற இந்த ஹர்த்தாலுக்கு வடக்கு கிழக்கில் மட்டுமல்லாது தெற்கிலுள்ள தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளும் ஆதரவினை வெளிப்படுத்தியிருந்தன. இது போராடும் மக்களுக்கு கிடைத்த வெற்றி என்றே கூற வேண்டும்.

காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் மேற்கொண்டு வரும் இந்தப் போராட்டம் ஒரு முடிவை எட்டும்வரை தொடரும் எனவும், வெவ்வேறு வடிவங்களில் அது தொடரும் என்றும் போராடும் மக்கள் கூறுகின்றனர். இந்த உறுதிமிக்க, தன்னெழுச்சியான போராட்டம் ஏனைய பாதிக்கப்பட்ட மக்களும் போராட ஊக்கமளிக்கும்.

இது அரசாங்கத்திற்கு மட்டுமல்லாது, தமிழர்களின் பிரதிநிதிகளாகவுள்ள அரசியல்வாதிகளுக்கும் எதிர்காலத்தில் சிக்கலை ஏற்படுத்தும். போராடும் மக்களோடு இணைந்தோ, அல்லது அரசாங்கத்திற்கு நெருக்கடி கொடுப்பதான வேறு முறைகளிலோ தமிழ் அரசியல்வாதிகள் போராட வேண்டிய நிர்ப்பந்தம் நாளடைவில் ஏற்படும். அவ்வாறு அவர்கள் செயற்படா விட்டால் எதிர்வரும் தேர்தல்களில் தமிழ் மக்களிடம் சென்று வாக்கு கேட்க முடியாத நிலைமை அவர்களுக்கு ஏற்படும்.

காணாமலாக்கப்பட்டவர்கள் இன்னமும் உயிருடனிருப்பதாகவே காணாமலாக்கப்பட்டோரின் பெற்றோர், உறவினர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். சிறை-களிலோ, எங்கோவாவது இரகசிய இடங்களிலோ அவர்கள் வைக்கப்பட்டிருக்கலாம் என்றே அவர்கள் கருதுகின்றனர். அரசாங்கமோ இரகசிய முகாம்கள் என எதுவுமில்லை எனவும், காணாமல் போனவர்கள் எனத் தேடப்படுகின்றவர்கள் உயிருடன் இல்லை எனவும் அவ்வப் போது கூறி வருகின்றது. அதேவேளை-யில் கடந்த மஹிந்த அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட தவறுகளுக்கு தாங்கள் எதுவும் செய்ய முடியாது என்ற தொனியிலும் இந்த ‘நல்லாட்சி’ அரசாங்கத்தால் கருத்துக்கள் வெளிப்படுத்தப் பட்டு வருகின்றன.

காணாமலாக்கப்பட்டவர்கள் எந்தவொரு சிறைகளிலோ, முகாம்களிலோ இல்லை என்றால் அதனை நிரூபிக்கும் வகையில் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியது இந்த அரசாங்கத்தின் கடமையாகும். இதனை அரசாங்கத்திற்கு வலியுறுத்த வேண்டிய பொறுப்பு தமிழ் தேசிய நாடா-ளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ளது.

சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய குழுவொன்றை அமைத்து சந்தேகிக்கப்படும் சிறைகளிலும், முகாம்களிலும் நேரடியாக தேடிப் பார்க்கும் பொறிமுறையொன்றை ஏன் உருவாக்க முடியாது? அவ்வாறு செய்யும் பட்சத்தில் பாதிக்கப்பட்ட மக்களும் ஒரு முடிவிற்கு வரமுடியும். அரசாங்கமும் அடுத்த கட்ட செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். இதனை விட்டுவிட்டு, காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம் அமைத்து அதன் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என கூறிக்கொண்டிருப்பது காலத்தை வீணே கடத்தும் செயற்பாடன்றி வேறொன்றுமில்லை.

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...)


27 வது ஆண்டில் கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம் VLAMBARAM™

| | |
|---|---|
| பதிப்பாளர்: | ராஜா மகேந்திரன் |
| பத்திரிகை ஆசிரியர்: | சத்தியா மகேந்திரன் |
| பத்திரிகை முகாமையாளர்: | கமல் செல்லையா |
| ஊடகப்பொறுப்பாளர்: | விஜய் செல்லையா |
| தட்டச்சு: | கலா விஜயபாலன் |
| அலுவலக பொறுப்பாளர்: | செல்வி ரஞ்சன் |
| | தாரணி இந்திரராஜ் |

பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www. tamilvanakkam.com


விளம்பரம் பத்திரிகை ‘விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்’ ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



3+1 Bedrooms, 1 W Room
Close Proximity To Schools Park, Shopping Centre, Transit & Amenities



3 Bedrooms, 3 W Room
Beautiful Gleaming Hardwood Flooring With Upgraded Trim.



3 Bedrooms, 2 W Room
Large Rec Room With Wall To Wall Built In Bookcase/Wall Unit And Fireplace



2 Bedrooms, 1 W Room
Living Room With Gas Fireplace And W/O To Fenced Yard



3+1 Bedrooms, 4 W Room
Finished Basement With A Rec Room



3 Bedrooms, 4 W Room
Walk Out To Beautiful Stamped Concrete Patio



4 Bedrooms, 4 W Room
Best Town Homes With Lots Of Potential Of Rental Or End Users



4 Bedrooms, 4 W Room
Finished Baseement And No Wasted Sq Footage



3+1 Bedrooms, 2 W Room
Finished Basement Features Kitchen, Rec Room



3+1 Bedrooms, 4 W Room
Family Room Including Gas Fireplace, Living Room



3+1 Bedrooms, 3 W Room
Finished Cozy Bsmt Home Has Updated



4+3 Bedrooms, 4 W Room
Finished Basement With Separate Walk Out Entrance



4+1 Bedrooms, 4 W Room
Sep. Side Entrance To Fin Bsmt In Desirable North Ajax



4 Bedrooms, 5 W Room
Individually Architect Designed And Custom Built



5+1 Bedrooms, 7 W Room
Unparalleled European Craftsmanship And Is Located In The Exclusive Steele



KZG 647-200-5833

Sell your home **faster** and more **money**

RE/MAX Platinum Club Award

**ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.SC**
Sales Representative
**Direct 416 - 276-1225**
Email: esrinathan@trebnet.com

Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770

# Your Home Sold In 30 Days or We buy it

**When you list your home with Mike,you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold, Your home advertised in full color prints ads every week until it is sold, Our team of specialists for the same price as hiring a single agent


நிரு
பிராண்ட்
Niru
BRAND ®
JACK
MACKEREL
IN BRINE
தொடர்பிற்கு தொலைபேசி.
காட்சிக்கு தொலைக்காட்சி.
இணையத்திற்கு கணனி.
உணவிற்கு நிரு பிராண்ட்.
Niru BRAND
MARKETING BY TAMIL SOURCE

# நாமும் நமது இல்லமும் - 486

## வெளிநாட்டினர்க்கு புதிய வரி!


**ராஜா மகேந்திரன்,** P.Eng.
raja@mahendran.ca
416.315.9397
416.321.6969




அண்மைக் காலமாக மூன்று அரசுகளதும், சகல ஊடகங்களினதும், ஆய்வாளர்களினதும் மற்றும் கனேடிய மக்களினதும் குறிப்பாக ரொறன்ரோ பெரும்பாகத்திலும் அதனைக் சுற்றியுள்ளவர்களினதும் முக்கிய பேசுபொருளாக வீடு, மனைகளின் வியாபாரம் பற்றியதாகவே இருந்தது. குறிப்பாக மார்ச் 2016 இற்கும் மார்ச் 2017இற்கும் இடையேயுள்ள காலப்பகுதியில் ஆதன விலையில் 30%ற்கு மேலான அதிகரிப்பு. இவ்விலை அதிகரிப்பு சாமானிய மக்களால் கூட ஜீரணிக்க முடியாமல் இருந்தது.

இதனை பேசும் பொருளாகக் கொண்டு, விலையைக் கட்டுப்படுத்த மூன்று அரசின் முக்கியமான தலைவர்கள் தொடர்ந்து சந்தித்து விவாதித்து வந்தார்கள். இதன் ஓர் அங்கமாக அல்லது இடைமுடிவாக ஏப்ரல் மாதத்தின் இறுதிப்பகுதியில் (ஏப்ரல் 21, 2017) இருந்து சில தடுப்புச் சுவர்கள், ஆதன விற்பனைக்குப் போட்டுள்ளனர். ஒன்ராரியோ மாகாண ஆட்சியிலிருக்கும் முதல்வர் கத்லீன் வின் (Kathleen Wynn) இன் அரசு ஆதன வியாபாரத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்காகப் பதினாறு அம்சத்திட்டத்தைக் கொண்டு வந்துள்ளனர். இத்திட்டத்தில் உள்ளவை எவ்வளவு தூரம் ஆதன விலையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் என்பதனை எதிர்காலம் தான் பதில் சொல்ல வேண்டும். இதனைத் தொடர்ந்து இருவிதமான கருத்துக்கள் பொருளாதார நிபுணர்களிடம் இருந்து வெளிவந்து கொண்டு இருக்கின்றது. ஒன்ராரியோ அரசு கொண்டுவந்த 15% ஆன வெளிநாட்டவர்களிற்கான வரி ரொறன்ரோ பெரும்பாகத்தையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் மட்டுமே பொருந்தும். இந்தப் பகுதியை Greater Golden Horseshoe (GGH) பிராந்தியம் என அழைக்கப்படும். இப்பிரதேசமானது வோட்டலூ மேற்கு (Waterloo) இலிருந்து கிழக்கே பீற்றபறோ (Peterborogh) வரையும், தெற்கே நயகரா (Niagara) இலிருந்து வடக்கே ஒறிலியா (Orilia) வரையான பகுதியை குறிக்கும்.

இந்தப்பகுதியில் ஆதனம் வாங்குபவர்களுக்கு இவ்வரி அறவிடப்படும். ஒன்ராரியோ அரசின், ஆதனவிலையைக் கட்டுப்படுத்தக் கொண்டுவந்த 16 அம்சத் திட்டத்தில் முக்கியமானதாகக் கருதப்படுபவற்றில் சிலவற்றைப் பற்றி பார்ப்போம்.



1. வெளிநாட்டவர்களால் ஒன்ராரியோவில் ஆதனம் வாங்குபவர்களுக்கான 15% மேலதிகவரி ஆதனவரி. இதன்பாதிப்பு எவ்வளவு என்பதும், எப்படி இருக்கலாம் என்பதும் கேள்வியாகவே உள்ளது.

- ரொறொன்ரோ பெரும்பாகத்தில் 5% தொடக்கம் 15% வரையான வெளிநாட்டவர்கள் ஆதனம் வாங்குவதாக ஒரு கணிப்பு. இதன் உண்மைத்தன்மை சரியான புள்ளிவிபரத்தகவல்கள் இதுவரை கிடையாது. எனினும் இதுபோன்ற வெளிநாட்டவர்களுக்கான 15% ஆன ஆதனவரி வன்கூவரில் ஒகஸ்ட் 02, 2016 இல் கொண்டுவரப்பட்டது. இதன் பாதிப்பு முதல் ஆறு மாதத்தில் விற்பனையில் ஏறக்குறைய 40% இறக்கமும் விலையில் 10% இற்கு குறைவான இறக்கமும் ஏற்பட்டது என்று புள்ளிவிபரம் காட்டுகின்றது.

இத்திட்டத்தில் ஒன்ராரியோ அரசால் கொண்டுவந்த 15% வரி செலுத்தி ஆதனம் வாங்கிய வெளிநாட்டவர்கள் குறிப்பிட்ட காலத்தில் தாம் செலுத்திய பணத்தை திரும்பப் பெறுவதற்கான சில வழிமுறைகளும் தெரியப்படுத்தப்பட்டுள்ளன என்பதும் முக்கியமாகக் கவனிக்கக் கூடியது.

- வெளிநாட்டவர்கள் செலுத்தும் மேலதிக வரியை திரும்பப் பெறுவதற்கான வழிமுறைகள்:

- ஆதனம் வாங்கிய காலத்தில் இருந்து 4 வருடங்களுக்கும் ஆதனம் வாங்கியவர் கனடாவில் நிரந்தரமாக வாழ்பவராக (Permanent Resident) அல்லது கனேடிய பிரஜையாக (Canadian Citizen) வந்தால் செலுத்திய பணத்தைத் திரும்பப் பெறலாம்.

- வாங்கியவர் மாணவராக இருந்தால் ஆதனம் வாங்கியபின் தொடர்ந்து இரு

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...)


NO MEDICAL INSURANCE

No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!

Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.

• 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.

• விசா இல்லாதவர்களும் சுப்பர் விசாவில் உள்ளவர்களும் 78 வயதுவரை பெறலாம்

KABIS
KABIS & ASSOCIATES INC.



உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.

Does your current life insurance policy need a tune up please call me.


**Nimal Subramaniam**

**Cell: 416.816.7994** **Email:neel900@hotmail.com**

LaCapitale Financial Group | INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. | Assumption Life

•Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA

# அத்தனைக்கும் ஆசைப்படு!



## சத்குரு வாசுதேவ்

**மனதைத் தெளிவாக வைத்திருக்க ஒரேவழி - முறையான தியானம் தான்!**

பெரும்பாலானவர்களைக் கவனித்து ஓர் ஆராய்ச்சி செய்ததில், அவர்கள் எட்டு மணி நேரம் வேலை செய்தால், அதில் அதிகபட்சம் இரண்டு அல்லது மூன்று மணி நேரத்துக்கான திறமைதான் வெளிப்படுகிறது என்று தெரிய வந்திருக்கிறது.

பேனாவை எடுப்பதும், திருகுவதும், கீழே வைப்பதும், தேவையில்லாமல் திரும்பிப் பார்ப்பதும், நாற்காலியை நகர்த்துவதும், விரல்களின் நுனிகளை ஆராய்ச்சி செய்வதும் போன்ற குழப்பமான செய்கைகளிலேயே பெரும்பாலானோர் தங்களை அறியாமலேயே நேரத்தை வீணாக்குகிறார்கள்.

உங்களுக்குத் தெரியுமா... உடலின் இந்தக் குழப்பமான செய்கைகள் எல்லாம் தெளிவற்ற மனதின் வெளிப்பாடுதான். இப்படிச் சிந்தனைகளை அலைக்கழிக்கும் செயல்களில் சக்தியைச் செலவிடாமல், அதை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தினால், பெரும் மாற்றங்கள் நிகழக்கூடும். எந்த வேலையும் கடினமாகத் தோன்றாது. அந்தப்பணி, வழக்கத்தை விடப் பாதி நேரத்திலேயே முடிந்துவிடக் கூடும்.

### சரி, மனம் எதனால் தெளிவற்று இருக்கிறது?

கோபம், படபடப்பு, வருத்தம், சந்தோஷம் என எல்லாமே உங்கள் உணர்ச்சிகளின் வெவ்வேறு வெளிப்பாடுகள்தான். பெரும்பாலும், உங்கள் உணர்ச்சிகள் வெளிச்சூழ்நிலைகளால் தான் தூண்டப்படுகின்றன. அவற்றைக் கட்டுப்படுத்த முடியாதபோது, இந்த உணர்ச்சிகளையும் கட்டுபடுத்த முடியாமல் அலைக்கழிக்கப்படுகிறீர்கள்.

பதவி உயர, உயர எதிர்பாரா வெளிச் சூழ்நிலைகளை அதிகம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். ஒரு சாதாரண குடிமகனைவிட, தேசத்தின் முதல் குடிமகனான ஜனாதிபதியும், பிரதமரும் தான் வெளிச் சூழ்நிலைகளை அதிகம் சந்திக்கிறார்கள்.

அமைதியில்லாத மனதுக்குச் சின்ன மணல் கூடப் பெரும் பாறையாகத் தெரியும். மனம் தெளிவாக இருக்கும்போது தடைகளைக் கூடப் படிகளாக மாற்றிக்கொண்டு மேலே உயர முடியும். இதற்கு உதாரணமாக ஒரு வேடிக்கைக் கதை சொல்லலாம்.

ஒரு குருவிடம் பல சீடர்கள் இருந்தனர். அவர்களில் இருவருக்குப் புகை பிடிக்கும் பழக்கம் இருந்தது. ஆச்சிரமத்தில் புகைக்க முடியாததால், தியானத்தில் மனம் செல்லாமல் அவர்கள் தவித்தார்கள்.

இப்படிக் கஷ்டப்படுவதைவிட, ‘இங்கேயே நாங்கள் புகை பிடிக்கலாமா?’ என்று குருவிடமே கேட்டுவிட்டால் என்ன என்று இருவரும் யோசித்தார்கள்.

மறுநாள், நண்பர்களில் ஒருவன் முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு தோட்டத்தில் உட்கார்ந்திருந்தான். அடுத்தவன் புகை பிடித்தபடி வந்தான். அவனைப் பார்த்தும் இவன் பதறி எழுந்தான்.

‘அதெப்படி நீ புகை பிடிக்கிறாய்? நான் கேட்டபோது குரு அனுமதி மறுத்தாரே?’

‘நீ அவரிடம் என்ன கேட்டாய்?’

‘தெளிவாகவே கேட்டேனே.. ‘தியானம் செய்யும்போது சிகரெட் பிடிக்கலாமா?’ என்று கேட்டேன். ‘கூடவே கூடாது!’ என்றாரே?’

‘நான் அதையே கொஞ்சம் மாற்றிக் கேட்டேன். ‘புகை பிடிக்கும்போது தியானம் செய்யலாமா?’ என்று கேட்டேன். ‘தாராளமாக!’ என்று அனுமதி அளித்து விட்டார்’ என்று சிரித்தான் அடுத்தவன்.

மனம் அமைதியாக இருந்தால் எதுவுமே பிரச்சினையாகத் தெரியாது.

### எப்போதெல்லாம் அமைதியை உணர்ந்திருக்கிறீர்கள்?

வயிறார உண்டு முடித்தவர்களைப் பாருங்கள். களைப்பில் படுத்திருப்பார்கள். ‘நிம்மதிக்காகக் குடிக்கிறேன்’ என்று சிலர் மது அருந்திவிட்டு நினைவில்லாமல் கிடப்பார்கள். இந்த மாதிரி செயலற்று இருப்பதல்ல அமைதி.

உள்ளே அமைதியாக இருந்தால், மனம் முழு விழிப்பு உணர்வுடன் எதையும் சந்திக்கத் தயாராயிருக்கும்.

பச்சைப் பசேலென்ற ஒரு மலையைப் பார்த்துக்கொண்டு இருக்கிறீர்கள். அப்போது மனம் அமைதியாக இருக்கும். ஆனந்தமாக இருக்கும். திடீரென்று மரங்களின் மறைவிலிருந்து நீண்ட தந்தங்களுடன் ஒரு யானை வெளிப்பட்டால், அத்தனை அமைதியும் போய், படபடப்பு ஏறும், என்ன செய்வது என்று புரியாமல் தடுமாறுவீர்கள் அல்லவா?

ஆனால், உள்ளே நீங்கள் அமைதியாக இருந்தால், யானையைப் பார்த்தவுடன் மனம் ஸ்தம்பித்து நிற்காது, உடனடியாக உங்களைக் காப்பாற்றிக் கொள்ளச் செயல்படுவீர்கள். பொதுவாக எப்போதெல்லாம் உங்கள் அமைதி கலைக்கப்படுகிறது?

நீங்கள் எதிர்பார்த்தபடி மற்றவர்கள் நடந்து கொள்ளாதபோது, கோபம் வருகிறது. ஆத்திரம் வருகிறது. எங்கே மனிதர்கள் எதிர்த்துக் கேள்வி கேட்காமல், உங்களுக்குப் பணிந்து உங்கள் செய்கைகளைச் சகித்து ஏற்றுக் கொள்கிறார்களோ, அங்கே அமைதியாக உணர்கிறீர்கள். அதாவது நீங்கள் அமைதியாக இருக்க வேண்டுமென்றால், உங்கள் அகங்காரத்துக்குத் தீனி போட வேண்டி இருக்கிறது.

புரிந்து கொள்ளுங்கள்.. உங்கள் அகங்காரத்தையும் ஆணவத்தையும் ஆதரிப்பவர்கள் உண்மையில் உங்கள் நண்பர்கள் அல்ல. உங்களை அறியாமையிலேயே வைத்திருந்தது, உங்கள் வளர்ச்சிக்குத் தடை போடும் மோசமான எதிரிகள்!

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

நீங்கள் உள் சூழ்நிலையை அமைதியாக வைத்திருக்கத் தவறியதால்தான் இத்தனை குழப்பங்களும். உங்களுக்குள் இருக்கும் சக்தியை ஒழுங்காகக் கட்டுபடுத்தி உங்கள் விருப்பப்படி செயல்படுத்தக் கற்றுக்கொள்ளாததால்தான் இத்தனை அவதிகளும். நீங்கள் உள்ளே முழு அமைதியாகவும், வெளியே வெகு சுறுசுறுப்பாகவும் இருக்க முடியும்.

உள்ளே அமைதியாக இருக்க என்ன செய்ய வேண்டும்? முறையான யோகாவாலும், தியானத்தாலும் உங்கள் சக்தியைச் சிதறாமல் கட்டுக்கோப்பில் வைத்திருக்க முடியும். மனதை அப்படி ஒரு கட்டுக்கோப்பில் வைத்திருந்தால் தான், உங்கள் திறமை முழுமையாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும்.

## குருவிடம் ஒரு குறுக்கு விசாரணை!

‘எதிரியை சமாளிப்பது எப்படி?

ஓர் இரும்புத் துண்டத்தை வளைக்கப் பார்க்கிறீர்கள். இயலவில்லை. அதை வலுவானது என்று சொல்கிறீர்கள். உங்களை விட வலுவுள்ள வேறு யாராவது அந்த இரும்பை வளைக்க முடியும். இயந்திரத்தில் கொடுத்தால் அதைத் துண்டம் துண்டமாக உடைக்கக்கூட முடியும்.

எதிர்ப்பால் பலம் காட்டுகிற எல்லா விடயங்களுமே இப்படித்தான். அதற்கும் மேலே இன்னொரு பலம் இருக்கும். ஆனால், எதிர்க்காத ஒன்றை எப்பேர்ப்பட்ட சூப்பர்மேன் வந்தாலும் எப்படி வளைக்க முடியும்? எப்படி உடைக்க முடியும்?

எனவே, எதிரி என்று நினைப்பவரைவிட நீங்கள் சக்தி மிகுந்தவராக வேண்டுமென்றால், அவரையும் அன்போடு ஏற்றுக் கொள்ளப்பழகுங்கள். அது மேன்மையானது. உன்னதமானது. எதிர்ப்பைவிட சக்தி மிகுந்தது!’.




## *4 day Inner Engineering Program*

*led by an Isha teacher trained by Sadhguru*
*Coming to Toronto in 2 locations – June 15 - 18, 2017*

TIMINGS: Thursday June 15 : 6:30pm – 9:45pm
Friday June 16 : 6:30pm – 9:45pm
Saturday June 17 : 8:30am – 7:00pm
Sunday June 18 : 7:30am – 7:00pm

*VENUE* - ***Richmondhill:*** - Elegance Banquet Hall
10 Newkirk Rd, Richmond Hill (Toronto), ON L4C 5S3

***MISSISSAUGA*** - Swagat Banquet Hall,
6991 Millcreek Drive, Mississauga (Toronto), ON L5N 6B9

*Email: toronto@ishafoundation.org / Phone: 416 300 3010*
*Online registrations: www.innerengineering.com/live/toronto*

# காய்க்கு கொடி பாரமா? பாரம்மா பாசத்தின் நிலையை!



நா. க. சிவராமலிங்கம்

குடும்பம் என்ற நிறுவனம் கொஞ்சம் கொஞ்சம்மாக சிதைவதன் அடையாளம் தான் முதியோர் இல்லங்கள் எனலாம்.

முதுமை என்பது உடல் தளர்ந்து போகிற பருவம். உடல் புதுப்பிக்கப்படாதபோது மனமும் களைப்படைந்து அயர்ந்து போகின்றது. கடைசி காலத்தில் பார்த்துக்கொள்ள ஆள் தேவை என்பதனால்தான் ஆண் வாரிசுக்கு ஆசைப்படுகிறார்கள். பெற்றோர் பெற்றது மகனாகவும் பெருமை சேர்ப்பவனாகவும் இருந்துவிட்டால் மகப் பேற்றால் மாட்சிமையடைகிறாள் மாதா என்பது வள்ளுவர் வாக்கு. வாரிசுகளே இருந்தும் பெற்றோர் தமது கடைசி நாட்களை முதியோர் இல்லங்களில் கழிப்பது ஒரு துர்ப்பாக்கியநிலை எனலாம். அரசு கூட ஆதரவற்றோருக்கு ஆதரவு வழங்கி கண்ணீரை துடைக்கின்ற காரியத்தை ஆற்றுகின்றது. உதவித்தொகை வழங்கப்படாவிட்டால் அவர்கள் இறந்தே போய்விடுவார்கள். அரசு உதவித் தொகை வழங்கலாம். ஆனால் ஆதரவை, பாசத்தை, மனித நேயத்தை சமுதாயம்தானே அள்ளி வழங்க வேண்டும். தாய்ப்பாலை புட்டியில் அடைத்துக் கொடுத்தால் குழந்தை முரண்டு பிடிக்கும். ஏனெனில் தாயின் கதகதப்பு அங்கே காணாமல் போய்விட்டிருக்கும்.

பெற்று வளர்த்து ஆளாக்கித் தம்முடைய உதிரத்தையும், வியர்வையையும் கண்ணீரையும் காணிக்கையாக்கிய பெற்றோர்களையே அனாதையாக்கி விடும் பிள்ளைகள் சமுதாயத்தால் சபிக்கப்படுவார்கள்.

கீறல் விழுந்த இசைத்தட்டாத முதுமை இருக்கலாம். அந்தக் கீறலை நாம்தானே விரிசலாக்குகின்றோம். அது பிளவாகும்வரை பேசாமல் இருக்கின்றோம். 'கொடிக்கு காய் பாரமா' என்று கேட்கலாம். அந்நிலை ஒரு போதும் ஏற்படுவதில்லை. ஆனால் காய்கள் கொடியை பராமாக நினைக்கும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது. வீட்டிலே பெற்றோர்கள் ஒதுக்கி வைக்கப்படுகின்ற சூழலும், புறக்கணிக்கப்படுகின்ற சூழலும், அன்னியர்கள் போல நடத்தப்படுகின்ற சூழலும் காணப்படுவதால் காய்கள் கொடியை பாரமாக்கிட நினைக்கின்றன.

அனாதை ஆச்சிரமங்கள், முதியோர் இல்லங்கள் இரண்டுமே வற்றிய மனித நேயத்தின் முத்திரைகள், அழியாத மச்சங்கள். மூலத்தையே நிராகரிக்கின்ற பழக்கம் நம்மிடம் பரவி வருகின்றது. அதனால்தான் விதையில்லாத திராட்சை, ஆளுயர ஆலமரம் என்று படைப்பை விருத்தி செய்கின்ற ஆளுமை நம்மை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. 'தாயில்லாமல் நானில்லை' என்ற கூற்று பொய்த்து விடாதா? அன்பற்ற உணவு, அனுசரணையற்ற தனிமை, பரிவற்ற கவனிப்பு, பட்டும்படாத பரிமாற்றம் இவையெல்லாம் முதியவரின் ஆயுளைக் குறைத்து விடும் என்பது உண்மையே ஆகும்.



வீடுகளே அனாதை இல்லங்களாக மாறிவிடுமானால் நாம் என்ன செய்வது? அவை இருண்ட இதயங்கள் பெருகி இருப்பதற்குரிய அடையாளங்களாகும்.

ஆரம்பத்தில் ஓடுகின்ற மான்களை துரத்தி விரட்டி வேட்டையாடுகின்ற சிங்கங்கள் கூட வயதான காலத்தில் ஓடமுடியாமல் கிடைக்கின்ற சிலந்திகளையும் எலிகளையும் சாப்பிட்டுப் பசியாற வேண்டியிருகின்றது. வயோதிகம் சிங்கங்களைக்கூட சிறுத்துப்போகச் செய்து விடுகின்றது. அவற்றைப் போன்று வயதான காலத்தில் புலன்களும் மங்கி அதிகம் படிக்கவும் முடியாமல், பார்க்கவும் முடியாமல், கேட்கவும் முடியாமல் தங்கள் அனுபவங்களை யாரிடமாவது பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுவார்கள்.

தட்டில் விழுந்ததை தின்று காலம் தள்ளும் நிலை மனித நாகரிகத்திற்கு விழுந்த மாபெரும் அடி எனலாம். காலம் மென்று துப்பிய சக்கையாக உடல் ஆகிவிட்ட பின்பு உணவோ, மருந்தோ, இனிய சூழலோ வாய்க்கப் பெறாத நிலையில் மரணம் வந்து கைகுலுக்கும் போது வாழ்ந்த திருப்தியுடன் சாக முடியாமல் போகின்றது.

இங்கே வாழும்வரை வயிறார உணவு கூடக் கொடுக்காமல், இறந்தபின் மலர் அலங்காரம் ஊர்மெச்சச் செய்வார்கள். ஊர்வலம் செய்து பட்டாசு கொளுத்துவார்கள். ஒலிபெருக்கியில் ஒப்பாரிப் பாடலை ஒலிக்கச் செய்வார்கள். வாழும்வரை அவர்களுக்குப் பிடித்தவற்றை செய்து கொடுக்காமல் படையலில் பிடித்தவற்றை செய்து வைத்துவிட்டு பின்னர் தாங்களே சாப்பிட்டுக் கொள்கிறார்கள். பளிங்கினால் கல்லறை எழுப்புகிறார்கள். செய்தித்தாளில் ஒவ்வொரு வருடமும் நினைவு நாளன்று விளம்பரம் கொடுக்கிறார்கள். இவையெல்லாம் போலியானவை. சாதலிலும் இன்னாதது இல்லை. புறக்கணிப்பு எவ்வளவு பெரிய இழப்பு புறக்கணிப்பு உதாசீனம் மரணத்திலும் பார்க்க கொடியவை. எனவே பெற்றோரை இறுதி வரை பேணி ஆதரியுங்கள்.



# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

## வயிற்றுவலிகள்

வைத்திய கலாநிதி
கே.ரி. கோபால்
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.456.9796



### Stomack Aches

சிலர் தங்களுக்கு திடீரென ஏற்படும் வயிற்றுவலியைப் பொறுக்க முடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் காணுகின்றோம். அவ்வேளையில் வீட்டு வைத்தியமுறையில் சிலவற்றைக் கையாளுகின்றனர். இதனால் பயனற்று பரிதவிப்பவர்களும் இருப்பதை அறிவோம். வயிற்றுவலி ஏற்படும்போது தாங்க முடியாமல் உள்ளி+மிளகு+உப்பு கூட்டி கசாயம் செய்தும், உள்ளிக்குளிசை, இஞ்சிச்சோடா முதலியவற்றைப் பாவித்தும் பயனற்று அவஸ்தைப்படாமல் உடனடியாக வைத்தியசாலைக்கு செல்வதே சாலச்சிறந்தது. அங்கு செல்வதினால் உடனடி சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டாலும் அதனை செய்து சுகம் பெற்று மனநின்மதியையும் ஏற்படுத்தி விடும்.

மேலும் எமக்கு என்னநிலையில் வயிற்றுவலி ஏற்படலாம் என்பதை முன்கூட்டி அறிவதினால் நற்பயன் பெறமுடியும். நாம் உண்ட உணவு சீரணிக்காமல் அசீரணநிலையிலும் வயிற்றுவலி ஏற்படலாம். மற்றும் குடல்வளரி (Appendix) அழற்சியாலும் சிறியோர் தொடக்கம் முதியோர் வரை ஏற்பட இடம் உண்டு. இவ்வலியை எவராலும் தாங்கிக் கொள்வது மிக கடினமாகும். இவ்வலியானதும் மிகவும் தனித்துவமானது. ஆரம்பத்தில் தொப்பிளைச் சுற்றியோ அல்லது முழுவயிற்றுப் பகுதியில் தோன்றலாம்.

இவ்வயிற்றுவலியானது சில மணித்தியாலத்தில் வலதுபுறத்தின் கீழ்வயிற்றில் மாத்திரம் கடுமையாக வலித்துக் கொண்டிருக்கும். இவ்வலியானது விட்டுவிட்டு ஏற்டாமல் தொடர்ந்து வலித்தன்மை இருக்கும். வலிக்கும் பகுதியில் தனது கையை வைத்துப் பார்த்தால் வலித்தன்மை கூடிக் காணப்படும். அத்துடன் அப்பகுதி தசையானது ஓரளவு தடிப்பு நிலையுடன் காணப்படலாம். இறுக்கமாகவும் தென்படும். இந்நிலையில் உரிய வைத்தியர் பார்வையிட்டு நன்கு பரிசோதித்து நோயை நிதானித்து சத்திரசிகிச்சைதான் செய்ய வேண்டும் என்றால் தங்களிடம் தெளிவாகக் கூறிக்கொள்வர். கூறியபடி சத்திரசிகிச்சை செய்யத்தவறின் வயற்றினுள் வெடித்து அதனுள் இருக்கும் கிருமிகள் வயிற்றினுள் பரவி ஆபத்தான பெரிரொனைரிஸ் (Peritonitis) ஆகிவிடும்.



இவ்வியாதி ஆரம்பத்தில் வலியுடன் ஓங்காளம், வாந்தி, மலச்சிக்கல் சாதாரணசுரம் போன்ற அறிகுறிகளும் தோன்றலாம். அதாவது உணவோடு உள்செல்லும் சில பொருட்களினால் இவ்வியாதி ஏற்படுவதாகச் சிலர் கருதுவதுண்டு. ஆனால் அப்படி கருதுவது நன்று அல்ல. உண்மையில் குடல் வளரியில் (Appendix) ஏற்படும் அழற்சியினா லே தோன்றுவதாக அறிய முடிகின்றது. நாம் பாவிக்கும் ஆகாரத்தில் மரக்கறி பதார்த்தங்களை எடுப்பது மிகநன்று.

மேலும் இன்னும் ஒரு வயிற்றுவலியும் உண்டு. நாம் நன்கு கேள்விப்பட்டிருப்போம். அதுதான் சிறுநீர்க்குழாய் அல்லது சிறுநீர் தொகுதியில் எங்கேயாவது உண்டாகும் வலியாகும். அதாவது கல் அடைப்பால் (Renal colic) சடுதியாக ஏற்படும் வலியாகும். வேதனையைப் பொறுக்க முடியாது. வயிற்றின் வலம் அல்லது இடப்புறம் ஏற்படலாம். நமது கீழ்நாரிப்பகுதி விலாவின் கீழ்பகுதி போன்ற இடங்களிலும் தென்படலாம். அல்லது வயிற்றில் தோன்றிப்பரவலாம். அத்துடன் விதை, சிறுநீர் வாயில் போன்ற இடங்களில் வலி தென்படலாம். அத்துடன் சலம் கழிக்கும் போது எரிவும் தென்படுவதும் சலம் இரத்தம் கலந்து செல்வதாக இருக்கலாம். இந்நிலை ஏற்பட்டால் தாமதியாமல் வைத்தியர்களிடமோ, வைத்தியசாலைக்கோ சென்று சுக தேகியாகிக் கொள்ளுங்கள்.

அவர்கள் நோயை நன்கு ஆய்வு செய்து நிதானித்து வலித்தன்மையை படியச் செய்து கொள்வர். பெரும்பாலும் கற்கள் தானாகவே சிறுநீருடன் வெளியாகும். வைத்தியர்கள் கருவிகள் மூலம் ஆய்வுசெய்து நோயைக் குணப்படுத்துவர்.

மேலும் பித்தக்குழாய்களில் உண்டாகும் கல்லினாலும் (Gall Stones) கடுமையான வயிற்றுவலி ஏற்படலாம். பெரும்பாலும் வயது வந்த 40 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு ஏற்படும். ஆயினும் ஆண்களுக்கும் ஏற்படலாம். சடுதியாகவும், கடுமையாகவும் வலது பக்க மேல் வயிற்றுப்பகுதியில் தோன்றும்.

(தொடர்ச்சி 25 ஆம் பக்கம்...)

ஸ்ரீ துர்க்கா மாதா ஜோதிட நிலையம்
SRI DURGA MATHA ASTROLOGY CENTER
மாஸ்டர் :- தேவராஜ
MASTER :- DEVARAJ
Kerala (Choddankiri)




ஒரு முறை விஜயம் செய்யுங்கள் உண்மை புரியும்

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் மாஸ்டர் தேவராஜ் சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்துகொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள். கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமை இலவசமாக நூல்கட்டப்படும்.

- கைரேகை • நாமநட்சத்திரம் • கல்வி உத்தியோகம்
- தொழில் வியாபாரம் • வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள் • நீதிமன்ற வழக்குகள்
- பெண்பிள்ளை பெற்றோர் பிரச்சனைகள் • திருமண யோகம்
- குழந்தைப்பாக்கியம் • கணவன் மனைவி ஒற்றுமையின்மை
- எதிரிகள் கண்ணூறு நாவூறு • ஒன்று கூடுதல்
- சர்ப்ப தோஷம் • கர்ப்ப தோஷம் • கஸ்ட நஸ்டங்கள்
- வாகனப் பொருத்தம்

WORLD FAMOUS INDIAN ASTROLOGER
I CAN HANDLE ANY KIND OF PROBLEMS
We do all kinds of Pujas

- Education & Work
- Business Problems
- Marriage Problems
- Love Problems
- Children Mistakes
- Health
- Money Problems
- Enemy Problems
- Evil Affection
- Sexual Problems
- Horoscope
- Face Reading
- Palm Reading
- Family Matters
- Husband & Wife Reationship
- Court Problems
- Law Problems
- etc..

OPEN 7 DAYS A WEEK / 647-554-5699
416-906-5959
ஒரு முறை விஜயம் செய்யுங்கள் உண்மை புரியும்
5215 Finch Ave. East, Unit #258,
Upstairs, Scarborough ON M1S 0C2
GTA Square Mall (2nd Floor) (Middlefield & Finch)

# இரத்த அழுத்தம் சீராக இயற்கை மருத்துவம்

**நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்**



C - 416.617.5721/H - 416.289.2033 after 7:00pm

## Natural Treatment for Blood Pressure

இரத்த அழுத்தம் என்பது அளவிற்குமேல் இரத்தம் இருதயத்தை அடைந்து இரத்த நாளங்களின் சுவர்களில் பாய்வதிலும், இரத்தம் சென்று திரும்புவதில் இரத்த நாளங்களில் தடையின்றிச் செல்வதில் ஏற்படும் சிரமத்தையும் குறிக்கும். இரத்த அழுத்தத்திற்கும் உணவுமுறைக்குமுள்ள தொடர்புபற்றி ஆராய்ந்தாலும் முடிவில் உணவுக்கட்டுப்பாடு இரத்த அழுத்த நோய்க்கு பெரிய அளவில் இல்லை என்றே கூறலாம்.

இப்படியாக இரத்த சுற்றோட்டத்தில் தடைகள் ஏற்பட தேவையற்ற கொழுப்புகள், கழிவுகள் இரத்த நாளங்களின் சுவர்களில் ஒட்டிக்கொள்வதும், மேலும் உடலிலிருந்து வியர்வை வெளியேறாததன் காரணமாக இரத்தத்தில் உப்பு அதிகரிப்பதாலும், நீர் அதிகமாகத் தேங்கிவிடுவதாலும், வயது முதிர்ச்சியின் காரணமாக நாளங்கள் தடித்து உட்சுவர் சுருங்கி விடுவதன் காரணமாகவும் ஏற்படுகிறது. இவை அனைத்தும் உடலியல் இயக்கம் சார்பானவை. உணவு, ஒழுக்கம், உடற்பயிற்சி என்பன தொடர்புடையவை. உடல் எடை அளவு மீறும் போதும் இரத்த அழுத்த நோய் ஆரம்பிக்கக்கூடும். இதைவிட உளவியல் காரணமாகவும் கூட இந்த நோய் தோன்ற வாய்ப்பு அதிகம். சுருங்கச் சொன்னால் உடலைவிட உளவியல் காரணங்களே இந்த நோயை விரைவாக உருவாக்கும்.



இவ்வாறு எந்தக் காரணங்களினால் நோய், வந்தாலும் ஆரம்ப நிலையிலேயே நோயைக் கண்டறிந்து சிகிச்சை முறைகளை மேற்கொண்டால் நோயிலிருந்து முற்றாக விடுபட முடியும். இப்போது இரத்த அழுத்தம் பொதுவான நோய்களில் ஒன்றாகிவிட்டது. சமூகத்தில் நடுத்தர மற்றும் வயதானவர்களிடையே இது பரவலாகக் காணப்படுகிறது. ஒருவருக்கு இரத்த அழுத்த நோய் அதிகரிக்குமானால் கீழ்க்கண்ட நோய்கள் வரலாம்.

1. இதயநோய்கள்
2. பக்கவாதம்
3. சிறுநீரகச் செயலிழப்பு
4. மன இறுக்கம் - மனநிலை பாதிப்பு

### இரத்த அழுத்த நோயில் தவிர்க்க வேண்டியவை

1. ஆட்டிறைச்சி, கோழி இறைச்சி, முட்டை என்பன
2. எண்ணெயில் வறுத்த உணவுகள், உப்பு பதார்த்தம், ஊறுகாய் வகைகள், மசாலா கலந்த உணவு வகைகள் தவிர்க்கப்பட வேண்டும்.
3. கருவாடு மற்றும் உலரவைத்த உணவுகள் மற்றும் விரைவு உணவு (Fast Food) போன்றவற்றை முடிந்த அளவு தவிர்க்கவும்.
4. முள்ளங்கி, பீட்ரூட், கரெட் போன்ற காய்கறிகளை பிரதானமாகச் சேர்க்க வேண்டும்.

### யாருக்கு இரத்த அழுத்த நோய் வரலாம்

1. பெற்றோருக்கு இரத்த அழுத்தநோய் இருந்தால் பாரம்பரியமாக பிள்ளைகளுக்கும் நடுத்தர வயதிலிருந்தே இந்நோய் வரலாம்.
2. உடல் எடை அதிகரிப்பால் (Obesity) வரலாம்.
3. முறையற்ற உணவுகள், மாமிச உணவுகள் அதிகம் உண்பதாலும் இந்நோய் வரலாம்.
4. மன உளைச்சல், அழுத்தம், பிதற்றல் (Anxity) போன்ற காரணங்களாலும் இரத்த அழுத்தம் வரலாம்.
5. புகை, மற்றும் மது பழக்கம் உடையவர்களுக்கும் இந்த நோய் வரவாய்ப்புண்டு.
6. தினமும் அடிக்கடி கோப்பி அருந்துபவர்களுக்கும் இது வரக்கூடும்.
7. சைவ உணவு உண்பவர்களுக்கும், அடிக்கடி உபவாசம் இருப்பவர்களுக்கும் குறைநிலை இரத்த அழுத்தம் வர வாய்ப்பு உண்டு. (Law Blood Presure)
8. கடைகளில் பதப்படுத்தி விற்கப்படும் பாலில் சோடியம் அதிக அளவில் இருப்பதால் இளம் வயதினருக்கும் இந்த நோய் வரலாம்.

இரத்த அழுத்தம் நோய் உடையவர்கள் குறைந்த அளவில் புரோட்டின், கொழுப்பு, சோடியம் என்பனவற்றை உணவில் உள்ளவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். அத்துடன் குறைந்த கலோரி உணவுகளைத் தேர்ந்தெடுத்து உண்ணவேண்டும்.

எளிதில் ஜீரணமாகக் கூடிய உணவுகளை உண்பதால் மலச்சிக்கல் ஏற்படாது தடுப்பதுடன் உடல் எடை அதிகரிக்காது பார்த்துக் கொள்ளலாம்.

### யோகா முறையில் இரத்த அழுத்தம் நீங்குதல்

இரத்த அழுத்தத்தை சீர் செய்ய சில இலகுவான யோகாசன பிராணாயாமப் பயிற்சிகளே போதுமானவை. இப்பயிற்சிகளை ஒரு யோகாசன ஆசிரியரின் வழிகாட்டுதலில் மிகவும் கவனமுடன் செய்து 10 வாரங்களில் பூரணமாகக் குணப்படுத்த முடியும். கடுமையான உணவுமுறை தேவையில்லை உப்பும் கொழுப்பும் குறைவான சைவ உணவு வகைகளை உட்கொண்டாலே போதுமானது.



### முக்கிய குறிப்பு

கறிவேப்பிலையை காயவைத்து பொடி செய்து தினமும் ஆகாரத்துடன் ஒரு தேக் கரண்டி 2 வேளை உட்கொண்டால் மிகவும் நன்று.



### யோகாசன அட்டவணை

1. பவனமுக்தாசனம்
2. கபாலபாதி மூச்சுப்பயிற்சி
3. பஸ்திரிகா மூச்சுப் முறை
4. உஜ்ஜயி மூச்சுப் பயற்சி
5. தனுராசனம்
6. சர்வாங்காசனம்
7. நின்ற பாதாசனம்
8. பஸ்ஸிமொத்தாசனம்
9. சாந்தி ஆசனம்

இவற்றை தினமும் 20 நிமிடமாவது காலையும், மாலையும் முறைப்படி செய்து வந்தால் இரத்த அழுத்தம் முழுமையாகச் சீரடையும்.

IMPERIAL MIGRATION

Need help to prepare to apply for Canadian PR? Call Us!
647-219-6553 Tamil
647-336-2374 English
Meet us at Carissauga Spain Pavilion
Hershey Centre, Mississauga
May 26, 27,and 28

Services:
Express Entry
Student VISA
Visitor VISA
Work Permit
LMIA
Super VISA
Spousal
Parental
PR Card Review
Citizenship

imperialmigration.com



## யாவரும் அறிந்திட இலகு தமிழில், அறிவியல்.

# அந்த மூன்று நிமிடங்கள்

## (பேரண்டத்தின் பரிணாம மாற்றத்தைக் கூறும் அழகியற் கதை)

- கனி -
416.261.1348
ptons@hotmail.ca



3. முதல்யுகம் - பிளாங் யுகம் (தொடர்ச்சி)


நாலு இயற்கை விசைகளைக் குறிப்பிட்டு இருந்தேன் அல்லவா! அவற்றினைப் பற்றி அறிந்து கொண்டு மேலே செல்வோம்.

### இயற்கை விசைகள்

ஈர்ப்புவிசை, மின்காந்தவிசை, மெலிந்த விசை, வலிந்தவிசை என்ற நான்கு இயற்கைவிசைகளும் நாங்கள் சாதாரண வாழ்வில் சந்திக்கும் விசைகளில் நின்றும் வித்தியாசப்படுகின்றன. பொதுவாகவே இழுத்தல், தள்ளுதல், உரசுதல், கயிறு போன்றவற்றில் தொங்கவிடுதல் போன்றவற்றின் போது ஏற்படுகிற விசைகள் தொடுகை போன்ற விடயங்களுடன் தொடர்புடையன. ஆனால் இந்த இயற்கைவிசைகளின் செயற்பாட்டின் போது தொடுகை என்பது தேவையில்லாததாக இருக்கிறது. இதனையிட்டு ஆச்சரியப்பட்ட விஞ்ஞானிகள், தமது ஆய்வுகளின் பயனாக அதிசயமான முடிவினைப் பெற்றார்கள். இயற்கை விசைகள் என்பவை, கண்களுக்குத் தெரியாத சின்னஞ் சிறிய துகள்களைப் பொருட்கள் தம்மிடையே தொடர்ச்சியாகப் பரிமாறிக் கொள்வதால் அதாவது கொடுத்து வாங்கிக் கொள்வதால்தான் இந்த இயற்கைவிசைகள் தொழிற்படுகின்றன என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துக் கூறியுள்ளார்கள்.

முதலில் ஈர்ப்பு விசையைப் பார்ப்போம். அயன்ஸ்ரைன் ஈர்ப்பினை ஒரு விசையாகக் கருதாத, அது வெளியின் ஒரு இயல்பாகக் காட்டினார். ஆனாலும் ஈர்ப்பினை விசையாகக் கருதுவது இன்னமும் முற்றாக அகற்றப்படவில்லை. இந்த ஈர்ப்புவிசைக்கு "ஈர்ப்பான்' (Graviton) என்ற பாரம் இல்லாத, மிகச் சிறிய துணிக்கைதான் காரணம் எனச் சில விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். இந்த ஈர்ப்பான் என்பது இன்னமும் இனம் காணப்படவில்லை. ஆனாலும், இரண்டு பொருட்களுக்கு இடையில் இந்த ஈர்ப்பான் கொடுத்து வாங்கப்படுவதாலேயே அவ்விரு பொருட்களுக்கும் இடையில் ஈர்ப்புவிசை தொழிற்படுகின்றது என்கிறார்கள். இந்த ஈர்ப்புவிசையை எவ்வளவு தூரத்திற்கு அப்பாலும் உணர முடியும்.

அடுத்தது மின்காந்தவிசை. இது மின்விசைக்கும், காந்தவிசைக்கும் காரணமாக இருக்கின்றது. போட்டோன் (Photon) என்ற பாரமில்லாத குட்டித் துகளினைப் பொருட்கள் கொடுத்து வாங்கிக் கொண்டு இருப்பதனால் இந்தவிசை அப்பொருட்களுக்கிடையே காணப்படுகிறது. இதுவும் மின்னேற்றத்தினது அல்லது காந்த இயல்பினது வலிமையைப் பொறுத்து பெரிய தூரங்களிலும் செயற்படலாம்.




மூன்றாவது மெலிந்தவிசை. இவை மிகச் சிறிய தூரங்களிலேயே செயற்படும் தன்மையது. அல்லாமலும், மற்ற இயற்கைவிசைகளில் நின்றும் வித்தியாசமானது. இங்கும் துணிக்கைகளே விசைக்குக் காரணமாக இருந்தாலும் கொடுத்து வாங்கல் நிகழ்வு ஏற்படுவதில்லை.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான வி'யங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இதனை மாறுதலுக்கான விசை என்கிறார்கள். தனிமங்களின் கதிர்வீச்சுக்கு இந்த மெலிந்த விசையே காரணம் என்கிறார்கள். W அல்லது Z போசோன்கள் என்கிற துணிக்கைகளினால், பாரமான தனிமங்கள், பீற்றா கதிர்கள் போன்றவற்றை வீசி, வேறு தனிமங்களாக மாறுகின்றன. மிகவும் குறுகிய தூர வீச்சுக்குள்ளேயே இந்த மெலிந்தவிசை செயற்படும்.

கடைசியாக வலிந்தவிசை. இயற்கையின் விசைகளுக்குள்ளேயே மிகவும் வலிமையானது. இந்த விசைதான் அணுக்கருக்களில் புரோத்தோன்களையும் நியூத்திரன்களையும் கட்டி வைத்திருக்கின்றது. பாரமான துணிக்கைகள். அதனால் மிக மிகக் குறுகிய தூரத்துக்குள் மாத்திரமே செயற்படும். இந்தப் பாரமான துணிக்கைகளை குளுஓன் என்கிறார்கள். அணுக்கருக்களின் தூரத்திற்கு அப்பால் இந்தக் குளுஓன்கள் தமது வலிமையைக் காட்ட முடியாதன.

இனி எங்களது பிளாங் யுகத்துள் மீண்டும் வருவோம். பிளாங்யுகத்தின் பின்னராகத்தான் எங்களது பேரண்டம் குமிழ் விட்டுப் பெருத்துக் கொண்டு போகிறது. இது பற்றிப் பின்னர் தெரிந்து கொள்வோம். இந்தக் குமிழ் விட்டுப் பெருத்தல் பற்றி அமெரிக்க விஞ்ஞானியான றிச்சாட் கோர்ர் (Richard Gott) என்பவர் அழகான கருத்தொன்றினைக் கூறியிருந்தார். பிளாங் யுகம் பற்றிய ஒருவித தகவலும் ஏன் இல்லை என்ற சிந்தனையின் வெளிப்பாடாக அது அமைந்திருந்தது. பிளாங் யுக விவகாரங்கள் வெளிவந்திருக்க வேண்டுமெனில் அங்கிருந்து செய்திகள் ஏதோ வடிவில் வெளிவர வேண்டும். பிளாங் யுகத்தின் போது செய்திகள் எதுவும் வெளிவரவில்லை என்பது தெரிகிறது. சரி, ஏன் வரவில்லை? இவ்வினாவிற்குப் பதிலாக, செய்திகள் அங்கே அழிவுறுகின்றன என்று கருத வேண்டியுள்ளது. அதாவது பிளாங்கின் காலத்தில், எண்ணற்ற செய்திகள் (Informations) அச்சிறிய புடவி யினுள் அழிந்து கொண்டே இருந்திருக்க வேண்டும். அதனால்தான் பிளாங் யுகம் பற்றிய ஒரு தகவலையும் எங்களினால் பெறமுடியவில்லை.

இந்த வாதம் ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ளலாம். ஏனெனில் அப்பொழுது பிரபஞ்சம் பிக்பாங் ஒருமம் என்கிற ஈர்ப்பொருமம் என்ற நிலையில் இருந்தது. ஈர்ப்பொருமத்தின் வெளிநேரம் முடிவிலியாக இருப்பதால், அதில் இருந்து ஒன்றுமே வெளிவர முடியாது இருக்கும் என பொதுச் சார்புக் கொள்கை கூறுகின்றது.

விஞ்ஞானிகள் செய்திகள் என்பவற்றை எவ்விதம் பார்க்கிறார்கள் எனப் பார்ப்போம். அது சின்ன விடயம்தான். எங்களது கணினிகளில் செய்திகள் எப்படிப் பரிமாற்றம் செய்யப்படுகின்றனவோ, அவ்விதம் தான் பேரண்டத்திலும் செய்திகள் காணப்படுகின்றன, பரிமாற்றம் அடைகின்றன. அதாவது 'ஆம், இல்லை' என்ற தொகுப்பாக, இன்னமும் சிறப்பாகக் கூறுவதெனில் '0' களினதும், '1' களினது தொகுப்பாகவே செய்திகளைப் பேரண்டத்துள் விஞ்ஞானிகள் காண்கின்றார்கள். என்னைப் பற்றிய, உங்களைப் பற்றிய, எங்களது புவி, விண்மீன்கள் என்பவை பற்றிய செய்திகள் எல்லாமும் இந்த '0' களினதும், '1' களி னது தொகுப்பாகவே பிரபஞ்சத்துள் காணப்படுகின்றன, மற்ற இடங்களுக்குச் செல்கின்றன. இப்படியான செய்திகளே, அதாவது முடிவிலி எண்ணிக்கையிலான '0' களின தும், '1' களினது அழிவுகளாகவே பிளாங் யுகத்தில் நடந்து கொண்டு இருந்தன.

இவ்வாறு செய்திகள் அழிந்து கொண்டிருக்கும் நிலையில் இருந்துதான் எங்களது பேரண்டம் முகிழ்ந்து எழுந்தது. அப்படி எழுகையில் தன்னுடன் எண்ணற்ற செய்திகளை அள்ளிக் கொண்டே முகிழ்த்தது. அப்படியான எண்ணற்ற செய்திகளினாற்றான் எங்களது பேரண்டம் இப்படியாக உருப்பெற்றது. இது ஒரு அழகான சிந்தனை என்பது எள்ளளவும் மாறுபாடில்லை. இந்தச் சிந்தனையின் தொடர்ச்சியாக இன்னொரு கருத்தும் வெளிப்பட்டது. தனியவே எங்களது ஒரு பேரண்டம் மட்டும்தான் முகிழ்விட்டு வந்திருக்க வேண்டும் என்றில்லை. முடிவிலி எண்ணிக்கையான செய்திகள் அழிந்து கொண்டு இருந்ததனால், எங்களது பேரண்டத்துடன் இன்னமும் வெவ்வேறு பல பேரண்டங்களும் காலத்திற்குக் காலம் குமிழ்விட்டு வெளிவந்திருக்க வேண்டும். ஏனெனில் எத்தனை தடவை முடிவிலி எண்ணிக்கையான செய்திகள் வெளிக்கிட்டு வெளியே வந்தாலும், இன்னமும் முடிவிலியானது குறைந்து விடாது. அதுதான் முடிவிலி என்ற எண்ணின் சிறப்பு. அதாவது வற்றாத கிணறு போன்றது. இப்படித்தான் றிச்சாட் கோர்ர் கருதினார். அதாவது எங்களது பேரண்டம் மட்டுமல்ல இன்னமும் பல பேரண்டங்கள் இருக்க வேண்டும் என்பது அவரது கருத்தாக அமைகிறது.

அடுத்த தடவையில் பல்பேரண்டம் பற்றிப் பார்த்துக் கொண்டு தொடர்வோம்.

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

*WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:*

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL • TUMOR
- FOOT PROBLEM

***HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING***

| | | | |
|---|---|---|---|
| Cough | Gout | Diabetes | Stumatitis |
| Flu | Arthritis | Cystitis | Colitis |
| Depression | P.M.S | Cancer | |
| Anxiety | Leucorrhea | Prostatitis | |
| Asthma | Migraines | Obesity | |
| Tonsillitis | Hair Loss | Hemorrhoids | |

*Also other Acute & Chronic Problems*
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537/416-291-3022**

*5200 Finch Ave, East Suite 210*
*At Middle Field, Scarborough, M1S 4Z4*

# உணர்வுகளுக்கும் எமது உடல் நிறைக்கும் உள்ள தொடர்பு

- ஞானா உருத்திரன் -

உடல்நிறை எமது உயரத்திற்கேற்ப இருக்கும்போது நாம் மனநிறைவான சுகமான வாழ்க்கையை அனுபவிக்கிறோம். நிறை கூடிய மனிதர்கள் பலவிதமான உடல்நலக் குறையை அனுபவிக்கின்றார்கள். இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் என்பது வழமையாக உடல்நிறை கூடிய மனிதர்களுக்கு வருவதைக் காணலாம்.

நிறைகுறைய விரும்பினாலும் எப்படி உடல் நிறையைக் குறைப்பது என்று தெரியாமல் பலபேர் அவதிப்படுவதை நாம் காண்கின்றோம். உணவுப் பழக்கங்கள் தான் அவர்களது உடல் நிறை அதிகரிக்கக் காரணம். ஆனால் அவர்களால் தமக்கு ஏற்படும் அளவுக்கதிகமான பசி உணவுத் தவனம் என்பவற்றைக் கட்டுப்படுத்த முடிவதில்லை.

அளவுக்கதிகமான பசி, உணவுத்தவனம் ஏன் உருவாகின்றது என்று தெரிந்தால் நாம் சுலபமாக நிறையைக் குறைக்கலாம். எமது உடம்பும் மனமும் எப்போதும் சமநிலையில் இருக்க விரும்பும். இதனைக் கோமியோஸ்ரேசிஸ் (Homeostasis) என்பார்கள். எமது உடம்புக்குத் தன்னுணர்வு உள்ளது. உடம்புக்கோ, மனத்திற்கோ அடிப்படைத் தேவைகள் குறைந்தால் அது பலவிதமான அறிகுறிகளை (Signal) வெளியிடும்.

உடம்பு குளிர்ந்தால் நடுங்கும், கூடினால் வியர்க்கும். அதுமாதிரி மனநிலை அமைதியாக இல்லையென்றால் எமது உடம்பு பலவிதமான வேறுபாடுகளைக் காட்டும். நாம் பொதுவாக வயிற்றின் அடிப்பகுதியில் இதனை உணர்வோம்.



(Gut feeling, Intution). எமது மனதின் அடிப்படைநிலை நிம்மதி, சந்தோஷம் எப்போது அதன்நிலை குறைகிறதோ அப்போது அதனை நிவர்த்தி செய்ய உடம்பு முயற்சி செய்யும்.

நீங்கள் பயப்படும்போது அல்லது கோபப்படும்போது உங்கள் வயிற்றுப் பகுதியில் அதனை உணர்வது இல்லையா? அதை நாம் உணர்ந்து கோபப்படுகிறோம் என்று அறிந்து கொள்கின்றோம். அந்த கோபச் சக்தியை (Energy) உடம்பிலிருந்து வெளிவிட வேண்டும். அப்படிச் செய்யாதபோது உடம்பு இன்னுமொருவிதமாக அதனை வெளிவிடுகிறது. அதுதான் அளவுக்கதிகமான பசிக்கு (Appetite) காரணம். பெரும்பாலான ஆராய்ச்சிகளில் நிறைகூடிய மனிதர்களும், அளவுக்கதிகமாக உழைப்பவர்களும் மிகவும் மனவருத்தத்தில் (Stress) இருப்பதாகக் கண்டு பிடித்துள்ளார்கள்.

உணவு எப்படி மன அமைதியைத் தர முடியும் என்று பார்த்தால் எமது உணவு வகைகளில் உள்ள உப்புகள், இரசாயன இணைப்புகள் எமது மூளையில் செய்யும் தாக்கம் மனநிம்மதியைத் தர உதவுகிறது. இந்த மூளையில் இரசாயன உப்பு மிகவும் முக்கியமான உப்பு. நாம் சந்தோஷமான உணர்வை உணர அதேபோல் பாலில் இருக்கும் சீனி வகையான உப்பு எமக்கு திடீர் சக்தியைத் தரும். அதனால் மனிதர் சந்தோஷமாக இருக்க ஐஸ்கிறீம் (Ice cream) சாப்பிடுவார்கள். பெரும்பாலானவர்கள் கவலையாக இருந்தால் நிறைய ஐஸ்கிறீம் சாப்பிடுவார்கள். இதன் காரணமாக ஐஸ்கிறீம் மனிதர்களின் மிகவும் விருப்பமான உணவாக உள்ளது.

உணர்வுகளுக்கு சாப்பிடுபவர்கள் பெரும்பாலும் சிலவகையான உணவுகளை மாத்திரமே நாடுவார்கள். ஏன் அப்படி நாடுகிறார்கள் என்றால் அவர்களுக்குத் தேவையான உப்புகள் அந்த உணவுகளில் இருப்பது தான் காரணம். நாம் முதலில் எந்த உணர்வுகள் பெரும்பாலும் தாக்கத்தை உடம்பில் ஏற்படுத்துகின்றன என்று பார்ப்போம்.

ஞானா உருத்திரன். மருத்துவ துறையில் கல்வி கற்று உயிரியல் மருத்துவ (Bio Medicine) துறையில் முது நிலை பட்டப் படிப்பை முடித்து இருக்கிறார். Healing மற்றும் energy work போன்றவற்றை முழுமையாகப் படித்து இத்துறைகளில் மக்களுக்காக சேவை செய்து வருகிறார். தகவல்களை இணையத் தளத்தில் காணலாம்.
http://gnanauruthiren.com/tamil/

மனவருத்தத்தில் (Depression) இருக்கும் மனிதர் 250 மடங்கு மேலதிகமாக சாப்பிடுவதாகக் கண்டு பிடித்துள்ளார்கள். நிறை கூடிய 50 மனிதரின் மன நிலையைச் சோதித்தபோது ஐந்து மடங்கு பேர் மேலதிகமான ஆழ்ந்த வருத்தத்தில் அல்லது மனநிம்மதி குறைந்தவர்களாக இருப்பதை ஆராய்ச்சியில் கண்டு பிடிக்கப்பட்டது. (Depression or other disorder )

இந்த ஆராய்ச்சிகள் அதனை எமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன. ஐந்து மிகவும் முக்கியமான உணர்வுகள் பெரும்பாலானவர்களை அதிகமாகச் சாப்பிட ஊக்குவிக்கின்

(தொடர்ச்சி 33ஆம் பக்கம்...)

WORLD FAMOUS ADIVASI TRIBAL CHIEF
NOW AT YOUR SERVICE
No side Effects
P V RAJU (BAMS)
Vaidhya
Herbal & Ayurvedic
* பரம்பரைபரம்பரையாக இத்தொழிலை செய்து வருகின்றோம். நோயை கண்டறிந்து வைத்தியம் செய்கின்றோம்.
* சகயா இரக்கல் மூலிகை எங்களிடம் உள்ளது.
100 வீதம் நம்பகத்தன்மை கொண்ட பாரம்பரிய இந்திய சிகிச்சை முறை
நாடித்துடிப்பு பரிட்சிக்கப்படும். தேகப்பயிற்சி மற்றும் ஊசி ஆகியவை தேவையில்லை
உங்கள் ஒவ்வொரு பிரச்சனைக்கும் இங்கே தீர்வு உண்டு
ஆஸ்த்துமா | ஒவ்வாமை
தோல் வியாதிகள் | பொறாய்சஸ்
பாரிச வாதம் | உடல் பலவீனம்
முட்டு வலிகள் | முதுகு வலி
சிறுநீரக பிரச்சனைகள் | சிறுநீர் தொடர்பான பிரச்சனைகள்
வாயு சிக்கல்கள் | அல்சர் வியாதி
இரத்தக் கொதிப்பு | நீரிழிவு நோய்
பெண்கள் நோய்கள் | சிறுவர்களுக்கான நோய்கள்
பாலியல் தொடர்பான பிரச்சனைகள்... இன்னும் பல
வாரத்தில் எழு நாட்களும் காலை 10.00 தொடக்கம் இரவு 8.00 மணிவரை திறந்திருக்கும்
Member of All India Alternative Medical Academy (Regd.)
Member of All India Sidha Doctors Association (Regd.)
Member of All India Alternative Medical Practitioner (Regd.)
Adivasi Tribal Chief Herbal Medicines Practitioner (Regd.)
Regd. No. 12222

100% GENUINE TRADITIONAL INDIAN TREATMENT
SAHAJA AYURVEDIC (HERBAL) MEDICINES CENTRE



P V RAJU (BAMS)
Vaidhya
PULSE CHECKUP AVAILABLE



TREATMENTS GIVEN FOR
Asthma | Joint Pains | Gas Trouble
Allergy | Back Pain | Ulcer
Skin Problems | Artheritis | Blood Pressure
Psoriasis | Weight Loss | Diabetes
Hair Problems | Weight Gain | Ladies Problems
Paralysis | Kidney Problems | Childrens Problems
Weekness | Urinary Problems | Sexual Problems
YOU WILL GET PERMANANT RELIEF FROM ALL YOUR HEALTH PROBLEMS
Certified Member of All India Sidha Doctors Associaton (Regd.)
Certified Adivasi Tribal Chief Herbal Medicines Practitioner (Redg.)
Excercises, Belts & Massages are Not Required
FOR EVERY PROBLEM HERE IS A SOLUTION
100% NO SIDE EFFECTS
100% SOLUTIONS GUARANTEE
Call for An Appointment
Vaidhyar : P V RAJU
2619 Eglinton Ave East,
Scarborough ON M1K 2S2
(Upstairs Abbirami - Brimley & Eglinton)
Mobile: 416-617-6364
We Can Speak Tamil Hindi English
Privacy & Confidenciality is provided
Open 7 Days a Week 9.00 a.m. to 9.00 p.m.

# ஒன்ராரியோ...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

sity of Toronto) இல் விரிவுரையாளராக இருக்கும் Hugh Segal ஆவர்.

ஒன்ராரியோ அரசின் இந்த அடிப்படை வருமானத்திட்டத்தை எதிர்க்கட்சிகள் வரவேற்றுள்ளன. ஒன்ராரியோ பழமைவாதக் கட்சியின் தலைவர் Patrick Brown இத்திட்டத்தை வரவேற்றுப் பேசுகையில் பழமைவாதக் கட்சியின் ஆலோசகரான Hugh Segal வடிவமைத்த இத்திட்டத்தில் தனக்கு நிறைந்த நம்பிக்கை உள்ளது எனவும் அவர் ஒரு சிறந்த அறிவாளியும் நுணுக்கம் வாய்ந்த கணக்காளருமாவார் என்றார்.

புதிய ஜனநாயகக்கட்சியின் தலைவி Andrea Horwath இத்திட்டம் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் இது ஒரு மிகவும் நல்ல திட்டம் எனவும் புதிய ஜனநாயகக் கட்சி நீண்டகாலமாக இவ்வாறான ஒரு திட்டம் தேவை எனக் கூறி வந்ததாகவும் கூறினார். ஆனால் இத்திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட 'அடிப்படை வருமானம்' ஒன்ராரியோ மாகாணத்தின் வறுமைக்கோட்டு வருமானத்தின் 75% ஆக இருப்பது ஏழை மக்களின் அடிப்படை வசதிகளை வழங்கப் போதுமானது அல்ல என்று கூறிய அவர் இந்த அடிப்படை வருமானத்தின் அளவை வறுமைக்கோட்டு வருமானம் அளவாக ($22,653) உயர்த்த வேண்டும் என வலியுறுத்தினார்.

இந்த 'அடிப்படை வருமானம்' கொடுப்பனவு Hamilton area மற்றும் Thunder Bay இல் இருந்து தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கு இந்தக் கோடை காலத்தில் ஆரம்பிக்கப்படும், Lindsay இல் இருந்து தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கு இந்த இலையுதிர் காலத்தில் ஆரம்பிக்கப்படும் எனவும் ஒன்ராரியோ அரசு தெரிவித்துள்ளது.

இத்திட்டதை ஒன்ராரியோ மாகாணம் முழுவதும் அமல்படுத்தினால் அது சமூகநல உதவிப்பணம் கொடுப்பனவு திட்டத்தை முற்றாக நிறுத்துவதற்கு உதவுவதோடு அதை நிர்வகிக்கும் செலவை அரசுக்கு மீதப்படுத்தும். இதனால் மாகாணம் முழுவதும் அடிப்படை வருமானத் திட்டத்தை அமல்படுத்துவதால் வரும் செலவு அரசுக்கு சமூகநல உதவிப்பணம் மற்றும் அதை நிர்வகிக்கும் செலவுகளுடன் ஒப்பிடும்போது குறைவாகவே இருக்கும் என இத்திட்டத்தை ஆதரிப்போர் கூறுகின்றனர். ஏனெனில் 'அடிப்படை வருமானத்திட்டத்தை' அமல்படுத்த மிகவும் குறைந்த அளவு அரச அதிகாரிகளே தேவைப்படுவர். சமூகநல உதவித்திட்டம் போல் நீண்ட விசாரணைகள்,



விண்ணப்பப்படிவம் நிரப்புதல் மற்றும் சமூகநல உதவி பெறுபவர்களை கண்காணித்தல் போன்ற வேலைகள் அடிப்படை வருமானத் திட்டத்திற்குத் தேவையில்லை.

அமெரிக்க மக்கள் சபை ஆய்வாளரான Richard Pereira தெரிவிக்கையில் 'அடிப்படை வருமானத்திட்டத்தை' ஒரு அரசு, நாடு முழுவதும் அமல்படுத்தினால் அந்த அரசு பல மில்லியன் டொலரை மீதப்படுத்தும் என்கிறார். ஏனெனில் இவ்வாறு ஒரு அடிப்படை வருமானத்திட்டம் இருந்தால் அரசுக்கு சமூகநல உதவிப் பணம் வழங்குதல் (Welfare), வயோதிபர் களுக்கு வழங்கும் பண உதவி (Old age security system), குறைந்த சம்பளப் பணத்தின் அளவை தீர்மானிக்கும் திட்டம் (Minimum wage), வேலை இழந்தோர் காப்புறுதித் திட்டம் (EI) மற்றும் பல திட்டங்களும் அவற்றை நிர்வகிப்போரும் அரசுக்கு தேவையற்றதாகி விடும் என்கிறார்.

இவ்வாறான ஒரு 'அடிப்படை வருமானத்தை' எதிர்ப்பவர்கள் கூறும் முக்கிய காரணம் 'நீங்கள் வருடாந்த வருமானம் ஒன்றை உத்தரவாதமாக வழங்கினால் மக்கள் வேலைக்குப் போவதை நிறுத்தி விடுவார்கள். அவர்களை வேலைக்கு போக ஊக்குவிக்கத் தேவையான காரணம் இல்லாமல் போய்விடும்' என்கின்றனர். அதனால்தான் ஒன்ராரியோ அரசு வறுமைக் கோட்டு வருமானத்தின் அளவை அடிப்படை வருமானத்தின் அளவாக வைக்காமல் அதன் 75% த்தை அடிப்படை வருமானத் தின் அளவாக்கியிருக்கலாம்.

# மீதொட்டமுல்ல...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

கையெழுத்திடுவதும், புதிய அறிவியல் தொழில் நுட்பங்கள் குறித்து பேசுவதுமாக காலத்தை கடத்துகின்ற தலைவர்கள் சொந்த நாட்டில் வாழும் மக்களின் பாது காப்பு மற்றும், அவர்களின் வறுமையைப் போக்கி வாழ்வாதாரத்தை உயர்த்தும்



பணிகளுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும்.

உலகின் பெரிய ஜனநாயக நாடு என்று புகழப்படும் இந்தியா, நவீன தொழில் நுட்பங்கள் குறித்து அதிகம் பேசி வருகின்றது. விண்வெளி ஆய்வுகள் பற்றி யும் நவீன ஏவுகணை தயாரிப்பு குறித்தும் பெருமை கொள்கின்றது. ஆனால் வெறும் கைகளால் மலம் அள்ளும் தொழிலாளர்கள் இந்தியாவில்தான் உள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்ததில் ஏற்பட்ட உயிரிழப்பு, உடமை இழப்பு என்பவற்றிற்கும் அப்பால் மோசமான, தொற்று நோய்களைப் பரப்பும் அந்த சூழலில் மக்கள் இவ்வளவு காலமாக குடியிருந்து வந்துள்ளார்கள் என்பதை நாம் இங்கு கவனத்தில்கொள்ள வேண்டும். அந்த மக்களுக்கான மாற்றுக் குடியிருப்பு ஒன்றை இலங்கை அரசாங்கங்கள் ஏன் முன்னரே ஏற்படுத்தவில்லை என்கின்ற கேள்வியும் இங்கு எழுகின்றது.

# நாமும்...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

வருடங்கள் முழு நேர மாணவனாக இருந்தாலும் திரும்பப் பெறலாம்.

- மேலும் ஆதனம் வாங்கியவர் ஒன்ராரியோவில் குறைந்தது ஒரு வருடம் சட்டப்படி தொழில் புரியக்கூடியவராக இருந்தாலும் செலுத்திய பணத்தை திரும்பப் பெறக் கூடிய வழிமுறைகளும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இதுபோன்ற அல்லது வேறுவிதமான வெளிநாட்டு ஆதனம் வாங்குபவர்கள் மீது இறுக்கமான செயல்பாடுகளை அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், கொங்கொங் போன்ற நாடுகளும் வன்கூவரும் கொண்டு வந்தன. இந்நடைமுறையால் அரசுகள் ஓரளவு வெற்றியும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பெற்றுள்ளன என்பதும் உண்மையே.

## வாடகை அதிகரிப்பு

ஒன்ராரியோ மாகாண முதல்வர் கத்லீன் வின் இன் அறிவிப்புகளில் இன்னொன்று தால் ரொறான்ரோவை விட்டு வெளி மாகாணங்களுக்குச் சென்றனர். இவ்வகையான பலரின் சோகக்கதைகளை ரொறன்ரோ ஊடகங்கள் வெளிக்காட்டியிருந்தன.

## Vacancy Tax

விலை ஏறும்போது அதனை விற்று ஆதாயம் பெறலாம் என்ற ஒரு நோக்கத்திற்காகவே வாங்கிய பல வீடுகள், மனைகள் ரொறன்ரோவையும் அதனைச் சுற்றியுள்ள பகுதியிலும் மூடப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றன.

இவ்வாறு வாங்கிய வீடுகள், வாடகைக்கு கொடுக்காமல் மூடி வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான வீடுகளிற்கு Vacancy Tax ஐ அறவிடக்கூடிய வசதியை அந்தந்த உள்ளூராட்சி அரசுகளுக்கு மாகாண அரசு வசதி செய்து கொடுத்துள்ளது. இவைபற்றிய முழுத் தகவல்களும் இதுவரை வெளிவரவில்லை. எனினும் இதன் தாக்கம் நிச்சயம் உடனடியாக ஏற்படலாம். சிறிய காலத்திற்குப் பின்பே உண்மையான நிலைமை தெரிய வரலாம்.



இந்த 15% வரி என்பது உள்ளூரில் இருக்கும் ஆதனம் வாங்கும் Speculators ஐ பாதிக்காது என்பதும் கவனிக்கக் கூடியது. இன்றைய காலகட்டத்தில் உள்ளூர் Speculators உம் விலை அதிகரிப்பிற்கு முக்கிய காரணங்களில் ஒன்று.

வீட்டு முதலாளிகள் தமது வாடகையாளர்கள் மீது வாடகை அதிகரிப்பை கட்டுப் படுத்துவது. இதன் அதிகப்படி வாடகை அதிகரிப்பு வருடத்திற்கு 2.5% ஆகும். ஏற்கனவே சில வீட்டு உரிமையாளர்களில் அளவிற்கு அதிகமாக வாடகை அதிகரித்த

# மக்களின்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

காணாமலாக்கப்பட்டோர் உயிருடன் இல்லை என்பதை அரசாங்கம் ஒரே முடிவாக அறிவிக்குமானால் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை நீதி விசாரணை நடத்தி வெளிப்படுத்த வேண்டும். ஆனால், குற்றவாளிகளான படையினரை பாதுகாக்கும் வழிமுறைகளையே அரசாங்கம் தேடிக் கொண்டிருக்கின்றது.

எனவே, தொடரும் மக்களின் போராட்டமும், நடைபெற்ற பாரிய ஹர்த்தால் வெளிப்படுத்தியிருக்கும் செய்தியும்



உலகின் கவனத்திற்கு செல்ல வேண்டும். ஒரு காலவரையறைக்குள் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு ஒன்றை அரசாங்கம் முன்வைக்க சர்வதேச அழுத்தங்கள் அதிகரிக்கப்பட வேண்டும்.

# அறிவியல் கதிர் - அரிசி உமியிலிருந்து ஆற்றல்

**- பேராசிரியர் கே. ராஜு-**

இந்தியாவின் வேளாண்மைக் கழிவுகளில் உமி பிரதானமானது. நெல்லிலிருந்து அரிசி தயாரிக்கும்போது உமி துணைப் பொருளாகக் கிடைக்கிறது. மஞ்சள் பழுப்பு நிறத்தில் உள்ள அரிசியின் மேலோடுதான் இது. எடை குறைவானது. ஆசியாவில் உற்பத்தியாகும் 770 மில்லியன் தொன் உமியில் 120 மில்லியன் தொன் இந்தியாவில் மட்டுமே தயாராகிறது. உமியின் வர்த்தகப் பயன்பாடு குறித்து விவசாயிகளிடையே நிலவும் அறியாமையின் காரணமாக உமி வேளாண்மைக் கழிவாகக் கருதப்படுகிறது.

உமியை எரிப்பது அல்லது குப்பைக் கழிவாகக் கொட்டுவது என்ற நடை முறையே உலகம் முழுதும் உள்ள விவசாயிகளிடம் நிலவுகிறது. உமியை எரிப்பதால் வெளியிடப்படும் சல்ஃபர் டையாக்சைட், கார்பன் மொனாக்சைட், கார்பன் டையாக்சைட், ஓசோன், மீத்தேன், நைட்ரஜனின் பல்வேறு ஒக்சைடுகள், கார்பன், எளிதில் ஆவியாகக் கூடிய கூட்டுப் பொருட்கள், வாயுத் திரள்கள் ஆகியவை காற்றுமண்டலத்தில் கலக்கின்றன. இதனால் காற்று மாசுபடுகிறது. மனிதர்களின் உடல்நலத்திற்குப் பாதிப்பு ஏற்படுகிறது. பருவநிலை கெடுவதற்கு இந்த வெளியீடுகளும் காரணமாகின்றன. கணிசமான உயிரிப் பொருட்கள் அடங்கிய உமியை திறந்தவெளியில் கொட்டும்போது, அந்தக் குவியல் சிலசமயங்களில் தானே தீப்பற்றிக் கொள்கிறது. இதனாலும் காற்று மாசுபடுகிறது. இயற்கை வளங்கள் அழியவும் பக்கத்தில் உள்ள வீடுகள், பொருட்கள் தீப்பற்றிக் கொள்ளவும் நேரிடுகிறது. உமியைக் குவித்து வைப்பதால் பூச்சிகளும் எலிகள் போன்ற பிராணிகளும் பெருகி பொது சுகாதாரம் கெடுகிறது.

உமியை இப்படி வீணடிப்பதற்குப் பதிலாக கீழ்க்கண்ட பயனுள்ள வழிகளில் உபயோகப்படுத்தலாம்.

• உயிர்த்திரள் ஆற்றலை (biomass power) உற்பத்தி செய்யும் புதுப்பிக்கக் கூடிய ஆற்றலை உருவாக்க உமியைப் பயன்படுத்தலாம். கிராமங்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சி, வேளாண் வளர்ச்சி, ஆற்றல் உற்பத்தி ஆகியவற்றுக்கு இது துணை புரிகிறது.

• விதைகள், உமி அல்லது வைக்கோல், இலைகள், மரப்பட்டைகள், சிறிய மரத் துண்டுகள் போன்ற பல்வேறு தாவரப் பொருட்களை தாவரங்களின் அடிப்பகுதியில் குவித்து வைத்தால் களைகள் உருவாவதைத் தடுப்பது, மண்ணின் வெப்ப நிலையைக் கட்டுக்குள் வைப்பது, மண்ணின் ஈரப்பதம் ஆவியாவதைக் குறைப்பது போன்ற நன்மைகள் கிட்டும். அவை சிதை வடையும் போது மண் வளம் செழிக்கும்.

• உமியை வைத்து உயிரி எத்தனால் தயாரிக்க முடியும். உயிரி எத்தனால் எதிர் காலத்திற்கான மாற்று எரிபொருட்களில் முக்கியமானது. உமியிலிருந்து செலவு அதிகமின்றி உயிரி கார்பன் தயாரிக்க முடியும். கழிவுநீர் சுத்திகரிப்பில் இந்த கார்பனைப் பயன்படுத்த முடியும். காற்று குறைவாக அடைக்கப்பட்டுள்ள உருளைவடிவக் கொள்கலன்கள், வளிமமாற்றிகள் (gasifiers) என அழைக்கப்படுகின்றன.
இவை உமியை பல்வேறு வாயுக்களாக மாற்றப் பயன்படுத்தப்படுகின்றன. அப்படி மாற்றப்பட்ட வாயுக்களில் கார்பன் மொனொ



க்சைட், ஹைட்ரஜன், மீத்தேன் ஆகிய மூன்றும் எளிதில் தீப்பற்றக் கூடியவை என்பதால் அவற்றை சமையல் வாயுவுக்குமாற்றான எரி பொருட்களாகப் பயன்படுத்த முடியு ம்.

உமிச் சாம்பலின் பயன்கள் :

> உமியின் சாம்பலில் கணிசமாக உள்ள கார்பனிலிருந்து திறன்சேர் கரி (activated charcoal) தயாரிக்க முடியும்.

> உமிச் சாம்பலிலிருந்து பொசோலனா சிமெண்ட் தயாரிக்க முடியும். வர்த்தக சிமெண்ட் துகளின் அளவு 35 மைக்ரோன்கள் (ஒரு மைக்ரோன் என்பது 1/1000 மில்லிமீட்டர்) இருக்கும். பொசோலனா சிமெண்ட் துகளின் அளவு 25 மைக்ரோன்கள்தான். கொங்க்ரீட் இடைவெளிகளை நிரப்ப வர்த்தக சிமெண்டைவிட பொசோலனா சிமெண்ட் மேலானது. மலிவானதும் கூட

> எஃகுத் தொழிலில் சூடான செங்கற்கள் (furnace bricks) தயாரிக்க உமிச்சாம்பல் பயன்படுகிறது. இந்த செங்கற்கள் 1450 டிகிரி சென்டிகிரேட் வரை உள்ள மிக அதிக வெப்பநிலையைக் கூடத் தாக்குப் பிடிக்க முடியும்.

> சேமித்து வைக்கப்படும் உணவுப் பொருட்களை பூச்சிகளிலிருந்து பாதுகாக்க உமிச் சாம்பலைப் பயன்படுத்த முடியும். மின்சாரத்தின் உதவியின்றி உமிச் சாம்பலைப் பயன்படுத்தி அசுத்தமான குடிநீரைச் சுத்திகரிக்க முடியும். உமிச் சாம்பலைப் பயன்படுத்தி வளர்ப்புப் பிராணி களுக்குப் பொருத்தமான படுக்கைகள் தயாரிக்க முடியும். உமிச்சாம்பலிலிருந்து தயாரிக்கப்படும் தட்டு, சல்பர் டையாக் சைடை நன்கு உறிஞ்சக்கூடியது. அதை நிலக்கரி கொதிகலனில் கந்தக நீக்கியாகப் பயன்படுத்த முடியும்.

பூமி சூடேறுவதைத் தடுக்க இன்று பல்வேறு பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டிய சிக்கலான காலகட்டத்தில் இருக்கும் நமக்கு பசுமை ஆற்றலைப் பெறுவதற்கு உமியும் அதன் சாம்பலும் கைகொடுக்கத் தயாராக இருக்கின்றன. அதிகம் செலவு வைக்காத எளிதில் கிடைக்கும் இப்பொருட்களைப் பயன் படுத்திக்கொள்வோம்.

சயன்ஸ் ரிப்போர்ட்டர் -2016 ஜூன்



## Math tutorial 341

Answers to tutorial 340

1)Since 4 students belong to neither club , there are 29 students who belong to the mathematics club ,the science club or to both clubs.The number belonging to the math group ,or the science club or both is 18+17 =35 .But since there are 29 members in total ,the number belonging to both clubs is 35-29=6.

2)There are $2^5$=32 possible outcomes since every coin has 2 sides.Of these the only ones not meeting the requirement have no head or exactly one head .There is only one way in the first case and 5 ways in the second case . Hence the probability is [32-(1+5)]/32 =13/16

3)O miting the B's there are 3A's ,2C's ,2D's to arrange ,and there are (7!)/(3! 2! 2!) arrangements.There ae 8 spaces to insert the 3B's ,this can be chosen in 8 choose 3 ways. Total number of arrangements is (7!)/(3! 2! 2!)x56 =11760 ways

4)$P=16P_0$, $16P_0=P_0(2)^{T/5}\cdot 16$ $=2^{T/5}$,T=20

Tutorial 341(Questions)

1)At present the sum of the ages of a father and his son is 33 years.Find the smallest numberof years until the father's age is4 times the son's age for( gr 7&8)

2) A light flashes every 6 minutes and a bell rings every 8 minutes.If the light flashes as the bell is ringing, then give the smallest number of minutes which must elapse before this re-occurs(for gr 8&9)

3)The line y=8x+b is tangent to the curve $y=2x^2$, find the point of tangency and the value of b(for gr 12)

4)Find a unit vector that is parallel to xy plane and perpendicular to4i-3j+k (for gr12)

By Mr S.F.Xavier(Teacher)
tel6473409490/4167322228

# பெப்சி நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி - இந்திரா நூயி

பாலினப் பாகுபாடு நம் உலகின் கிட்டத்தட்ட ஒவ்வொரு மூலையிலும் வியாபித்து இருக்கும் இக்காலத்தில், உலகின் நான்காவது பெரிய நிறுவனத்தின் மேல் நிலையை அடைந்த ஒரு பெண்ணின் கதையை நாம் இப்போது பார்ப்போம்.

இந்திரா நூயி, பெப்சிகோ வின் தலைமை நிர்வாக அதிகாரி. அமெரிக்கக் கனவுகளின் சாராம்சத்தை விளம்பரப்படுத்தக்கூடிய வெற்றிக் கதையின் கதாநாயகி ஒரு தமிழ் பெண். இவர் கடந்து வந்த பாதையின் வளர்ச்சியை பார்த்து நாம் வியக்க வேண்டும். உங்களுக்கு ஒரு கனவு இருக்கிறது என்றால், நீங்கள் யார், எங்கிருந்து வருகிறீர்கள் எதுவுமே ஒரு பொருட்டில்லை, உங்களின் தேவை எல்லாம் அக்கனவை அடைய மன உறுதியும் தீர்மானமும் மட்டுமே என்பதை நிரூபித்தவர் அவர். ஆண் ஆதிக்கம் நிறைந்த வர்த்தக உலகில் தனது கனவுப் பாதையில் வந்த தடைகளையும், எதிர்ப்புகளையும் உடைத்து எறிந்து தற்போது 66 பில்லியன் டொலர் வருட வருமானத்தை ஈட்டும் உலகளவில் இருக்கும் ஒரு வர்த்தக சாம்ராஜியத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்.

இந்திரா நூயி 1955 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 28 திகதி சென்னையில் ஒரு பழமைவாத தமிழ் குடும்பத்தில் பிறந்தார். அவருடைய தந்தை ஹைதராபாத் ஸ்ரேற் வங்கியில் பணிபுரிந்து வந்தார். அவரும் அவருடைய சகோதரியும் குழந்தை பருவத்திலேயே தாயினால் வளர்க்கப்பட்டவர்கள். அவர்களது தாயார் எப்போதும், வளர்ந்த பின் என்ன செய்ய விருப்பம் என அவர்களைக் கேட்டு சிறந்த பதிலுக்குப் பரிசும் வழங்குவார். இது இந்திராவை, வளர்ந்த பிறகு என்னவாக ஆகவேண்டும் எனக் கடுமையாகச் சிந்திக்கத் தூண்டியது.

மட்ராஸில் உள்ள ஹோலி ஏஞ்சல்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளியில் கல்வி பயின்றார். பின்னர் மட்ராஸ் கிறிஸ்துவ கல்லூரியில் இயற்பியல், வேதியியல் மற்றும் கணிதப் பாடங்களில் இளங்கலைப் பட்டம் பெற்றார். அவரது உறுதி மற்றும் விடாமுயற்சியால் மேற்கு வங்கத்தின் தலைநகரான கல்கத்தாவில் உள்ள மதிப்புமிக்க இந்தியன் இன்ஸ்ரிரிடியூட் ஒஃப் மனேஜ்மென்ரில், போஸ்ற் கிராஜுவேற் டிப்ளோமா மனேஜ்மென்ரில் பெற்றார்.

பின் அவர் ஜோன்சன் ரூ ஜோன்சன் மற்றும் மேட்டூர் பியர்ட்செல் நிறுவனங்களில் இரண்டு வருடங்கள் வேலை செய்தார். பின்னர் உயர் கல்வி கற்க, சிறிய கையிருப்புடன் அமெரிக்காவுக்குச் சென்று ஜேல் ஸ்கூல் ஒஃப் மனேஜ்மெண்ட்டில் முதுநிலை பட்டம் பெற்றார். ஜேல் இல் தனது படிப்பினை தொடர, அவர் இரவு முழுவதும் வரவேற்பாளராகப் பணியாற்ற ஆரம்பித்தார்.

தான் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணத்தைக் கொண்டு, தன் முதல் ஸூட்டை வாங்கியேலில் முதுநிலைக்குப் பிறகு வேலைக்கான முதல் நேர்முகத்தேர்விற்கு அணிந்து சென்றார். அவரின் கால்சட்டை அவர் கணுக்கால் வரை இருந்ததால் அவர் அந்த நேர் முகத்தேர்வில் நிராகரிக்கப்பட்டார்.



மனம் தளர்ந்த அவர், தன் யேல் பேராசிரியரின் அறிவுரையின்படி அவருக்கு வசதியாக உள்ள உடையான புடவையை அடுத்த நேர்முகத்தேர்விற்கு அணிந்து சென்று வேலையைப் பெற்றார்! அவர் சிறு வயதிலேயே தான் யார் என்பதை அறிந்து, தன்னை அவ்வாறே வெளிப்படுத்திக் கொள்வதையும் கற்றார். அப்போது முதலே அவர் “தன் இயல்பில் இருப்பது” என்ற தத்துவத்தைப் பின்பற்றி வருகிறார். அவர் போஸ்டன் கொன்சல்ரிங் குறுாப்பில் பணிபுரியத் தொடங்கினார். முதலில் அவர் ஒரு பெண் என்பதால் அவருடைய மதிப்பை நிரூபிக்க அவரது ஆண் சகாக்களை விட அதிகம் உழைக்க வேண்டியிருந்தது. இரண்டாவது, அவர் ஒரு அமெரிக்கரும் இல்லை. இவ்விரு காரணங்களுக்காக அவர் தரத்தில் எவ்வித சமரசமும் இன்றித் தன் சக ஊழியர்களை விட கடினமாக உழைத்தார்.

ஆனால் அவர் அத்துடன் தனது தொழில் வாழ்வின் வளர்ச்சியை நிறுத்திக்கொள்ளவில்லை. ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, அவர் பெருநிறுவன மூலோபாயம் மற்றும் திட்டமிடல் துணைத் தலைவர் மற்றும் இயக்குநராக மோட்டோரோலாவில் சேர்ந்தார். நான்கு ஆண்டுகளுக்கு மேல் ஏசியா பிரவுன் பொவெரியின் (சூரிச் தொழில் துறை நிறுவனம்) அமெரிக்க வணிகத்தைக் கையாண்ட மனேஜ்மெண்ட் குழுவில் இருந்த பின்னர், அவர் 1994ஆம் ஆண்டு பெப்சிகோவில் சேர்ந்தார். பல்வேறு பொறுப்புகளில் நிறுவனத்திற்குச் சேவை செய்து அவரது கடின உழைப்பில் மட்டுமே வளர்ந்து, பின்னர் 2001 இல் பெப்சிகோவின் தலைமை நிதி அதிகாரி மற்றும் தலைவர் ஆனார். மேலும் அவர் இயக்குர் குழுவிலும் இருப்பார் என அறிவிக்கப்பட்டது. அவர் அந்தச் செய்தியை கேட்டவுடன் பெருமகிழ்ச்சியுடன் தான் குடும்பத்தாரிடம் பகிர விரும்பினார் (தாயார், கணவர் மற்றும் இரு மகள்கள்). வீட்டை அடைந்தவுடன் தன் அம்மாவிடம் ஒரு சிறந்த செய்தி பகிர இருப்பதாகச் சொன்னார். ஆனால் அவரின் அம்மாவோ மிகச் சாதாரணமாக அமைதி

(தொடர்ச்சி 25 ஆம் பக்கம்...)

## EDUCATION

### Review Questions17-9

➢ **CALCULUS & VECTORS 12**

(i) Find the exact value,

$$\lim_{x\to\infty}\left(1+\frac{2}{5x}\right)^{\frac{5x}{8}}$$

(ii)

Find $$\lim_{n\to\infty}\frac{\sqrt{x^4+1}-2x^2-1}{x^2}$$

(iii) A truck travels at 108km/h over an east-west overpass highway 10m high. If a car passed under the over pass 2 seconds before towards south (north-south road) how close do car and truck come to each other in their travelling.

➢ **PHYSICS 12 & IB**

A car travelling up at a steady speed of 50km/h an inclined road as shown below.




Total mass of the car is 1400kg. If the car experiences the average resistive force 530N during the travel, determine the following

(i) Work done against the gravitational force in a 4 km drive.

(ii) The required minimum power output of the engine to move the car for 4 km.

➢ **BIOLOGY 12**

Chemical analogues that mimic the structure of nucleotides incorporated into DNA and prevent DNA polymerase from building a complementary strand during DNA replication.

Explain why this is an effective method in treating the growth of cancer cells? Explain side effects of this method.

Answer key
17-9 next issue
☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj
KEEN TUTORING CENTRE

### Answer Key : 17-8

➢ **PHYSICS 11**


The piano string will oscillate not only in its fundamental mode at (110Hz) when tuned, but also in its second harmony mode (220Hz)) when its tuned.

Therefore with the string somewhat out of tune , the frequency of its second harmonic will beat the 220Hz of the tuning fork.


➢ **PHYSICS 12**

$L = \lambda / 4\, n_2 = 99.6\text{nm}$

➢ **ORGANIC CHEMISTRY 12**




Or use PCC/ $CH_2Cl_2$ propanal be a only product




➢ **CALCULUS 12**

(i) $\lim_{x\to 0}\frac{ax^2+bx+c}{cx^2+bx+a}$ ans: c/a

(ii) $\lim_{h\to -4}\left(\frac{\frac{1}{4}+\frac{1}{h}}{4+h}\right)$ ans $\frac{1}{16}$:

(iii) $\lim_{x\to 1}\frac{x^6-1}{x^{10}-1}$ ans: 1/12

Ajax
CREMATORIUM & VISITATION CENTRE INC.
Crematorium Operated by Park Lawn Corp.

# Now Open in Ajax


## New Crematorium / Visitation Centre



**Serving our Community at:**
**384 Finley Avenue Ajax, ON L1S 2E3**
**Tel: 289-372-3300 / *info@acvc.info***

## பார்வைக்கு வைக்கும் இடமும் தகனம் செய்யும் இடமும் ஒரே இடத்தில் அமைந்துள்ளது

- 500 பேர்வரை அமரக்கூடிய விசாலமான சகல வசதிகளுடன் கூடிய மண்டபம்.
- ஒரே இடத்தில் குறைந்த செலவுடன் நிறைந்த மன திருப்தியுடன் உங்களது அன்புக்குரியவரின் இறுதிக்கிரிகைகளை உங்களது சமய முறைப்படி நிறைவேற்றலாம்.
- தகனக்கிரிகை ஞாயிற்றுக் கிழமைகளிலும் நிறைவேற்றலாம்.
- 250 ற்கு மேற்பட்ட வாகனத்தரிப்பிட வசதி.
- வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.



# HomeLife Nationa

**April 27, 28 , 2017 அன்று Fallsview Cas**

**சிறப்பு நிகழ்வில் Homel**










## OUR AWARDS in HomeLife Canada

- Top Sales Rep.award in Ontario
- Top 8th office award Nationwide
- Top 2nd Sales Rep. award
- Top 9th Sales Rep. award
- Top 14th Sales Rep. award

## WE ARE

- Developer/Builder
  GTA SQUARE - 1st SOUTH ASIAN MALL Developed by us
- #1 Broker for TRIDEL for last 5 years .
- #1 Sales Rep. for CONCORD
- #1 Sales Rep. for TRIDEL



*To Join our Successful Team- P*

**HomeLife/GTA**

# l Award Ceremony

## sino Resort, Niagara Falls இல் நடைபெற்ற
## Life/GTA இன் சாதனை!





















**OUR TEAM**

- More than 150 trusted sales Reps.
- 2 Broker /owners and an experienced Manager to provide the Sales Rep. with the most advanced and up-to-date education and training.

- Office open 7 days • 9:00 am - 9:00 pm
- Over 5,000 Sqft. office
- Conveniently Located in GTA Square Mall

lease Call : **416.321.6969**

**FREE Real Estate Classes Starts Every week**

**Realty Inc. Brokerage***

*Independently Owned & Operated

# உடல்நலனை பார்த்துக்கொள்ளுங்கள் தீபா! தீபா கணவர் மாதவன் உருக்கம்

சந்திப்பு: சிவதாணு

## பிரத்யேக நேர்காணல்



“தமிழ்நாட்டு ஊடகங்கள் என்னிடம் ‘ஒரு சீரியஸ் பேட்டி’ என்று வாங்கிக்கொண்டு சென்று, சிரிப்பு பேட்டியாக வெளியிடுகிறார்கள். நீங்கள் அப்படி செய்ய மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.” தனது மன வேதனையை வருத்தத்தோடு பகிர்ந்துக்கொண்டு பேச ஆரம்பிக்கிறார் மாதவன். தமிழகத்தின் திடீர் பரபரப்பு அரசியல்வாதியும், ஜெயலலிதா அண்ணன் மகளுமான தீபாவின் கணவர். தீபாவிடம் இருந்து பிரிந்து, ‘எம்.ஜி.ஆர். ஜெ. ஜெயலலிதா திமுக’ என்ற புதிய கட்சியை தொடங்கி தன்னையும் தற்போது பரபரப்பாக வைத்துக் கொண்டிருக்கிறார்!

சென்னையில் உள்ள ‘எம்.ஜி.ஆர். ஜெ. ஜெயலலிதா திமுக’ கட்சி அலுவலகத்தில் மாதவனைச் சந்தித்தோம்.

ஏன் இந்தப் புதிய கட்சி?

புரட்சித் தலைவி அம்மா உயிரோடு இருந்தவரை கட்சி ஆரம்பிக்க வேண்டும் என்கிற எண்ணம் கனவில்கூட வந்தது கிடையாது. தேவையும் ஏற்படவில்லை. அம்மா மறைவுக்குப் பின்னர் அதிமுகவில் குழப்பமான சூழ்நிலை நிலவி வருகிறது. தலைவர்கள் பதவி, அதிகாரம், பொறுப்பு இவற்றுக்காக அடித்துக்கொள்கிறார்களே தவிர மக்களைப்பற்றி கவலைப்படவில்லை. இந்நிலையில் அதிமுக தொண்டர்களும் பொதுமக்களும் தினமும் வந்து என்னை சந்தித்து கட்சி ஆரம்பிக்கச் சொல்லி தொடர்ந்து வலியுறுத்தினார்கள். அவர்களின் அன்புக் கட்டளையை ஏற்றுக்கொண்டே கட்சி ஆரம்பித்துள்ளேன்.

ஒரு சமூக ஆர்வலராகவும் மக்களுக்கு நல்லது செய்யலாம். ஆனால், சில விஷயங்களை செய்ய அதிகாரம் தேவை. அதற்காகத்தான் அரசியலில் இறங்கியுள்ளேன். எவ்வளவு சம்பாதிக்கலாம் என்றுதான் பலரும் அரசியலுக்கு வருகிறார்கள். நான் அப்படியல்ல. ஊழலற்ற ஆட்சியை கொடுப்பேன். தோழமையுடன், எளிதில் அணுகக்கூடியவராக இருப்பேன்.

தீபா பேரவையையே கட்சியாக மாற்றி இணைந்து செயல்பட்டிருக்கலாமே?

அந்தப் பேரவையில் எனக்கு எந்த ஒரு பொறுப்பும் இல்லை. பேரவைக்குள் தீபாவின் சகோதரர் மற்றும் நண்பர்கள் தலையீடு அதிகமாக உள்ளது. இன்னொரு பக்கம், தீபா சிறப்பாக செயல்பட்டு பலமான கட்சியாக ஆகி விட்டால் ஆளும்கட்சி, எதிர்கட்சிகளின் வேல்யூ கம்மியாகிவிடும் என்று தீபாவின் புகழை மழுங்கடிக்க சிலரை ஏவி விட்டுள்ளனர். அவர்களும் பேரவைக்குள் புகுந்துள்ளார்கள். இவர்கள் எல்லோரும் செய்வது தவறு என்று உணர்ந்து தீபாவே ஒருநாள் அவர்களை வெளியேற்றுவார். அதுவரை காத்திருக்கிறேன்.

கணவரான உங்கள் பேச்சைக்கூடக் கேட்கமாட்டாரா?

யாரும் யாருக்கும் சொல்லிக் கொடுத்துக் கொண்டே இருக்கக்கூடாது. நாளைக்கு நானே இல்லாமல் போகலாம். அப்போது தீபாவுக்கு யார் சொல்லிக் கொடுப்பார்கள்? அரசியல் என்றால் என்னவென்று தீபா

(தொடர்ச்சி 35ஆம் பக்கம்...)

Registration in Progress
Shirdi Sai School of Canada
We are accepting registration
(Grades 1-4, Junior/ Senior Kindergarten, Summer Camp)
for this brand new school opening soon in scarborough.
To register your interest please go to:
http://shirdisaischoolofcanada.com

# எம்மை...

14ஆம் பக்கத்தொடர்ச்சி

அவ்வலி முதுகிற்கும் பரவக்கூடியது. வாந்தி, வயிற்றுப் பொருமல் காணப்படலாம். கல் அதிகரித்துப் பித்தப்பை குழாயை முழுமை



யாக அடைத்தால் 'செங்கமாரி' என்ற வியாதி ஏற்படலாம் என அறியமுடிகின்றது.

குடல் அடைப்பினாலும் (Intestinal obstruction) கடுமையான வயிற்றுவலி திடீரெனத் தோன்றும். குழந்தைகள், பெரியவர்களிடமும் வெவ்வேறு காரணங்களினாலும் ஏற்படும். அதாவது சிறிது நேரத்திற்குக்கொரு முறை விட்டுவிட்டுவரும் வலியே முக்கிய அறிகுறியாகும். வாந்தி, மலக்கட்டு, மலவாசல் வாயுதடைப்படல் போன்ற நிலைகாணப்படும். இந்நிலை காணப்படும்போது தாமதிக்காமல் வைத்தியசாலைக்கு உடன்சென்று வைத்தியர்களின் பார்வைக்குப்பின் அவர்கள் கூறும் சிகிச்சை செய்ய உறுதிகொள்ள வேண்டும். பெரும்பாலும் அறுவைச் சிகிச்சைதான் மேற்கொள்ளப்படலாம் எனக் கருதுகின்றேன்.

மேலும் சதை அழற்சி, சதையில்லா நாளத்தடை, இரைப்பை, சிறுகுடல் புண்களினால் துவாரமாகுதல், பல்வேறு கிருமித் தொற்றுக்கள் போன்றவற்றினாலும் தாங்கமுடியாத வயிற்று வலி ஏற்படலாம் என்பதை ஞாபகத்தில் வைத்திருப்பது நன்றாகும். எனவே இங்கே கூறியவற்றை முன்கூட்டி அறிந்து கொள்வதினால் பலவழியிலும் எம்மை நாம் காபாற்றிக் கொள்ளலாம் எனக் கருதுகின்றேன்.

# பெப்சி...

20ஆம் பக்கத்தொடர்ச்சி

யாக மறுநாள் தேவைக்குப் பால் வாங்கி வரப் பணித்தார்.

"தலைமைத்துவத்தை வரையறுப்பதும் நல்ல தலைமை கிடைப்பதும் கடினம். ஆனால் மக்களை எந்த எல்லைக்கும் உங்களைப் பின்பற்ற வைக்க முடியும் என்றால், நீங்கள் ஒரு பெரிய தலைவர்." - இந்திரா கிருஷ்ணமூர்த்தி நூயி.

மேல் நிலையை அடைவது ஒரு அமெரிக்கர் அல்லாதவருக்குக் கடினமான பணி. அதிலும் ஒரு பெண்ணாக இருத்தல் அதை விடக் கடினம். எந்த வேலை இடத்திலும் பொது இயல்பான ஒன்றாகவே பார்க்கப்படும் அனைத்து உணர்ச்சி சமூக மற்றும் கலாச்சாரம் சார்ந்த போராட்டங்களையும் அவர் சந்தித்தார். ஒரு பணி புரியும் பெண்ணாக இருப்பது எளிதான பணி அல்ல என்பது இந்திரா நூயிக்கு மிக நன்றாகத் தெரியும். அவர் அண்மையில் ஒரு பேட்டியில் ஒரு பெண் எல்லாம் கிடைத்தது போல் பாசாங்கு செய்தாலும் எல்லாவற்றையும் பெற முடியாது எனக் கூறினார்.

ஆயினும், அவர் ஒரு மனைவி, ஒரு தாய், ஒரு மகள், மற்றும் ஒரு வெற்றிகரமான பணி புரியும் பெண்ணாக அனைத்துக் கோணத்திலும் நிரூபித்துள்ளார். இந்திரா நூயி வேலை இடங்களில் தினமும் போராடும் கணக்கில்லா இளம் பெண்களுக்கு எழுச்சியூட்டும் பெண். ஒரு பெண் அவள் விருப்பத்திற்கு ஏற்றவாறு எதையும் சாதிக்க முடியும் என்று நிரூபித்த ஒரு வெற்றிக் கதை.



இந்திரா நூயி தனது குடும்பத்துடன், கிரீன்விச், கனெக்டிகட், அமெரிக்காவில் வாழ்ந்து வருகிறார். ராஜ் கே நூயியை திருமணம் செய்து இரண்டு மகள்கள் உள்ளனர். அவரின் ஒரு மகள் அவர் கல்வி கற்ற ஜேல் பிசினஸ் ஸ்கூல்லில் கல்வி கற்கிறார். அவர் சைவ உணவு முறையைக் கடைப்பிடிப்பவர்

# தமிழகத்தில்...

இருந்து தனியாக தமிழகத்தை மட்டும் எடுக்கமுடியாது. எனவே, தமிழகம் பட்டியலில் இருக்கும், அவ்வளவுதான். மாநில அரசு விரும்பவில்லை என்றால் மத்திய அரசால் எப்படி அந்தத் திட்டத்தை அமல் செய்யமுடியும்? மக்கள் அரசு மதுபானக் கடைகளைக் கூடத்தான் வேண்டாம்னு சொல்றாங்க. ஆனா, மாநில அரசு திறந்து வைத்திருக்கிறது. அதைப்பற்றி யாரும் பேசவில்லை, போராடவில்லை. இந்நிலையில் பாஜக மேல் மட்டும் விமர்சனங்கள் வைக்கப்படுவது சந்தேகத்தை உருவாக்குகிறது.




TBC Toronto Business College

கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்

படிக்க கொஞ்சம் நேரம் ஒதுக்குங்க கைநிறைய சம்பாதிங்க



JOB READY PROGRAMS

PERSONAL SUPPORT WORKER(PSW)
28 Weeks
Immediate Job Opportunities

ACCOUNTING & PAYROLL ADMIN.
35 Weeks
Jobs available in plenty
Co-op Available Earn good salary

COMPUTERIZED ACCOUNTING
26 Weeks

FOOD SERVICE WORKER (FSW)
12 Weeks

GOVERNMENT GRANT
யார் தகுதி உடையவர்கள் ?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள் Diploma பாடநெறி ஒன்றைக்கற்கலாம்
Tuition Fees,Books,Living Expenses
Day care & Transportation up to $28000 or more

PART TIME COURSES
Windows,Word,Excel,Power Point, Access,QuickBooks,Sage50 Accounting (Simply) & Accpac 2012
Workshops
Food Handler Certification
First Aid & CPR

- 100% Instructor Led Training
- Small Class Sizes
- Student Friendly Environment
- Ample Free Parking
- Placement Assistance
- TTC Accessible
- Instructors with over 15 years of Canadian Experience

416-291-5155 / 416-500-5300
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# இன்னல் நீக்கும் இயற்கை -1



- அகணி -
authorakani@gmail.com


அன்பான விளம்பரம் வாசகர்களே! விளம்பரம் பத்திரிகையில் “நினைவாற்றல்”, “வெகுளாமை”, “அன்புடைமை”, “காலத்தோடு வளரும் கணினிகள்” போன்ற தலைப்புக்களில் தொடர்கட்டுரைகளை எழுதியதோடு இவற்றில் “அன்புடைமை” தவிர்ந்த எல்லாத் தொடர்கட்டுரைகளையும் நூலுருவில் கொண்டு வந்துள்ளேன். “அன்புடைமை” தலைப்பில் எழுதிய தொடர் கட்டுரையும் விரைவில் நூலுருவம் பெறவுள்ளது. இந்த நூற்களின் பிரதிகளை விளம்பரம் பணிமனையில் வாங்கிக் கொள்ளலாம். நான் எழுதி வந்த “வாழ்க்கைப் பயணங்கள்” என்ற தலைப்பைக் கொண்ட தொடர்கதையும் (நாவலும்) நிறைவு பெற்றதையடுத்து எனது அடுத்த முயற்சியாக “இன்னல் நீக்கும் இயற்கை” என்ற தலைப்பில் ஓர் அறிவியல் தொடர்கட்டுரையை எழுத விழைகின்றேன். இதற்கான வாய்ப்பை நல்கிய விளம்பரம் பத்திரிகை நிறுவனத்தினருக்கு நன்றி கூறிக்கொண்டு இறைவணக்கத்துடன் கட்டுரையை ஆரம்பிக்கின்றேன். வழமைபோன்று இந்தத் தொடர்கட்டுரையும் வாசகர்களாகிய உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகின்றேன். உங்கள் கருத்துக்களையும் தயவுசெய்து தெரிவியுங்கள்.

மனித வாழ்க்கையில் இன்னல் தரும் முக்கிய காரணிகளாக உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் ஏற்படும் நோய்கள் உள்ளன. இத்தகைய நோய்கள் வராமல் தடுப்பதன் மூலமும், நோய்களிலிருந்து விரைவில் குணமாதல் மூலமும் நமக்கு ஏற்படும் இன்னல்களை நீக்கியும், குறைந்த பட்சமாகக் குறைத்தும் கொள்ளலாம். நாம் வாழும் உலகத்தில் மனிதருக்குப் பயன்தரும் இயற்கையான வழிமுறைகளை அறிந்து உரிய முறையில் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் நமக்கு ஏற்படும் பல இன்னல்களை நீக்கியும், குறைத்தும் கொள்ளலாம் என்ற காரணத்தால் இயற்கை எனும் பெரும் செல்வம் பற்றி விரிவாக ஆராய்ந்து கொள்ள விழைகின்றேன். இந்த முயற்சியில் இயற்கை சார்ந்த பல்வேறு துறைகள் சார்ந்த கருத்துக்களை ஆய்ந்து கொள்வதோடு துறைசார் முரண்பாடுகளுக்கிடையில் சமரசம் காணவும் நான் விரும்புகின்றேன்.

நாங்கள் வாழும் பூமியை ஞாலம், உலகம் என்றெல்லாம் பல பெயர்களில் அழைக்கின்றார்கள். பூமி ஓரச்சில் பிரபஞ்சத்தில் தொங்குவதால் ஞாலம் என்றும், சுற்றிக்கொண்டு உலா வருவதால் உலகம் என்றும் அழைக்கப்படுவதாகப் பண்டைத் தமிழ் நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. விஞ்ஞானத்தில் மேலைத்தேச தத்துவ விஞ்ஞானிகளும், தத்துவஞானிகளும் கண்டுபிடித்த விளக்கங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே தமிழறிஞர்களால் அறியப்பட்டு இருந்ததை தொல்காப்பியம், பரிபாடல், புறநானூறு, பட்டினத்துப் பாலை போன்ற பண்டைத்தமிழ் படைப்புக்களில் வரும் பாடல்கள் மூலமாக அறிய முடிகின்றது. விஞ்ஞான ரீதியில் உலகம் தோன்றியது பற்றி “அந்த மூன்று நிமிடங்கள்” என்ற தலைப்பில் பேரண்டத்தின் பரிணாம மாற்றத்தைக் கூறும் கதையை மிகவும் அழகாக எழுத்தாளர் கனி அவர்கள் விளம்பரம் பத்திரிகையில் எழுதிவருகின்றார். அவரின் கட்டுரையை நீங்கள் வாசித்து வருவீர்கள் என நம்புகின்றேன். அந்தக் கட்டுரை மூலம் நீங்கள் அறிந்து கொள்ளும் பல விடயங்கள் இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் சுருக்கமாகச் சொல்லப்படுகின்ற விடயங்களுடன் தொடர்பு கொண்டதாகவும், விரிவான அறிவியல் விளக்கமாகவும் இருக்கும் என்று நினைக்கின்றேன்.

வானியல் (Astronomy) ஆய்வுகளின்படி அண்டத்தின் வயது 13.73 பில்லியன் ஆண்டுகள் என்று தெரியவருகின்றது. அண்டம் என்பது ஒரு புள்ளியில் இருந்து ஆரம்பித்து விரிந்து செல்கிறது என்றும் சொல்லப்படுகின்றது. அண்டம் பற்றிப் பல்வேறு ஆய்வுகள், கண்டுபிடிப்புக்கள் வெளிவருகின்றன. அடிப்படையில் அனைத்தும் இயற்கையாக நடைபெற்ற மாற்றங்களாகவே காணமுடிகின்றது. மிகவும் பழமை வாய்ந்த அறிவியல் துறையான வானியல் துறையானது விண்பொருட்கள் பற்றியும், தொடர்புடைய இயற்பியல், கணிதவியல் சேர்ந்த துறையாகவும் உள்ளது. இயற்கை அறிவியல் என்பது நம்மைச் சுற்றியுள்ள அண்டம், உலகம் பற்றியது என்பதால் வானியல் இயற்கை அறிவியலின் ஒரு பகுதி என்று கூறலாம். இயற்கை அறிவியலின் ஏனைய கிளைகளாக புவி அறிவியல், இயற்பியல், வேதியியல், உயிரியல் போன்றவற்றைக் கூறலாம்.

இருபதாம் நூற்றாண்டில் உருவான ஐன்ஸ்டீனுடைய பொதுச் சார்புக் கோட்பாடு (Theory of Relativity), அண்டவியற் கொள்




அண்டம் என்ற சொல் உருண்டை வடிவப் பயணம் காரணமாக வந்தது என்றும் அண்டம் என்பது நம்மைச் சுற்றியுள்ள எல்லாவற்றையும் குறிப்பதாகவும் நாங்கள் அறிந்திருக்கின்றோம். அண்டம் என்பது எல்லாவற்றையும் கொண்டிருப்பதால் அவ்வாறு அழைக்கப்பட்டது என்ற கருத்தும் உள்ளது. பூமி, சந்திரன் (அல்லது நிலவு), சூரியன், சூரியனைச் சுற்றியுள்ள கோள்கள், விண்மீன்கள், விண்மீன் குழுக்கள் (galaxy) இவற்றைச் சூழ்ந்துள்ள வெட்டவெளி எல்லாம் அண்டத்தில் உள்ளன. இதனையே யுனிவேர்ஸ் (Universe) என்று ஆங்கிலத்திலும், அதன் தமிழாக்கமாகப் பிரபஞ்சம் என்றும் சொல்லப்படுகின்றது. பல அண்டங்கள் உள்ளது என்ற அடிப்படையில் பல்லண்டம், பேரண்டம், அகிலாண்டம் என்ற பதங்களும் வானியலில் பேசப்படுகின்றது.

நான் ஃபேஸ்புக், ட்விட்டரில் எல்லாம் இல்லை. இனிமேல்தான் ஆரம்பிக்கணும். மீம்ஸ் உருவாக்குபவர்கள் என்னால் சந்தோசப்பட்டால் பரவாயில்லை. என்ஜாய் பண்ணிட்டுப் போகட்டும். ஆனால், அரசியல் கட்சிகள் ஆட்களை நியமித்து எங்களை விமர்சிக்க வைப்பதுதான் அதிகமாக இருக்கிறது. அவர்களால் எவ்வளவு நாட்கள் இப்படி பண்ணமுடியும்? விரைவில் மக்களுக்கு என் உண்மையான செயல்பாடு தெரியத்தானே போகிறது.

அதிமுக, திமுக பண பலத்துக்கு முன்னால் உங்களால் அரசியலில் வெற்றி பெற முடியுமா?

நிச்சயமாக. என்னிடம் தொண்டர்கள் பலம் உள்ளது. அரசியலில் காலை வச்சிட்டேன். இனி என்னதான் ஆகுதுன்னு பார்த்துடலாம்.

சசிகலா குடும்பத்தினர் மீதான எதிர்ப்பு உணர்வு காரணமாகத்தான் தீபா அரசியலை எல்லாம் மக்கள் வரவேற்றார்கள். ஆனால், இப்போது எடப்பாடி அணியினரே சசிகலா குடும்பத்தினரை ஒதுக்கி வைத்துவிட்டார்களே. இந்நிலையில் உங்களுக்கெல்லாம் என்ன வரவேற்பு இருக்கும்?

யாரும் யாரையும் ஒதுக்கி வைக்கவும் இல்லை, யாரும் விலகியும் போகவும் இல்லை. சுத்த நாடகம். எல்லாரும் ஒன்றாகத்தான் இருக்கிறார்கள். உண்மையில் நான்தான் புரட்சித்தலைவி அம்மாவின் வாரிசு. அம்மாவுக்கு தீபா மறுமகள். நான் தீபாவின் கணவர். அதன்படி பார்த்தால், உறவுமுறையில் நான்தான் அம்மாவுக்கு மகன். அம்மாவின் வாரிசு. அம்மாவை விரும்புபவர்கள் என்னை ஆதரித்துதான் ஆகவேண்டும். நான் பொய் சொல்லவில்லை. எனக்கு சூதுவாதெல்லாம் தெரியாது. ஓபிஎஸ் மாதிரி நடிக்கத் தெரியாது. யதார்த்தமாகப் பேசுவேன்.

சரி உண்மையில் நீங்கள் யார்? அதாவது, நீங்கள் பிறந்து, வளர்ந்தெல்லாம் எங்கே?

நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் சென்னைதான். எனக்கு இப்போது 43 வயதாகிறது. பி. பி. ஏ படித்துள்ளேன். தொழிலோடு சென்னை தாம்பரம் அருகில் விவசாயமும் செய்து வருகிறேன். என் குடும்பமே அதிமுக குடும்பம்தான். எப்போ ஓட்டுப் போட்டாலும் இரட்டை இலைக்குதான் ஓட்டுப் போடுவோம்.

உங்கள் மனைவி தீபாவிடம் பேசி ஒரு மாதம் ஆகிறது என்கிறீர்கள். அவர்களைப் பார்த்தால் பேச வேண்டிய விஷயங்கள் என்று என்னவெல்லாம் மனதில் வைத்திருக்கிறீர்கள். சுருக்கமாக சொல்ல முடியுமா?

நான் தள்ளி இருந்தாலும் என் மனது எப்போதும் தீபாவை சுற்றியேதான் இருக்கிறது. என்னாச்சு ஏதாச்சுன்னு நினைச்சிக்கிட்டே இருக்கிறது. இப் போதைக்கு தீபாவுக்கு சொல்ல வேண்டியது ஒன்றே ஒன்றுதான்: பாதுகாப்பா இருங்கள். உடல் நலனை நன்றாக பார்த்துக்கொள்ளுங்கள்.

# உணர்வுகளுக்கும்...

33ஆம் பக்கத்தொடர்ச்சி


உண்ண வைக்கின்றது என்று தமது (Rock-eteller university) ஆராய்ச்சியில் நிரூபித்துள்ளார். அவர் தனது ஆராய்ச்சியில் கொற்றிசோல் (Hormon Cortisol neuropeptide )அதிகமாக சுரப்பது மனிதர்கள் பதட்டமாக இருக்கும் போது என்று கண்டுபிடித்துள்ளார். இது எமது மூளையில் neuro eptid சுரக்க காரணமாக இருப்ப தால்எம்மை அளவுக்கதிகமாக மாச்சத்து சாப்பிட தூண்டும் என்றும் நிரூபித்துள்ளார்.

ஒவ்வொரு உணவுகளும் ஒவ்வொரு வகையான உணர்வை நாடும். எந்த வகையான உணவு எந்த உணர்வை நாடும் என்பதை நாம் அடுத்து வரும் கட்டுரையில் பார்க்கலாம்.


## MATH & PHYSICS TUTION

**By a well-qualified and an experienced teacher. For all grades from Gr. 4 to 1st year of university.**

Special classes in advanced functions, calculus & vectors and data management. Classes available at Scarborough & Stouffville.



Contact: 647 340 9490/ 416 732 2228

## To All Sri Lankan Pensioners
## By Ontario Sri Lankan Pensioners Association

The Annual General Meeting of the Ontario Sri Lankan Pensioners Association will be held on Saturday May 6th 2017 commencing from 9:30am and ending at 4pm.

**Venue:** Canada Kandaswamy Temple Banquet Hall at 1380, Birchmount Road, Scarborough, M1P 2E2 (Birchmount Road / Lawrence Avenue E.)

**Time :** 9:30 am to 4:00 pm

All Pensioners whether Members or non Members are welcome.

Refreshments and Lunch will be served to all Participants.

Pensioners with Problems are requested to come with details in writing to enable us to update the Consulate General and the Director Geneneral of Pensions and get suitable remedial measures.

Please remember May 6th and come for the Meeting

R. Ragupathy
Hony. Secretary, OSPA
Email : ragucanada@gmail.com
Tel: 647 996 4360

R. S. Jogendra
President OSPA
x-j-p@hotmail.com
Tel: 647 285 9336

**www.vlambaram.com**
**www.tamilvanakkam.com**

## யோகா சோதிடம்



- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# இரட்டையர் உலகம்



சிந்தனைப்பூக்கள்
எஸ். பத்மநாதன்

## Twins

'குழந்தைப் பாக்கியம் இல்லையே' என்று எந்த வேளையிலும் கவலைப்படும் குடும்பத்தினரை தினமும் சந்திக்கும் வாய்ப்பு கிட்டும் வேளையில் நாமும் கரைந்து போகிறோம். 'என்ன திருமணமாகி இரண்டு மூன்று வருடங்களாச்சு, பிள்ளையொன்றும் இல்லையே' என கிண்டலாக பேசுபவர்களும் உளர். பிள்ளைப்பேற்றை தள்ளிப்போடுபவர்களும் பலர் இருப்பர். மணமாகி ஒவ்வொருவருடமும் பிள்ளைப் பேற்றுக்கு உட்படுபவர்களும் உளர். இதன் மத்தியில் ஒரே தடவையில் இரண்டு, மூன்று, என பிள்ளைகளைப் பெற்றுக் கொண்ட மகராசிகளும் உளர். இதில் இரட்டைக் குழந்தை பெறுபவர்களே அதிகம்.

இரண்டு குழந்தைகள் ஒரே கர்ப்பத்தின் மூலம் பிறப்பதனையே நாம் இரட்டையர் (Twins) என்கிறோம். ஓர் உயிர் தோன்றுவது மிகவும் அதிசியமான ஒரு நிகழ்வாகும். உயிரொன்று தோன்றுவதற்கு தாயின் கருமுட்டையும், தந்தையின் விந்துவும் போதுமானது. அதாவது 20 மில்லியன் விந்துக்களில் ஒரு விந்துவும், தாயின் ஒரு முட்டையும் இணையும்போது உயிர்களை தோற்றுவிக்கும் அதிசயம் நிகழ்கிறது. ஒவ்வொரு கலத்தின் கருவிலும் நிறமூர்த்தங்கள் (Chromosomes) காணப்படுகின்றன.

மனிதகுல பெற்றோர்களிடம் 46 நிறமூர்த்தங்கள் உள்ளன. இதில் 23 தாயிடமிருந்தும் 23 தந்தை யிடமிருந்தும் பெறப்படுகின்றன. இந்த நிறமூர்த்தங்களில்தான் ஒருவரது பரம்பரை அலகுகள் (Genes) காணப்படுகின்றன. இவ் அலகுகளில் DNA (Deoxyribo Nucl eic Acid) எனப்படும் மூலக் கூறுகள் உள் ளன. பரம்பரை அலகுகள் உருப்பெற்று இறுதியில் மனித உயிருடன் தொடர்கிறது. 23
சோடி நிறமூர்த்தங்கள் உடலை உருவாக்கினாலும் 23வது சோடியே ஆண் பெண் வடிவத்தினை தீர்மானிக்கின்றது. தாயின் நிற மூர்த்தம் X எனின் தகப்பனின் நிறமூர்த்த மும் X எனின் இறுதிவடிவம் பெண்ணாகிறது. ஆனால் அது XY எனில் ஆணாகின்றது.

இவ்வேளையில் பரம்பரை அலகும் தீர்மானிக்கப்பட்டு விடுகிறது. எனவே கருவினை உருவாக்குகின்ற பெற்றோர்களின் விசேட தன்மைகள் நிறமூர்த்தங்களுடனும் அதிலுள்ள பரம்பரை அலகுடனும் நெருங்கிய தொடர்புபடுகின்றன.

சில பெற்றோர்களுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன. உயிர் உருவாகுவதற்கு காரணமாக உள்ள கருமுட்டைகள் (Fertilized Eggs) இரண்டு ஒரேவேளையில் பக்குவமடைந்து வளர்கின்ற நிலையில் ஒரே நேரத்தில் இரண்டு சிசுக்கள் உருவாகலாம். இவர்களை (Dizygotic) ஒவ்வா இரட்டையர் (Fraternal Twins) என்பர். இவர்கள் ஒரு சோடியான நிலையில் ஆண், ஆண் அல்லது பெண், பெண் அல்லது ஆண் பெண்ணாய் பிறக்கலாம். ஒரே நேரத்தில் தனித்தனியான விந்துவில் இரு முட்டைகளில் உருவாகிய இவர்கள் ஒரு பெற்றோரின் இரு குழந்தைகளாவது இருப்பர்.



மேற்கூறிய முறையினின்றும் வேறுபட்டு கருக்கட்டிய ஒரு முட்டையானது பிளவடைந்து இரு தனிக்கலங்களாகப் பிரியலாம். ஒரே கருவிலிருந்து உற்பத்தியானபடியால் இவர்கள் கருவிரட்டையர் அல்லது ஒத்த இரட்டையர் (Identical Twins) அல்லது Monozygotic எனலாம். இவர்கள் ஒரே நிறமூர்த்தங்கள் உள்ளவர்களாகையால் ஒரே பரம்பரை அலகினையே கொண்டிருப்பர். உடலமைப்பு, நுண்மதி, நோய்த்தொடர்பு போன்றவற்றை சமமாக பெறக்கூடியவர்கள் இவர்கள். இவர்கள் ஆண்சோடிகளாவோ அல்லது பெண்சோடிகளாகவோ பிறக்கின்றனர்.

இரட்டையர்களை ஏற்கனவே கூறப்பட்டபடி ஒவ்வா இரட்டையர் 'Fraternal Twins' என்பதனை dizygotic எனவும் ஒத்த இரட்டையர்களை (Identical Twins) Monozygotic எனவும் அழைக்கலாம். இன்றைய உலகசூழலில் ஆபிரிக்காவின் தென்மேற்கு, வடமத்திய நைஜீரியா, தெற்குமத்திய பெனின் உள்ளடக்கிய ஜொருபாலாந்து (Yorubaland) எனப்படும் மேற்கு ஆபிரிக்கா (Yoruba) பகுதியே இரட்டையர் அதிகமாக உள்ள பகுதியாகக் கணிக்கப்பட்டுள்ளது. இங்கு 1000 பேருக்கு 100 பேர் இரட்டையர்களாவர். இவர்கள் குறிப்பிடக்கூடிய கிழங்கு (Yam) வகைகளை (Monocots), உண்பதால் அவர்களது கருப்பைகள் (Ovaries) கூடுதலான முட்டைகளை உற்பத்தி செய்கின்றன எனவும் இதனாலேயே அதிகமாக இரட்டைக் கருவுக்கு ஆளாகின்றனர் எனவும் கருதப்படுகிறது. அடுத்து கூடியதாக மத்திய ஆபிரிக்கா உள்ளது. இலத்தீன் அமெரிக்கா, தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகள் குறைந்த அளவு இரட்டையர் உள்ள பகுதிகளாகும். இங்கு 1000 பிறப்புகளில் 6-9 பேர் மட்டுமே இரட்டையர்களாவர். வடஅமெரிக்கா, ஐரோப்பா இடைப்பட்ட இரட்டையர்கள் உள்ள நாடுகளாக உள.

இங்கு ஆயிரம் பிறப்பு க்களில் 9-16 பேர் இரட்டையர்களாவர். அத்துடன் மிக அருமையாக, மூன்று பிள்ளைகள் (Triplets), நான்கு பிள்ளைகள் (Qua druplets), ஐந்து பிள்ளைகள் (Quintuplets), ஆறு பிள்ளைகள் (Sextuplets) எனப் பல குழந்தைகளை ஒன்றாகப் பெற்ற தாய்மார்களும் உளர். அமெரிக்காவில் 1980-2009 ஆண்டுக்குள் 76 வீதமான இரட்டையர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அதாவது 1000 பிறப்புக்களில் 18.9 - 33.3 பேர் இரட்டையர்களாவர். எனினும் ஆபிரிக்காவின் Yoruba இப்போதும் முதலாவது நாடாக உளது.

ஒவ்வா இரட்டையர்கள் பெண்ணும் பெண்ணுமாக அல்லது ஆணும் ஆணுமாகப் பிறந்தாலும் ஆண்பெண் (Fraternal) சேர்ந்து பிறப்பதே அதிகமாகும். அதாவது 50 வீதமானவர்கள் இப்படியான இரட்டையர்களாவர். அதைவிட ஆண்-ஆண் அல்லது பெண்-பெண் (Identical) இரட்டையர்களும் உளர். இது Dizygotic எனப்படும். ஒவ்வா இரட்டையர்கள் உருவாகும்போது இரண்டு கருக்கட்டும் முட்டைகள் ஒரே நேரத்தில் கருப்பையில் தங்கிவிடலாம். இரண்டு முட்டைகளும் தனித்தனியாக வேறுவேறு விந்துக் கலங்களால் உருவாகின்றன. இரண்டு கரு முட்டைகள் Zygoticகளை உருவாக்கிவிடுகிறது. இவர்கள் வேறுவேறு நிறமூர்த்தங்களாக இருக்கலாம். வயது சற்று அதிகமானவர்களுக்கே இவ்வாறான இரட்டையர்கள் பிறக்கின்றனர்.

Monozygotic (Identical Twins) எனப்ப டும் ஒத்த இரட்டையர்கள் ஒரு தனியான முட்டை கருக்கட்டுதல் ஏற்பட்டு ஒரு Zygo tic மூலம் தனித்தனியான இரண்டு கரு முளை (Embryos) களை ஏற்படுத்தும் போது உருவாகுவர். ஒரே மரபுதன்மைகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து கொள்ளும். இவ்வகையான பிள்ளைகள் உலகில் 1000 க்கு 3 பேர் என்ற வீதமாக உள்ளனர். ஆனால் ஜப்பானில் ஒவ்வா இரட்டையர் (Dizygotic) 1000க்கு 6 பேர் என்ற வீதாசாரத்தில் உள்ளனர். இவ்வாறு இருபாலனது இணைவுப்பொருள் அல்லது கருமுளை (Embryo) பிரிவதற்குரிய காரணம் தெரியவில்லை. ஒத்த இரட்டையர்களின் கைவிரல் அடையாளம் ஒன்றாக இருப்பதில்லை. சில இரட்டையர்கள் ஒரே நச்சுக்கொடி (Placentia) உடையவர்களாவர்.


சில இனக்குழுக்களில் இவ்வகை இரட்டைப் பிள்ளைகள் உருவாகுவதில் வேறுபாடு உண்டு. இதில் முதலில் Yoruba எனப்படும் கறுப்பு இனத்தவருக்கு கூடுதலான இரட்டையர் பிறக்கின்றனர். இதேபோல் பிரேசிலில் உள்ள Linhas de pedro இடத்தில் 5 பேரில் ஒருவருக்கு இரட்டையர் பிறக்கின்றனர். அத்துடன் ஆபிரிக்காவில் உள்ள நைஜீரியாவில் Igbo-ora, இந்தியாவின் கேரளத்தில் உள்ள Kondajji, உத்தரப்பிரதேசத்திலுள்ள Mohammadpur Umri ஆகிய இடங்களும் இன அடிப்படையில் அதிக இரட்டையர் உளர்.

சிலர் குழந்தை உருவாகுவதற்கான பல மருந்துகள் (Fertility Drugs) பாவிக்கின்றனர். இதுவும் தாய்மார்களது சினைமுட்டைகளை அதிகம் தோற்றுவிக்கிறது. இதனால் பல பிள்ளைகள் உருவாக வாய்ப்புள்ளது. உலக அடிப்படையில் ஒத்த இரட்டையர்களது வீதம் 333 க்கு ஒருவர் என்ற நிலையில் உள்ளது.


ஒவ்வா இரட்டையர் (Dizygotic) வீதம் மேற்கு ஆபிரிக்காவில் அதிகம் என்பதுடன் இத்தகைய தாய்மார் 30-40 வயதினர், உயரமும் நிறையும் கூடியவர்கள், ஏற்கனவே பல தடவை கருவுற்றவர்கள். இதனால் இவர்களது கருக்கள் இருவேறு தனிக்கலங்களாக, தனியான நச்சு கொடியுள்ளவர்களாக உளர். ஒட்டிப்பிறக்கும் (Conjoined Twins) பிள்ளைகளும் உளர். ஒத்த இரட்டையர் 14 நாட்களுக்குள் இணைவு பெறர். ஆனால் 14 நாட்களுக்கு அப்பால் கருமுளை விரத்தி ஏற்பட்டால் இணைவுள்ளவர்களாவர். கருப்பையில் உள்ள வேறுவேறு சூழ்நிலைகளே இதனை தீர்மானிக்கும். இச்சூழ்நிலையில் ஒட்டிப்பிறக்கும் நிலை ஏற்படும்.

எவ்வளவு நேரஇடைவெளியில் இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன எனவும் ஆராயப்பட்டது. ஜேர்மனியில் 15 வருடங்கள் செய்யப்பட்ட ஆய்வு மூலம் 8220 இரட்டைப் பிள்ளைகள் பெற்ற தாய்மார்கள் மீது ஆய்வுகள் செய்யப்பட்டன. Haase என்ற இடத்தில் ஆய்வுமூலம் முதல் 15 நிமிடங்களுக்குள் 75.8 வீதம் இரட்டையர் பிறந்துள்ளனர். 16-30 நிமிடத்துள் 16.4 வீதத்தினரும், 31-45 நிமிடங்களில் 4.3 வீதத்தினரும் 46-60 நிமிடத்தில் 1.7 வீதத்தினரும் பிறந்துள்ளனர். 60 நிமிடத்திற்கு மேல் 1.8 வீதத்தினர் பிறந்துள்ளனர்.

தொடர்ச்சி 38ஆம் பக்கம்...)


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# எதிர்பார்த்த வரம்



மீரா - ஜேர்மனி

"அம்மா ரஜீவனை நான் சொன்ன மாதிரி விமான நிலையம்வரை சென்று வழியனுப்பி வைத்தீர்களா? சந்தோஷமாகவா இருந்தார்? விமானப் பணிப்பெண்ணிடம் அவரை கவனிக்கும்படி கூறினீங்களா?" பிரியா அடுக்கிக் கொண்டே போனாள். "பிரியா, நீ சொன்னமாதிரி நானும் அப்பாவும் போய் வழியனுப்பி வைத்தோம். ஆனா விமானப் பணிப்பெண்ணிடம் சொல்ல வேண்டாம் என்று சொன்னாரம்மா, அதால நாங்களும் வற்புறுத்தவில்லை. பிரியா நான் சொல்றத நீ கேட்கமாட்டன் என்கிறாய். உன்ட வடிவுக்கும் படிப்புக்கும் அதுவும் இப்ப கை நிறைய சம்பளம் வாங்குறாய் வேற. உன்னை நினைச்சா தான் எங்களுக்கு ஒரே கவலையாக இருக்கு. என்ன செய்றது. உன்ட பிடிவாதத்த மாற்ற ஏலாம இருக்கு" அம்மா பெருமூச்சுடன் தொலைபேசியை துண்டித்தாள்.

பிரியாவிற்கு உற்சாகம் தொற்றிக் கொண்டது. நேரத்தை பார்த்தாள். "இன்னும் 10 மணித்தியாலத்தில், என் ரஜீவனை பார்க்கப் போகிறேன்". அவள் மனம் துள்ளிக் குதித்தது. "எத்தனை வருஷம் காத்திருக்க வேண்டியதாகப் போய் விட்டது? அதவிட எத்தனை வருட காதல் இது?. பிரியாவிற்கு கொஞ்சம் பெருமை யாகவும் இருந்தது. அவள் அறிய பலரது பள்ளிக்கூட காதல், காதல் தோல்வியில் முடிந்து இப்பொழுது வேற வேற துணைகளை தேர்ந்தெடுத்து கலியாணம் செய்து பிள்ளை குட்டிகளுடன் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். ஆனால் பிரியா, ரஜீவனின் காதல் இத்தனை வருடங்கள் சென்றாலும் எவ்வளவு திடமாக இருந்து இன்று கொஞ்சக் கால பிரிவிற்கு பிறகு சந்திக்கப் போகிறார்கள். பிரியா மகிழ்ச்சியுடன் சிரித்துக் கொண்டாள்.

பிரியா 2008ல் தன் சித்தியின் அழைப்பின் பேரில் லண்டன் நகர் வந்தவள். அங்கேயே தங்கி தன் பல்கலைகழக படிப்பை முடித்தாள். ரஜீவனை விட்டுக் கிளம்புவதே அவளுக்கு மிகவும் கடினமாக இருந்தது. என்றாலும் தான் போய் படித்துக் கொண்டே ரஜீவனை தன்னுடன் இணைத்துக் கொள்வது என்ற முடிவுடன் கண்ணீருடன் லண்டன் நகர் வந்திறங்கினாள். தன் இதயத்தை அங்கே ரஜீவனுடன் விட்டு வந்ததினால் ஒவ்வொரு நாளையும் மிகுந்த துன்பத்துடனே கழித்தாள். பிரிவுத் துயரை மேலும் கூட்டும் விதமாக அங்கு தாயகத்தில் இவள் இங்குவந்த ஒரு சில மாதங்களிலேயே வன்னியில் போர் வெடித்துக் குண்டு வீச்சுகளிலும் ஷெல் தாக்குதலிலும் பல அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். இவள் குடும்பம் நல்ல வேளை அந்நேரம் கொழும்பில் இருந்தமை யினால் தப்பினார்கள். ஆனால் அவள் ஆருயிர் ரஜீவன் மட்டும் அக்கொடுமையான போரின் மத்தியில் அகப்பட்டுக் கொண்டான். இனப்படுகொலை முடிந்து பலமாதங்களாகியும் ரஜீவன் உயிருடன் இருக்கிறானா என்று கூடத் தெரியாது மிகவும் துன்பப்பட்டவள் பிரியா. எத்தனையோ மாதங்களாக தன் தூக்கம் உணவு என்பவற்றை எல்லாம் மறந்து கணினியே கதியாகக் கிடந்தாள்.



தொலைபேசி அழைப்புகளை இலங்கைக்கு ஏற்படுத்தி அவன் பற்றிய விபரம் அறிய துடியாய் துடித்தாள். எப்படியோ 6 மாதங்களுக்கு பின்னரே அவளால் ரஜீவன் உயிரோடு இருக்கிறான் என்ற செய்தியை அறிய முடிந்தது. அன்றிலிருந்து அவனை நேரில் சந்திக்கப் போகும் அந்த தருணத்தை எதிர் பார்த்து ஒவ்வொரு நாளும் காத்துக் கொண்டிருந்தாள். இன்று அவள் எதிர் பார்ப்பு, கனவு எல்லாம் நனவாக போகப் போகிறது.

பிரியா விமானநிலையத்தில் இதயம் படபடக்க பயணிகள் வெளிவரும் கதவையே பார்த்துகொண்டிருந்தாள். பொறுமையின்றி திரும்பி "ரமேஷ் அண்ணா, என்ன அவர இன்னமும் காணேல்ல? முதல்ல அவர தானே வெளியே வர விடுவாங்க. மற்ற பயணிகள் எல்லாம் வரதொடங்கிட்டினம். ஆனால் இவர மட்டும் இன்னம் காணேல்லையே". பக்கத்தில் நின்ற ரமேஷ் பிரியாவை அமைதிபடுத்தும் நோக்கமாக "இஞ்சப் பாரும் பிரியா, ரஜீவன் வருவார். இப்படி ஒரேயடியாக அவசரபடுறீங்களே? பொறுமையா இருங்கோ, அதோ அங்க வாறது ரஜீவன் தானே" என்று சொல்லி முடிப்பதற்குள் பிரியா ரஜீவனிடம் ஓடோடி சென்று விட்டாள்.

பிரியா முகத்தில் நாணத்துடன் ரஜீவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். ரஜீவனும் பிரியாவை பார்த்தவன் அப்படியே மலைத்துப் போனான். அங்கு ஊரிலேயே பிரியா தான் பேரழகி. ஆனாலும் லண்டன் நகர் வந்தபின் அவள் அழகு மென்மேலும் மெருகேறி பார்ப்பவரை அப்படியே திக்கு முக்காட வைத்து விடும் போலிருந்தது. அவனால் கண்களை பிரியாவிடமிருந்து அகற்றவே முடியாது தத்தளித்தான். இவனது தடுமாற்றத்தை கண்ட பிரியாவின் முகம் இன்னமும் சிவந்தது.

ரமேஷ் இவர்கள் அருகில் வந்தான். "என்ன பிரியா பிரிந்தவர்கள் கூடினால் பேசவும் வேண்டுமோ? இப்படி ஒருவரை ஒருவர் எவ்வளவு நேரம் தான் பார்த்து கொண்டு இருக்க போகிறீர்கள்? அங்கே கார் பார்க்கில் எனக்குத் தான் காசு ஏறிக்கொண்டு போகுது. ரஜீவன், பிரியா என்னை அறிமுகப்டுத்திற மாதிரி இல்லை. ஆகவே நானே என்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறேன். நான் ரமேஷ். நீங்கள் வந்து சேரும்வரை உங்கள் பிரியாவை கவனமாக பாதுகாத்து உங்களிடம் ஒப்படைக்க காத்து கொண்டு இருந்தவன். ஆகவே நீங்கள் வந்து விட்டபடியால் என்ட, பணி இன்றோடு இனி முடிந்து விட்டது" ரமேஷ் சிரித்தான்.

"சும்மா போங்க ரமேஷ் அண்ணா. இன்னம் உங்கட பணி முடியவில்லை. இப்ப வாங்கோ, இவர் களைச்சுப் போய் வந்திருக்கிறார். நீங்க கதைச்சு கொண்டு மினக்கெடுத்துறீங்க, வாங்க கெதியாக போவோம் என்று அவசரப்படுத்த" "அடிப் பாவி பிரியா நானா உங்கள மினக்கெடுத் திறன்" என்று முறைக்க இருவருமே வாய் விட்டு சிரிக்க தொடங்கினர். ரஜீவன், இருவரும் சந்தோஷமாக சிரிப்பதை பார்த்து அவர்களின் நெருங்கிய நட்பை கண்டு கொண்டான். ஆனாலும் அவனுக்கு ஏனோ அது பிடிக்கவில்லை.

"ரமேஷ் அண்ணா, பார்த்து ஏற்றுங்கோ" என்று பிரியா அந்தரப்பட்டாள். "பிரியா அதெல்லாம் தேவையில்லை. நானே ஏறிக் கொள்வேன்" என்று விடுக்கென்று பதில் உரைத்துவிட்டு தானாகவே எப்படியோ ஒரு மாதிரி வாகனத்தினுள் ஏறிக்கொண்டான் ரஜீவன். பிரியா கொஞ்சம் திடுக்கிட்டு தான் போனாள். "இல்லை ரஜீவன் என்று பிரியா இழுக்க, "உன் உதவி தேவையில்லை பிரியா, போரின் போது ஷெல் விழுந்து என் இரு கால்களையும் இழந்து பிறகு இன்று வரை ஏதோ சமாளிக்கிறன் தானே. நீயா பக்கத்தில உதவிக்கு இருந்தாய். இதெல்லாம் பெரிசா அலட்டிக்காதே" என்று அவளை சமாளித்தான் ரஜீவன். ரமேஷ் மெல்ல சிரித்துக் கொண்டே காரை செலுத்த தொடங்கினான்.

பிரியா தான் வாழும் அந்தச் சின்ன பிளட்டிலேயே ரஜீவனையும் தங்க ஏற்பாடு செய்திருந்தாள். அவளுக்கோ தன் உயிர் ரஜீவனுக்கு எல்லா வகையிலும் உதவியாக தான் இருக்கவேண்டும் என்பதே அவளது முழு நோக்கமாக இருந்தது. ரஜீவனுக்கு மிகச் சிறந்த மனைவியாக இருந்து அவனை கண்ணும் கருத்துமாக பார்த்து அவனை மகிழ்வித்து தானும் மகிழ்வுற விரும்பினாள். ரமேஷ் லிப்ட்டில் ரஜீவனின் உடமைகளை வைத்துவிட்டு "நான் கிளம்பிறன், காதல் ஜோடிகள் நீங்கள். நிறையப் பேச இருக்கும். சரி வரட்டா" என்று சொல்லி முடிக்கும் முன்னரே பிரியா, "என்ன ரமேஷ் அண்ணா, அப்படியெல்லாம் கிளம்ப ஏலாது. வாங்க வீட்ட, ஏதாவது குடிச்சிட்டுத்தான் போக வேண்டும். இங்கு மறு பேச்சுக்கு இடமில்லை" என்று தன் வீட்டின் தளத்திற்கான இலக்கத்தை அமர்த்திவிட்டு சிரித்தாள்.

ரமேஷ் பிரியாவின் மிக நெருங்கிய நண்பன். அவளை முதன் முதலாக சந்தித்தவுடன் காதல் கொண்டது என்னவோ உண்மை தான். ஆனால் பிரியாவிடம் தன் ஆசையை கூறியதும் அவள் ரஜீவனைப் பற்றிக் கூற உடனே தன் மனதை மாற்றிக்கொண்டு அவளின் உண்மை நண்பனாகவே மாறி விட்டான். பிரியாவிற்கு எல்லாவிதத்திலும் உறுதுணையாக இருக்கவும் முற்பட்டான். அவன் தான் இவர்களின் திருமணதிற்கும் எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தான். பிரியா, ரஜீவன் லண்டன் வந்த முதல் நாளிலிருந்து தன்னுடனே இருக்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தமையினால் நமது கலாச்சாரத்தின்படி திருமணம் செய்யாது ஒரே வீட்டில் தங்கியிருக்க முடியாதாகையாலும் அடுத்த நாளே திருமணத்திற்கு ஏற்பாடாகியிருந்தது. மிக நெருங்கிய ஒரு சில உறவினரே அழைக்கப்பட்டிருந்தனர். ரஜீவனின் கண்டிப்பான வேண்டுகோளும் அதுவாக இருந்ததினால் மிக எளிமையாக அவர்கள் திருமணம் அடுத்த நாளே இனிதே நடந்தேறியது.

பிரியா, ரஜீவன் தாம்பத்திய வாழ்வு இனிதே ஆரம்பித்தது. பிரியா மகிழ்ச்சிக் கடலில் மிதந்து கொண்டிருந்தாள். தான் காதலித்தவனையே எத்தனையோ இடர்களின் பின் மணந்து கொண்டது அவளை வானில் பறக்க வைத்தது. ரஜீவன் கால் நடக்க முடியாததால் சக்கர நாற்காலியிலிருந்த படியே மிக கட்டுப்பட்ட அளவிலேயே அவனால் செயலாற்ற முடிந்தது. பிரியா அவன் தன் குறையை உணராமல் இருக்க வேண்டும் என்று விழுந்து விழுந்து எல்லாவகையிலும் அவனை கவனிக்கத் தொடங்கினாள். ஆனால் இவளின் செயல் ரஜீவனை மேலும் கோபத்தில் ஆழ்த்தத் தொடங்கியது. இவளின் ஒவ்வொரு செய்கையிலும் தன் இயலாமையை உணரத் தொடங்கினான். அந்த இயலாமையே கோபமாக வெளிப்பட மெல்ல மெல்ல ஆரம்பித்தது.

பிரியா ஆசையாக ரஜீவனிடம், "எங்கேயாவது வெளியே போய் வருவோமா? என்று கேட்டாள் என்றால் உடனே இவன் முந்திக் கொண்டு "ஏன் நான் கால் ஏலாத ஆள்

(தொடர்ச்சி 39 ஆம் பக்கம்...)

**ஒன்ராரியோ இலங்கை ஓய்வூதியம் பெறுவோர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம்**

காலம்: சனிக்கிழமை May 06, 2017 காலை 9:00 மணி தொடக்கம்
இடம்: கனடா கந்தசுவாமி கோயில், சிறிய மண்டபம்
1380 Birchmount Road, Scarborough


பல முக்கிய விடயங்கள் ஆராயப்படும். சிற்றுண்டி, மதியபோசனம் வழங்கப்படும்.
இலங்கை ஓய்வூதியம் பெறுவோர் யாவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

யோகேந்திரா 416-285-9336 ரகுபதி - 647-996-4360 சதா - 416-269-8443

# இரட்டையர்...

36ஆம் பக்கத்தொடர்ச்சி

ஒன்றாக இணைந்து பிறந்தவர்களும் பிரச்சினைக்குரியவர்களே. இதனை Siamese




Twins எனவும் அழைப்பர். இது பொது வாக ஒத்த இரட்டையர்களிடையே நிகழ்வா கும். இதன் காரணம் இருபால் இணைவுப் பொருள் 'Zygotic 12 நாட்களுக்குப் பின்பு பிளவுறுவதும், ஒழுங்கான முறையில் கருவுறாமல் இருப்பதும், முற்றாகப் பிளவுபடாமல் இருப்பதுமாகும். 50,000 பேர்களில் ஒருவருக்கு இந்நிலை ஏற்படலாம். இவ்வாறு பிறப்பவர்களை பிரிப்பதற்கு பல சத்திரசிகிச்சை முறைகள் தேவைப்படுகிறது. மூளை, இதயம், ஈரல் என்பவற்றை பிரிப்பது மிகவும் கடினமாகும். 1811 இல் தற்போதைய தாய்லாந்தும் முன்புள்ள சீயம் (Siam) நகரில் Chang and Engbunker என்பவர்கள் பிறந்தமையால் தற்போதும் இவ்வாறு ஒட்டிப் பிறப்பவர்களை 'Siamese Twins' என அழைக்கின்றனர்.
இரட்டைப் பிள்ளைகள் பற்றிய விபரத்தை ஒரு தாய் கர்ப்பமுற்றவேளையில் அறிய முடிகிறது. 8 பேரில் ஒருவருக்கு இவ் இரட்டையினரில் ஒருவர் ஆரம்பநிலையில் மறைந்து போவதாக சந்தேகிக்கப்படுகின்றனர். முதிர்கரு (Fetus) முதலில் இருந்தும் மற்றைய முதிர்கரு கர்ப்ப ஆரம்பத்தில் இல்லாமல் போய்விடலாம். அதாவது இரண்டு முதிர்கருக்கள் இருந்தவேளை இரட்டையர் என சந்தேகப்பட்டாலும் ஒன்று பின்னர் மறைந்து விடுகிறது. இதனை 'Vanishing Twins' எனலாம். Obstetric Ultrasonography பரிசோதனையில் இதனை அறியலாம். இவ்வாறு கரு மறைந்து விடுவ தற்குப் பல காரணங்கள் உள.

சிலவேளைகளில் இரட்டையர்களுக்கான கருவில் ஒன்று பூரணமாக வளர்ச்சியடையாமல் இருக்கலாம். ஒரு கரு ஒரு ஒட்டுண்ணி (Parasite) போல இருக்கலாம். இப்படி நடக்கும் போது சிகிச்சை தேவையாகும். சிலவேளைகளில் கருச்சிதைவு (Miscarriage) ஏற்பட்டால் கூட கர்ப்பம் உண்டாவது தொடரும். ஒரு இரட்டையர்களுக்குரிய கரு பாதிக்கப்பட்டாலும் மற்றையது தொடர்ந்தும் வளர்ச்சியுறும். பொதுவாக இரட்டையர்களாகப் பிறந்தால் நிறைகுறைவாக இருக்கும். இரட்டையர்களில் அரைவாசிப்பேர் 5.5 இறாத்தலுக்கும் குறைவானவர்களே. சராசரி ஒரு ஆரோக்கியகுழந்தை 7-5 8.0 இறாத்தல் நிறையுள்ளதாகும். குறிப்பிட்ட திகதிக்கு முன்பதாக அல்லது வேளையுடன் பிறந்தால் (Premature) மிகவும் எடை குறையும். இவை 3.5 இறாத்தல்களாக இருக்கும். இப்படியான வேளை பார்வை, செவிப்புலன், மனவளர்ச்சி குன்றக் கூடும். தற்போது பல பாதுகாப்புகள் உள.

சிலவேளைகளில் குழந்தைகள் இறந்தும் பிறக்கலாம். (Still Birth), உயிர்க்கரு 20 கிழமையின் பின்பு இறந்து விடலாம். இதில் இரண்டுவகை உளது. முதலாவது (Intrauterine Death) எனப்படும். இது கர்ப்ப முற்றப் பின்பதாக இடம்பெறும். அடுத்த பிரி வான Intrapartum Death எனப்படும். இது பொதுவானது. இது குழந்தை பிறக்கும் போது நிகழ்வது. சிலவேளைகளில் காரணம் தெரிவதில்லை.

இரட்டையர்கள் பற்றிய ஆய்வுகள் உலகெங்கிலும் நடைபெறுகின்றன. மரபணு ஆய்வில் இது முக்கியம். ஒத்த இரட்டையர் ஒவ்வா இரட்டையர் பற்றிய ஆய்வும் உளது. குழந்தை வளர்ச்சியில் மருந்துவம், மரபணு, உளவியல் தன்மைகளா அல்லது சூழல் நிலைமைகளா முக்கியமாகின்ற என்பதனை அறிய வேண்டியுள்ளது. இதற்காக சிறிய வயதிலேயே இரட்டையர்களை பிரித்து வேறு வேறு சூழல்களில் வைத்து வளர்த்து ஆய்கின்றனர். இதில் மரபு அல்லது பரம்பரை அலகுகளாக, சுற்றுசூழலா குழந்தைகளின் அறிவு வளர்ச்சியில் முதன்மை பெறுகின்றன என ஆய்வு செய்யப்படுகின்றன.

இரட்டையர்களது மொழி விருத்தி பற்றியும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. தனியாகப் பிறப்பவர்களை விட இரட்டையர்களது மொழியாற்றல் குறைவுள்ளதாக ஆய்வுகள் உள. இதற்கு சரியான விளக்கம் இல்லை. இரட்டையர்கள் தமக்குள் தனியான முறையில் பேசிக் கொள்வதால் இது நிகழ்வதாக இருக்கலாம். இதனை 'Idioglossia' என கூறுவர். இது இரட்டையர்களிடையே ஏற்படும். இன்னொரு வகையில் 'Cryptophasia' என்ற முறையிலும் இவர்கள் பேசிக்கொள்கிறார்கள் எனப்படுகிறது. அவர்களுக்கு மட்டுமே அது விளங்கும்.
வயிற்றில் இருக்கும் இரட்டையர்களின் அட்டகாசம் சொல்லமுடியாததொன்று! இத்தாலியில் செய்யப்பட்ட ஒலிஅலை பரிசோதனை மூலம் 14 கிழமையில் அவர்கள் தலையுடன் தலையை மோதுவார்கள். 18 கிழமையில் இன்னும் மேலதிகமாக அசைவார்கள். மேலும் நியூயோர்க்கில் செய்யப்பட்ட ஆய்வில் வெண்ணை (Cheese) அல்லது பால் உற்பத்திப் பொருட்களை உண்பவர்கள் கூடுதலாக இரட்டையர்களைப் பெறுவதாகக் கருதப்படுகிறது.



இரட்டையர்கள் பற்றி வெளிவரும் செய்திகள் சுவாரஸ்யமானவை. பிரித்தானியாவின் இரட்டையர்கள் Ena Pugh என்பவரும் Lily Millward என்பவரும் பெண் இரட்டையர் கள். இவ்வருடம் ஜனவரி 4ஆம் திகதி தங் கள் 102வது பிறந்தநாளை கொண்டாடி கின்னஸ் உலக நூலில் இடம்பெற்றுள்ளனர். இரட்டைப்பிள்ளை பெற்றவர்கள் கூடுதலான காலம் வாழ்கிறார்கள். அதேவேளையில் இரட்டையர்களின் பெற்றோர் சற்றுக் கூடியதாக விவாகரத்து பெறுகிறார்களாம்! ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள் மற்றவர்களின் மனதினை அறிந்து கொள்கிறார்களாம்.

# வீரகேசரியின் முன்னாள் பிரதம ஆசிரியர் சிவப்பிரகாசம் இயற்கை எய்தினார்

## வீரகேசரி மூர்த்தி

கொழும்பில் இருந்து வெளிவரும் தமிழ் பத்திரிகைகளில் இன்றுவரை தனக்கென தனி முத்திரை பதித்து வரும் வீரகேசரி பத்திரிகையில் 1966ம் ஆண்டு முதல் 1983ம் ஆண்டுவரை பிரதம ஆசிரியராகப் பணியாற்றிய பெருமைக்குரிய திரு.கந்தசாமி சிவப்பிரகாசம் அவர்கள் தனது 81ஆவது வயதில் கடந்த 14ம் திகதி அமெரிக்காவின் வெர்ஜீனியா நகரில் இயற்கை எய்தினார்.

யாழ்ப்பாணம் மாதகலை பிறப்பிடமாகக் கொண்ட திரு.சிவப்பிரகாசம் அவர்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பட்டதாரி ஆவார். அக்கால கட்டத்தில் பிரதான தமிழ் பத்திரிகைகளாக கொழும்பிலிருந்து வீரகேசரியும், தினகரனும் வெளிவந்து கொண்டிருந்தன. தற்போதைய பிரதமர் திரு.ரணில் விக்கிரமசிங்கவின் தந்தையார் திரு. எஸ்மன்ட் விக்கிரமசிங்க அப்போது தினகரன் பத்திரிகையை வெளியிட்டு வந்த "லேக் ஹவுஸ்" நிறுவனத்தின் நிர்வாகியாக இருந்தார். திரு.சிவப்பிரகாசம் முதலில் தினகரன் பத்திரிகையில் உதவி ஆசிரியராகச் சேர்ந்து பணியாற்றி வந்தார். பின்னர் திரு. எஸ்மன்ட் விக்கிரமசிங்க வீரகேசரி பத்திரிகை நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பினையும் ஏற்றுக் கொண்டார். அதனால் தினகரன் பத்திரிகை அலுவலகத்தில் பணியாற்றிய திரு.க.சிவப்பிரகாசம், திரு.ரி.



சிவப்பிரகாசம், திரு.பாலசந்திரன் ஆகியோரை வீரகேசரி அலுவலகத்தில் பணிபுரிய அழைத்து வந்தார்.

கொழும்பில் வாழ்ந்து வந்த இந்திய வர்த்தகப் பெருமக்களால் 1932ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை சிறந்த தமிழ் பத்திரிகையாக வெளி வந்துகொண்டிருக்கும் வீரகேசரி பத்திரிகையில் ஆரம்ப காலத்தில் இந்தியாவைச் சேர்ந்தோரே பிரதம ஆசிரியர்களாக பணியாற்றினார்கள். எழுபதுகளில் திரு.கே.வி.எஸ்.வாஸ் பிரதம ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். அப்போது திரு.சிவப்பிரகாசம் அவர்கள் உதவிப் பிரதம ஆசிரியராகப் பணியாற்றி ஆசிரிய பீடத்தின் நிர்வாகப் பொறுப்பினையும் பரிபாலித்து வந்தார். பின்னர் 1980ம் ஆண்டு திரு.வாஸ் அவர்கள் தனது பதவியிலிருந்து ஓய்வு பெற்றதும் இவர் பிரதம ஆசிரியரானார். அவரின் கீழ் பணியாற்றிவந்த செய்தி ஆசிரியர் திரு. டேவிட் ராஜ், மற்றும் உதவி ஆசிரியர்கள் நான் உட்பட நிருபர்கள், ஒப்பு நோக்காளர்கள் அனைவரையும் கண்ணியமாகவும், கண்டிப்புடனும் நடத்தினார்.

இவரது திறமான நிர்வாகம், ஆணித்தரமான ஆசிரியத் தலையங்கம், உடனுக்குடன் வெளிவந்த செய்திகள் ஆகியவற்றினால் வீரகேசரி படிப்படியாக வளர்ச்சி அடைந்து இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் பத்திரிகைகளில் தரமான பத்திரிகை என்ற பெயரினையும், புகழையும் பெற்றது. அத்துடன் இவர் மித்திரன் என்ற மாலைப் பத்திரிகையினையும் ஆரம்பித்தார். அப்புகழ் இன்றுவரை தொடர்ந்து நிலைத்து நிற்கின்றது.

ஆசிரியர் திரு.சிவப்பிரகாசம் சிறந்த நிர்வாகியாக இருந்ததோடு ஆணித்தரமான ஆசிரியத் தலையங்கங்களை எழுதும் ஆற்றல் மிக்கவராகத் திகழ்ந்தார். அத்துடன் ஒரு முறை ரஷ்யாவுக்கு பயணம் செய்து திரும்பிய பின்னர் "சிரித்தன செம்மலர்கள்" என்ற தலைப்பில் தனது ரஷ்யப் பயணம் பற்றிய கட்டுரையை வீரகேசரி வார இதழில் தொடர்ச்சியாக எழுதி வந்தார். அதற்கு வாசகர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பு இருந்தது.

ஈழத்தின் பத்திரிகைத்துறை வரலாற்றில் அமரர் சிவப்பிரகாசம் என்றென்றும் புகழுடன் திகழ்வார்.

கனேடியச் செய்திகள் ... இலங்கைச் செய்திகள் ...
சர்வதேசச் செய்திகள் .... விளையாட்டுச் செய்திகள் ...
சினிமா செய்திகள்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com

# எதிர்பார்த்த...

37ஆம் பக்கத்தொடர்ச்சி


என்று உன் நண்பர் வட்டாரத்துக்குக் காட்ட விரும்பிறியோ?" என்று கேலியாகக் கேட்க பிரியா அப்படியே மனம் உடைந்து போவாள். அப்படியிருந்தும் முகம் கோணாது "இல்லை ரஜீவன், பரவாயில்லை இன்னொரு நாள் போவோம்" என்று சமாளிப்பாள். "இன்றைக்கு என்ன சமைச்சு வைச்சுட்டு வேலைக்கு போக? என்று கேட்டால் அவன் உடனே "ஓ, நான் உனக்குப் பாரமாக இருக்கிறேன் என்று சொல்லாம சொல்றியோ?" என்று சினந்து விழுவான். கண்களில் கண்ணீர் முட்ட பிரியா சமைத்து வைத்துவிட்டு அவனிடம் சொல்லிவிட்டு வேலைக்கு கிளம்பி விடுவாள்.

ரஜீவனின் குணமாற்றம் பிரியாவை குழப்பமடைய வைத்தது. ஏன் இவன் இப்படி நடந்துகொள்கிறான்? முன்பு இருவரும் பாடசாலை நாட்களில் காதலிக்கும் பொழுது ரஜீவன் மிகவும் கரிசனையோடு அன்பாக இருப்பான். பிரியா, பிரியா என்று பின்னாலேயே சுற்றுவான். ஒரு நாள் காணாவிட்டாலும் துடி துடித்துப் போவான். இவனது பைத்தியமான அன்பைக் கண் தான் பிரியா மனம் இரங்கி தன் சம்மதத்தை தெரிவித்தவள்.

ரஜீவன் பொதுவாகவே மிக மென்மையான சுபாவம் கொண்டவன் தான். ஆனால் பிரியா மிக துடிதுடிப்பான பெண். எல்லோருடனும் மிக கலகலப்பாக சிரித்துப் பேசுவாள். ஆனாலும் ரஜீவன் மிக அமைதியாக ஆனால் பிரியாவின் மேல் உயிராக இருப்பான். குரலை அவன் முன் ஒருபோதும் உயர்த்தி கதைத்து இவள் கண்டதேயில்லை.

"அப்படி சாதுவான என் ரஜீவன் தன் இழப்பை தாங்கிக்கொள்ள முடியாது வேதனைப்படுகிறான் போலும். தன்னையும் அறியாது அவனது உயிரான என்னிடமே சினந்து கொள்வது என்றால் அவன் நிலையை நான் தான் புரிந்து கொண்டு அதற்கேற்ப நடக்க வேண்டும்" என்று முடிவெடுத்தாள் நல்லவளான பிரியா.

அன்றிலிருந்து ரஜீவனிடம் பிரியா மிகக் கவனமாகவே நடந்து கொண்டாள். தன் சராசரி ஆசைகளைக் கூட அவள் தனக்குள் அடக்கிக்கொண்டாள். அவன் விழி அசைவுக்காக காத்திருப்பதைப் போல் அவன் இம்மெனும் முன் இவள் முந்திக் கொண்டு சேவைகள் செய்தாள். இவள் எப்படித்தான் ரஜீவனை சந்தோஷப்படுத்த முடிந்தாலும் ரஜீவன் தன் இயல்பான நிலைக்கு வர முடியாது பிரியா வின் மேல் குற்றம் கண்டுபிடிப்பதில் குறியாவே இருந்தான். வேண்டாப் பெண்டாட்டி கைப்பட்டால் குற்றம் கால் பட்டால் குற்றமாகவே இவ



ளின் நிலையாகி விட்டது.

பிரியா மிகுந்த வருத்தத்துடன் இவன் கண்டுகொள்ளாத இடமாக தேடிச்சென்று குமுறிக் குமுறி அழுது ஒரு சில நிமிடங்களின் பின் கண்களை துடைத்து விட்டு மீண்டும் ஏக்கத் துடன் ரஜீவன் அருகிலேயே வந்தமர்ந்து அவனது ஏவலுக்காக காத்துக் கொண்டிருந்தாள். ரஜீவன் தன்னை சுற்றி எழுப்பியிருந்த சுவரை உடைத்து அவன் மனதை எள் ளளவும் எட்ட முடியாது தோல்வி கண்டாள் பிரியா. இவளின் நிலை மிகப் பரிதாபமாகவே ஆகி விட்டது. இப்படியே ஒருநாள் வழமை போன்று ரமேஷ் இவர்களின் நலன் விசாரிக்க தொலைபேசியில் அழைத்திருந்தான். பிரியா ரஜீவனின் சுடு சொல்லில் மனம் உடைந்து போயிருந்த நேரம் அது. இவள் எப்படித் தான் மறைத்தாலும் இவளது குரல் ரமேஷ் க்கு காட்டிக்கொடுத்தது. அவனுக்கு ஏற்கனவே பிரியா முன்பு போல் கலகலப் பாக இன்றி ஏதோ மாற்றம் இருப்பதைக் கண்டு கவலை கொண்டிருந்தான். இன்று இவள் குரல் கொஞ்சம் தழு தழுத்தவாறு இருப்பதை கேட்டவுடன் உடனே கொஞ்சமும் தாமதிக்காமல் இவர்கள் வீட்டிற்கே வந்து சேர்ந்தான். அழைப்பு மணியை அழைத்து விட்டு காத்துக் கொண்டிருந்தவன் கதவை திறந்த பிரியாவின் கண்கள் அழுதமையினால் வீங்கி இருப்பதை கவனித்து உடனே கதவை தள்ளிக்கொண்டு உள்ளே வந்து நேரடியாகவே "பிரியா உண்மையை நீ இனியும் மறைக்க முடியாது. உடனே என்ன நடக்குது? என்பதை சொல்றியா? அல்லாட்டி நானே ரஜீவனிடம் கேட்கவா? என்று ரஜீவன் படுக்கை அறை பக்கமாக காலை எடுத்து வைத்தான்.

"ஐயோ ரமேஷ் அண்ணா, வேண்டவே வேண்டாம். அவர் நித்திரை கொள்ளறார். குழப்பாதேங்கோ. நானே சொல்றன் என்று ஒரு பெருமூச்சுடன் அங்கிருந்த கதிரையில் அமர்ந்தாள். ரமேஷ் பக்கத்தில் அமர, "இல்லை அண்ணா, இவர் இன்னமும் கால் வலியில் அவதியுறுகிறார் போல இரு க்கு. ஏனோ என் மேல ஒரே எரிஞ்சு விழுறார். எப்படி அவர சமாளிக்கிறது என்று எனக்குத் தெரியுது இல்லை. ஒரு நல்ல டாக்டர்ட கூட்டி போய் காட்ட வேண்டும். அவர் வருந்திறத பார்க்க எனக்கும் கவ லையாக இருக்கு. நீங்க ஒருக்கா அவரோட கதைச்சு பாருங்கோ. சிலவேளை நீங்க கேட்டா சரி என்று சொல்லுவார்", பிரியா பரிதாபமாக ரமேஷ்யின் முகத்தை நோக்கினாள்.

சிறிது நேரம் பேசாது இருந்த ரமேஷ் பின் "பிரியா நீ இவ்வளவு ரஜீவனுக்காக துடிக்கிறாயே, அவன் ஒரு நிமிடம் உன்னைப் பற்றி யோசிப்பதாக எனக்குத் தெரியவில்லை. தன் குறை தான் பெரிது என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் உன்னுடைய நிலை என்னவாவது? என்னை பொறுத்தமட்டில் ரஜீவன் உனக்கு பொருத்தமே இல்லாதவன். முன்னர் அவன் உன்னிடம் அன்பு கொண்டு இருந்திருக்கலாம். ஆனால் இப்பொழுது அவன் மிக சுயநலத்தோடு நடக்கிற மாதிரித் தான் எனக்கு தெரியுது. அது மட்டுமின்றி அவனில் தாழ்வு மனப்பான்மை வந்து குடிகொண்டு விட்டது. ஆகவே நீ கொஞ்சம் உன்னையும் நினைத்து வாழப் பழகிக்கொள். உன் வாழ்வை வீணாக்காதே. ஒரு நல்ல நண்பனாக சொல்கிறேன்" என்று கிளம்பிச்சென்றான்.

பிரியா அடுத்த நாள் வழமைப்போன்று காலையில் எழுந்து ரஜீவனுக்கு உணவை சமைத்து ஆயத்தமாக வைத்து விட்டு தான் வேலைக்கு கிளம்பும் முன் சொல்லிவிட்டு போக அவன் அறைக்கு சென்றாள். அங்கே ரஜீவன் இல்லை. அவனது கட்டில் வெறுமனே இருந்தது. அங்கிருந்த மேசையில் "பிரியா என்னால் உன்னோட வாழ முடியாது. நீ எனக்கேற்ற மனைவி இல்லை. ஆகவே நான் உன்னை விட்டுப் பிரிகிறேன். என்னை தேடிக்கொண்டு தேவையில்லாமல் பின்னால வராத" என்று மட்டும் ஒரு சிறு குறிப்பு காணப்பட்டது. அதை வாசித்த பிரியாவின் கண்களில் இருந்து கண்ணீர் தாரை தாரையாகக் கொட்டியது.

(நேற்று ரமேஷ் பிரியாவின் உரையாடலை தற்செயலாகக் கேட்டு தான் உயிருக்குயிராக நேசித்த தன் பிரியாவை நிச்சயம் தன்னால் மகிழ்ச்சியாக வைத்திருக்க முடியாது என்பதை ரஜீவன் உணர்ந்து கொண்டான். தன் இழப்பினால் மன அழுத்தத்துக்கு ஆளாகி தான் அதிலிருந்து மீண்டு வர முடியாது தவிப்பதனால் பிரியா வை விட்டுப் பிரிவதே சரியான முடிவு என்றும் தீர்மானம் செய்து கொண்டு மிகுந்த துயருடன் வெளியேறியதை அவன் ஆருயிர் பிரியா அறியவில்லை என்பதே உண்மை)

# எது எப்படியானாலும் செய்!

மனிதர்கள் பெரிதும் நேர்மையற்றவர்கள்.
முன் பின் முரண்பாடானவர்கள்.
சுயநலமுடையவர்கள்.
எது எப்படியானாலும் மன்னித்துவிடு.



நீ பிறர்மீது பாசமாக இருந்தால்,
அது சுயநலம்.
அந்தரங்க உள்நோக்கம் கொண்டது
என எண்ணி
மனிதர்கள் உன்மீது குற்றம் சுமத்துவார்கள்.
எது எப்படியானாலும்
பிறர்மீது பாசமுடையவராக இரு.

நீ வெற்றிக்குரியவனாக இருந்தால்,
போலி நண்பர்களையும்,
உண்மையான எதிரிகளையும் சந்திப்பாய்.
எது எப்படியானாலும் வெற்றிகொள்.

நீ நேர்மையாகவும்
ஒளிவுமறைவும் இல்லாதவனாக இருந்தால், மனிதர்கள் உன்னை ஏமாற்றிவிடலாம்.
எது எப்படியானாலும் நேர்மையானவனாகவும், கள்ளம் கபடமற்றவனாகவும் இரு.

நீ பல வருடங்களாக கட்டி எழுப்பியதை, யாரோ ஒருவர் ஓர் இரவில் அழித்துவிடமுடியும்.
எது எப்படியானாலும் கட்டி எழுப்பு.

நீ மனஅமைதியும் மகிழ்ச்சியும் அடைந்தால், மனிதர்கள் பொறாமைப்படுவார்கள்.
எது எப்படியனாலும் மகிழ்ச்சியாய் இரு.

இன்று நீ செய்யும் நன்மையை நாளை மனிதர்கள் மறந்துவிடுவார்கள்.
எது எப்படியானாலும் நன்மைசெய்.
உன்னிடமுள்ள மிகச் சிறந்ததை இவ்வுலகிற்கு கொடு.
அது என்றுமே போதுமானதாக இல்லாமல் இருக்கலாம்.
எது எப்படியானாலும் நீ பெற்றுக்கொண்டுள்ள
மிகச்சிறந்ததை இவ்வுலகிற்கு கொடு.

**- அன்னை திரேசா**


## வேலை வாய்ப்பு

ரொரொன்ரோவில் இருந்து நடத்திவரும் பத்திரிகை மற்றும் இணையத்தளத்தில் பகுதிநேரமாகத் தொழில் புரிவதற்கு தகுந்தவர் தேவைப்படுகின்றது. தமிழ், ஆங்கிலம் தட்டச்சு, Graphic Design தெரிந்தவர், தமிழ், ஆங்கிலம் சரளமாகப் பேசக்கூடியவர் தங்களது சுயவிபரப் படிவத்தை (Resume)ஐ கீழுள்ள மின்னஞ்சல் (email) இற்கு அனுப்பவும். தெரிவு செய்பவர்கள் மட்டுமே அழைக்கப்படுவர்.

*email: helpwanted.application@hotmail.com*

## நகைச்சுவைத் தொடர் 352 ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழியே.
வட கொரிய (சர்வாதிகார) தலைவர் கிம் ஜாங் அமெரிக்காவுடனான போர் முயற்சி ஒருபுறம், அதைவிட மோசமான செய்தி தன்னைப்போல் ஹெயர் ஸ்ரைல் யாரும் செய்யக்கூடாதென அறிவித்துள்ளார். இதேவேளையில் 2014இல் எல்லோரும் கிம் ஜாங் போல சிகையலங்காரம் செய்யவேண்டும் என சட்டமாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.
முடி சூடுபவர்கள் இத்தனை பிரச்சினைவாதிகளா?



போருக்கு ஒரு நாடு அல்லது பல நாடுகள் தமது லாபம் கருதி உதவுவதும். அதற்கு எதிரான நாடுகள் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு நிவாரணம் பணம் உடை உணவு போன்றவற்றை கொடுத்து உதவுகின்றனர். அவை உரியவர்களுக்கு சென்றடையாதது வேறு கதை. நிவாரண மோசடி வழக்குகள் பதிவுசெய்யப்பட்டவை இன்னும் நிலுவையில் உள்ளன.



மக்கள் கஸ்டப்படுகிறார்கள்.....வேலை இல்லை என இங்கிருந்து இலங்கைக்கு சுற்றுப்பிரயாணம் சென்றுவரும் பலர் நாங்கள் (கனேடியர்கள்...) அங்குள்ள நிலை கண்டு பரிதாபப்படுகின்றனர்.

தாமோதரம் யாழ்ப்பாணத்தை விட்டு வந்தபாடில்லை. உலகண்ணை சில முக்கியமான மருந்து, சாப்பாட்டு சாமான் தட்டுப்பாடு. ஆனால் பீடி சிகரெட் சாராயம் வெளிநாட்டு குடிவகை தாராளமாக வாங்கலாம் என்றுசொன்னது உலகருக்கு குழப்பத்தைக் கொடுத்தது. 80 களில்....90 களில்..வந்தவர்கள் வெளிநாடு சென்றவர்கள் வந்த கடன் தீர...தமது குடும்பம் வாழ 18...20...மணித்தியாலம் ஓய்வின்றி வேலை செய்தனர். காலநிலை மாற்றம், வேலைப்பழுவால் குறைந்த வயதிலேயே இறந்தவர் பலர். பலர் இப்பொழுதும் வேலை செய்துகொண்டுதான் இருக்கின்றனர். அவர்களிடம் எஞ்சியுள்ளது நோயும் மன அழுத்தமும் தான்.



விவசாயிகள் தண்ணீருக்காகப் போராடுகிறார்கள். பொதுமக்கள் விவசாயப் பொருட்களின் விலை உயர்ந்ததெனப் போராடுகிறார்கள். கால்நடைகள் இலை குழை தளை இல்லையே என அழாமல் அழுது கண்ணீர் வடிக்கின்றன.



அ.திமு.க.வினர் தடைசெய்யப்பட்ட இரட்டை இலை சின்னத்தைப்பெற கோடிக்கணக்கான பணத்தை லஞ்சம் கொடுக்க முயற்சித்து தினகரன் டில்லியில் கைது செய்யப்பட்டதாக தமிழக பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளது.



தமிழக அரச அலுவலகங்களில் (சிறையிலிருக்கும்) சசிகலாவின் படங்கள் அகற்றப்பட்டுள்ளன.
ஐபொட் அகிலாண்டேஸ்வரி இப்போ ரொம்ப பிஸி. வட்ஸ்அப் வர-தரின் படங்களை லைக் செய்வது அமெரிக்காவின் போர்க்கப்பல் வடகொரியாவிற்கு எத்தனை கிலோமீற்ரரில் நிக்குது. அத்துடன் இலங்கை இந்திய செய்திகள் அப்டேற்......



செல்லம்மா உங்களுக்கு தெரியுமே? எனத்தொடங்கி... ஜெயில்லை சூசைட் பண்ண விடுவங்களே?... சசிகலா ஜெயலலிதா உயிரோடை இருக்கேக்கை.. தானும் ஜெயலலிதாவும் அதாவது..அம்மாவும் சின்னம்மாவும் வாக்குவாதம், சண்டை போன்றவற்றின் டிவிடி கசெற் வெளிவந்தால்தான் தற்கொலை செய்துவிடுவேன் என அறிக்கை விட்டுள்ளா.......எனும்போதே ஆட்டிலறி அன்னம்மா சொன்னா....நான் அப்ப தொடக்கம் சொன்னனான் உப்பிடி நடக்குமென்று...என்றபடி



10 ஆம்திகதி சித்திரா பௌர்ணமி. அம்மாவுக்கு மோட்ச அரிச்சனை செய்ய கோவிலுக்கு போவதற்கு ஊபர் ராக்சி புக் பண்ண ரெலிபோன் எடுத்தா. யார் இறந்தார் என தெளிவாகத் தெரிந்தால் அதற்குரிய கடமைகளைச்செய்யலாம்.
ஈழ இறுதிப்போரில் இறந்தவர்கள் யார்? கைது செய்யப்பட்டவர்களில் இருப்பவர் யார்? அழிக்கப்பட்டவர், அழிக்கப்படுவர் யார்?

அண்மையில் முள்ளிவாய்க்கால் பகுதியில் மண்டை ஓடுகளும் எலும்புகளும் எலும்புக்கூடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.....
இதற்குப்பதில்?



சில வேளைகளில் உலகமகா யுத்தத்தின்போது இறந்த ஜேர்மன் ஆமியை அந்தக்காலத்தில் எம்மை ஆண்ட ஆங்கிலேயர் கொண்டுவந்து புதைத்ததென கதை விடுவார்களோ?

கரணம் தப்பினால் மரணம் என்பார்கள். அதுவும் அன்று செல்பி எடுப்பது பலரது உயிரைக்குடிக்கிறது. கடந்தவாரம் வீரதீரச்செயல் புரியும் ஒருவர் கட்டடம் கட்டும் பகுதியிலுள்ள பாரம் தூக்கி (கிறெயின்) ஒன்றில் அதிகாலையில் ஏறி இறங்க முடியாமல் தீயணைக்கும் படையினரின் விசேட பிரிவு பாதுகாப்பாக இறக்கியதை சர்வதேச ரீதியில் பார்க்காதவர்கள் இல்லை. கரணம் தப்பினால் மரணம்.
பொலிசார் அவரைக் கைதுசெய்து அவர்மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர்.



நடிகர் வினுச்சக்கரவர்த்தி காலமாகிவிட்டர்.




01. மே தினம் (உலக தொழிலாளர் தினம்)


01. இளம்பிள்ளை வாத தடுப்பு நோய் மருந்து கண்டுபிடிக்கப்பட்டது (1960)

02. 1928 இல் உலகம் முழுவதும் வயது வித்தியாசமின்றி விரும்பிப் பார்க்கும் மிக்கி மவுஸ் எனும் காட்டுன் பாத்திரம் வால்ட் டிஸ்னி அவர்களால் வரையப்பட்டது.




3 சர்வதேச பத்திரிகை சுதந்திர நாள்.

5. மாவீரன் நெப்போலியன் நினைவு தினம். (1821)





4. அனைத்துலக தீயணைக்கும் படையினர் நாள்.

5. சர்வதேச மருத்துவிச்சிகள் நாள்.

8. உலக செஞ்சிலுவை நாள்.




10. சித்திரா பௌர்ணமி (அன்னையரின் பிதிர் தினம்) அன்னையர் இறந்து 1 ஆண்டு முடியும்வரை இவ்விரதம் அனுட்டிப்பதில்லை. நாம் உயிரோடு இருக்கும்போது பூக்கொத்தை தாருங்கள். இறந்தபின் பிறாஸ்ரிக் கலந்த மலர்வளையம் வைப்பதை விட.




11. மகரிசி கவியோகி சுத்தானந்த பாரதியார் (நினைவு தினம்)

12. உலக செவிலியர் நாள்.



# ஆசிரியரைப் போற்றும் நாள்

**மே 09, 2017 ஆசிரியர் தினம்**



அன்போடு மழலைகள் அரவணைத்து அவர்கட்கு
அகரம் முதல் அகேனம் வரை அறியத்தந்து
இன்பமிகு வாழ்வினுக்கோர் இலகுவழி காட்டிவைத்த
இலங்குமுயர் ஆசிரியர் தினம் இன்று

படிப்பறிவு, பகுத்தறிவு, எழுத்தறிவு, எண்அறிவு, தனை
படிப்படியாய் எம்மைப் பயில வைத்தவர்கள்
நிலவு புகழ் பெற்று எம்மை நிமிர்ந்து வாழ வைத்தவர்கள்
நேர்மை மிகு ஆசான்களே ஆசிரியர்

அறியாமை என்னும் இருளில் அகப்பட்டு வாழ்க்கையில்
அவதியுறும் மாணவர்களை, அன்புடன் அரவணைத்து
கல்வி, அறிவுதனை கசடறக்கற்க வைத்த அவர்களை நாம்
கண்டால் கைகூப்பி வணங்கிடுவோம்

பல்நாட்டுக் கலை கலாச்சாரங்களைப் பயிலவைத்து
பண்புடைய பாதையிலே அழைத்துச் சென்று
பூமி சாஸ்திரம், விஞ்ஞான சாஸ்திரம், சரித்திர பாடங்களை
புத்திக்குள் புகுத்தியவர்கள் ஆசிரியர்களே

அறிவாளிகளாய் அதிகாரிகளாய் வைத்தியர்களாய் ஆவதற்கு
அறிவை வளர்த்திட எமக்காக அரும்பாடுபட்டவர்கள்
ஏணியாய் இருந்தெம்மை ஏற்றம்பெறவைத்துத் தாம்
ஏறாமல் இருந்து எமக்குப் பாடம் புகட்டியவர்கள்
ஆசிரியர்களே.



கவிநாதம் பரந்தாமன்


BRAND NEW HOMES FOR SALE
Peterborough $489,900
Bedrooms:2 | Washrooms:2
Beaverton $499,900
Bedrooms:4 | Washrooms:4
Wasaga Beach $389,990
Bedrooms:3 | Washrooms:3
Lindsay $699,000
Bedrooms:3 | Washrooms:2
Georgina $459,900
Bedrooms:3 | Washrooms:3
Oshawa $609,990
Bedrooms:2 | Washrooms:1
மேலும் Lindsay ல் 8 புதிய வீடுகள் விற்பனைக்கு உண்டு.
1st ,2nd Mortgages Available up to 1 Million
A. ANTON JEEVA FRI
Broker
Dir: 416.575.5055
anton.jeeva@gmail.com
www.antonjeeva.com | www.newcondoproject.ca/com
RE/MAX
Dynasty Realty Inc.,
Brokerage Independently Owned And Operated
8 Shadlock Street, Markham, ON L3S 3K9
Bus: 905-471-0002 Fax: 905-471-7441



மகுடம் 2017
மகுடம் 2017

MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS

# JRS AUTO TECH

OPEN 7 DAYS A WEEK
9am-11pm

VISA



- Free Inspection & Diagnostics
- Complete Car & Truck Care
- Licensed Mechanics
- Insurance Work Done
- All Fluid Top Ups & A/C Repairs
- Fuel Injection Service & Muffler/ Turbos
- Courtesy Drop Off & Pick Up Available
- Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash

SENIOR'S SPECIAL
Free Shuttle Available for Seniors

## TIRE SPECIALS



NEW TIRES FROM $99
USED TIRES FROM $49.95

## FREE OIL CHANGE WITH RUST PROOFING

$99 Car
$120 SUV

## BRAKE JOB

STARTING FROM $199

## WATER PUMP TIMING BELT & LABOR

STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans

Castrol

REGULAR OIL CHANGE $29.95
CASTROL OIL CHANGE $39.95
SYNTHETIC OIL CHANGE $49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR $149.95

## TRANSMISSION FLUSH

*Starting From...*
*Imports $74.95*
*Radiator Flush $79.95*
*Domestic $149.95*

## ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS

CHECK

BMW LEXUS

FREE DTC Code Run and Inspection

# 2655 Lawrence Ave. East, Unit 5

(Midland & Lawrence, rear of the building)

CALL SUBAS DIRECT → 416-206-9489

Tel: 416-628-4399

Email: jrsautotech@hotmail.ca

Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech

*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.

designed by panchaldesigns.com 647.294.2963


IP
IP GOLDHOUSE LTD.
Design your dreams with us
MOTHERS DAY SPECIALS
STONE JEWELLERY
$50 Per Gram.
PRE-BOOKING OFFER
நகரின்மத்தியில் தரமுயர்ந்த 22 கரட் தங்கநகைகள்
மிகக் குறைந்த விலையில் கிடைக்கும் ஒரே இடம்
எம்மிடம் நகை வாங்குபவர்களுக்கு ஒரு காதணி இலவசம்!
PLATINUM, ROSE GOLD WHITE GOLD
YELOW GOLD DIAMOND BANDS SPECIALITY BANDS
Design by Print Sonic
I.P SILVERHOUSE
I.P GOLDHOUSE
40 New Delhi Drive Unit 56
Markham ON. L3S 0B5
Tel: 905-554-5890
E-mail: ipsilverhouse@hotmail.com

KOENIG PROPERTY MANAGMENT LTD

We take the stress out of managing your investment property.

416.895.5000 • 1.800.909.7209



வாடகைக்கு...
வாங்க...
விற்க...

Vany Jeganmohan
Realtor/Financial Advisor
Cell: 416.670.7436
vanyjeganmohan@gmail.com
www.vanyhomes.ca
www.vjsfinancial.ca

✓ Life Insurance
✓ Super Visa
✓ Non Medical
✓ RESP

If you get sick or disabled while you are working you will get continuous income.

HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East, Unit 203 Toronto ON M1S 0C2

TOP 100 REALTORS IN CANADA (#68 of 21,000)

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"

Buy / Sell



RE/MAX All-Stars Realty Inc., Brokerage
Independently Owned and Operated

Raj Paramasamy
Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com

வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
NO DOWN PAYMENT? கவலை வேண்டாம்

வீடு மற்றும் வாகனக் காப்புறுதி HOME + AUTO = MORE SAVINGS*

"Call me today for a free home and auto insurance quote"

*Inclusive of all other discounts applies to Allstate's base rates. Terms & conditions apply & may vary region. Rates & discounts subject to change. Trademark used under licence by Allstate Insurance Company.



Allstate. You're in good hands.



Raji Linghan
Cell: 416.817.5060
905.427.2827 Ext:5020
Ajax Agency 15 Westney Road N

we always care at . . .

Bridletowne Dental

Dr. Jeyapalan. BDS., DDS.
(University of Toronto)
Dentist
416 492 3775



Bridletowne Dental
2555 Warden Avenue. Scarborough M1W 2H5
(1 Block South of Finch Ave. East on Warden)

Free Real Estate Class - Call: 416.321.6969



வீடு, வியாபார நிலையம் வாங்க விற்க..
பொன்னம்பலம் மகாலிங்கம்
Sales Representative
Dir: 416.729.0955
arunponmahal@gmail.com
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive #205 Markham ON. L3S 4N8 Tel: 905.201.9977
*Independently owned and operated



அகத்தின் அழகு முகப்பில் தெரியும்.....
உங்கள் அகத்தின் முகவரியை தேட
விசுவாசமான முகவர்.....

VK Kanthasamy
Sales Representative
Cell: 416-726-1698

Let Me find the key to your HoMe!

HomeLife/GTA Realty Inc., Brokerage
Buss: 416-321-6969 Email: vkpromise@gmail.com


## BUY / SELL PROPERTIES IN GTA



**MCCOWAN & HWY 401**
Bedrooms : 3
Washroom : 2
Asking Price: $299,000




**BRAMPTON**
Bedrooms : 4
Washroom : 4
Asking Price: $699,990



**AJAX**
Bedrooms : 4
Washroom : 4
Asking Price: $489,900



**OSHAWA**
Bedrooms : 3
Washroom : 3
Asking Price: $439,900




**PETERBOROUGH**
Asking Price: $899,999
BUILDING + BUSINESS



**BOWMANVILLE**
Bedrooms : 4
Washroom : 3
Asking Price: $479,900

Homes by Natheesh
BUY/ SELL/ RENT/ INVEST with Homes by Natheesh

www.HomesbyNatheesh.ca
info@HomesbyNatheesh.ca

• FREE Home Evaluation
• FREE Home Staging
• FREE Virtual Tour

HomeLife/GTA Realty Inc., Brokerage
Independently Owned & Operated

For all your Real Estate needs...



Natheesh Parameshvaran
SALES REPRESENTATIVE
647.545.8462



A. Anton Jeeva, FRI
(Broker)
Contact: 416.575.5055

RE/MAX Dynasty Realty Inc. Real Estate Brokerage

Specialized in Power Of Sale Homes & New condos
RE/MAX Dynasty Realty Inc., Brokerage*
8 Shadlock St. #7, Markham ON L3S-3K9
Tel: 905.471.0002
Web: www.antonjeeva.com
E-Mail: anton.jeeva@gmail.com
*Independently Owned & Operated

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

## BUYING OR SELLING



வீடு வாங்க விற்க...
Indra Michael Xavier
Sales Representative
Direct: 647-995-6829
Indra.m.xavier@gmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr. Unit 205 Markham ON. L3S 4N8
Tel: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned & Operated